10

# வினாக்கள்...

## பாகம்-10

# விதைகள் - 10

## மு(எ)ன்னுரை:

உலக தோற்றத்திற்கு முன்னதாகவே தன் கிரியைகளையெல்லாம் முடித்துவிட்ட சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு மகிமையுண்டாவதாக. (எபி. 4:3) உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே நமக்கு வெளிப்படுத்தப்பட்ட, ஆனால் சாபத்தால் மறைக்கப்பட்ட, சாத்தானால் மறைபொருளாக்கப்பட்ட இரகசியங்களைத் தொடர்ச்சியாக உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் கிறிஸ்துவுக்குள் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

... உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன்... மத். 13:35. விதைகள் புத்தகங்களை பகுதி 1-ல் இருந்து வரிசைக்கிரமமாக ஜெபத்துடன் வாசித்தீர்களானால் பிரயோஜனமாயிருக்கும். தேவனைப் பற்றி இன்னும் அதிகமதிகமாக அறிந்து கொண்டு, ஆசீர்வாதங்களைப் பெற்று, அவர் சித்தம் செய்யவும் அது உதவியாக இருக்கும்.

“நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். 1 தீமோத். 1:17”

“... உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள். 1 பேது. 3:15.” ஆயத்தமாயிருக்கிறோம்... கேளுங்கள். ஆவியானவர் என்னை நடத்தின மிகச்சரியான பாதையில் நின்று, நிதானித்து, நடந்து கொண்டிருக்கிறேன். அவ்வளவுதான். நான் எல்லாம் கற்றுக்கொண்டேன்

என்று எப்போதுமே நான் நினைத்ததில்லை. கற்றது கையளவு, கல்லாதது கடலளவு என்ற நிலைதான்.

எல்லாம் கற்றுக்கொண்டபிறகுதான் போதிப்பேன் என்றால் ... சாத்தானுக்கு அது வசதியாகப் போய்விடும். சாத்தானின் தொடர் வஞ்சகங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, நீங்கள் யார் என்பதை உங்களுக்கு அடையாளம் காட்டவே இந்த புத்தகங்கள்.

உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள்.
தொடர்பு கொள்ளுங்கள்.

எங்கள் முகவரி:


சகோதரி. லதா டேவிட்
நித்தியர் இயேசு ஊழியங்கள்
5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-23 77 88 9
அலைபேசி: +0-9003456506 & +0-9442466250

Email : sovereignjesus@gmail.com / sovereignjesus@hotmail.com
Web : www.sovereignjesus.com


**Our Address:**


**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91-461-23 77 88 9**
**Mobile: +0-9003456506 & +0-9442466250**

Email : sovereignjesus@gmail.com
sovereignjesus@hotmail.com
Web : www.sovereignjesus.com

## உலக தோற்றத்திற்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்ட ஆராய்ச்சிக்கூடம்:

"நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனா(ளா)னேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். பிலி. 3:12"

உலக தோற்றத்திற்கு முன்னதாகவே தேவன் நமக்காக செய்திருக்கிற காரியங்களையும், இரகசியங்களையும் ஆராய்ந்து வருகிறோம். தேவன் பூமியை பரலோகத்தின் ஒரு விரிவாக்கம் (extension) ஆகத்தான் உருவாக்கினார். மனிதன் வாழ்வதற்காகத்தானே என்று நினைத்து அவர் அதை பரலோகத்தைப் பார்க்கிலும் தரம் குறைந்ததாக உருவாக்கவில்லை. மனிதனை அவர் குறைவாக மதிப்பிடவும் இல்லை, குறைச்சலுள்ளவர்களாக உருவாக்கவும் இல்லை. "தேவன் தம்முடைய சாயலாக (own image) மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனை தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். ஆதி. 1:27"

மனிதனைத் தன் சொந்தப்பிள்ளைகளாக, தன்னைப் போலவே பெற்றெடுத்து, அவர்களை மனுபுத்திரர்கள் என்று அழைத்தார். அதாவது பூமியில் வாழ்கின்ற மண்ணாலான சரீரத்தை உடைய தன்னுடைய பிள்ளைகளாகவே உருவாக்கினார். நம் ஆவியை (உள்ளான மனிதன் என்று வேதம் சொல்லுகிறது) அவரைப் போலவேதான் வடிவமைத்திருக்கிறார். மண்ணான பூமியில் அந்த ஆவி ரூபத்தில் இருக்கிற மனிதனால் வசிக்க முடியாது என்பதால், அந்த ஆவியான மனிதன் தங்குவதற்கு ஏற்றவாறு ஒரு கூடாரத்தை வடிவமைத்தார்... அதுதான் நம்முடைய சரீரம். சினிமாக்களில் காண்பிப்பதுபோல உண்மையில் அதில் எதுவுமே இல்லை, எல்லாமே சாத்தானால் மிகைப்படுத்தப்பட்ட வஞ்சம். உண்மையில் நம் உள்ளான மனிதன் தங்குவதற்கேற்ற ஒரு கூடாரம், அவ்வளவுதான். கூடாரத்தைவிட உள்ளே வசிக்கும் மனிதன் முக்கியம் இல்லையா?

ஆவியான (கண்ணுக்குத் தெரியாத) தேவன், தான் பூமியில் நிலைநிறுத்தியிருக்கும் மனிதர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியதாயிருக்கிறது. அப்படித் தொடர்பு கொண்டால்தான் தேவன் பரலோகத்தை ஆளுகை செய்கிறவண்ணமாக, மனிதன் இந்தப் பூமியை ஆளுகை செய்ய ஏற்ற ஆலோசனைகளை, உதவிகளைக் கொடுக்க முடியும். அதற்காக ஆத்துமா என்ற ஒரு பகுதியை இந்த ஆவி, சரீரம் இரண்டிற்கும் இடையிலாக வைத்து இணைத்தார். ஆவி - ஆத்துமா - சரீரம் என்ற ஒரு அழகான இணைப்பு உருவானது. ஆத்துமா என்பது நம் சிந்தனைப் பகுதி ஆகும். ஆவியான தேவன் தன்னுடைய சித்தத்தை, சிந்தனையாக நம் ஆத்துமாவுக்குள் அனுப்புகிறார். நம் ஆத்துமா அதை நமக்குத் தெரிவிக்கிறது. சரீரம் அதை கிரகித்து, அதற்கேற்றபடி இயங்கி, இந்த பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்கிறது. சரீரம் பூமியில் செய்து முடித்த காரியங்களின் result- ஐ மீண்டும் ஆத்துமா என்ற சிந்தனைப் பகுதியின் (மனம், மனசு, நினைவுப் பகுதி) மூலம் மீண்டும் ஆவிக்குள் அனுப்ப; அது தேவனிடம் போய் சேருகிறது.

ஆதியிலே இப்படிப்பட்டதான ஒரு இயக்கம்தான் ஏதேனில் இருந்தது. ஆதாமும், ஏவாளும் இந்த முறையில்தான் தேவனோடு தொடர்பு கொண்டு, அவரோடு பேசி மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கால கட்டத்தில் பூமி சபிக்கப்படவில்லை, பிசாசும் மனிதனை ஜெயிக்கவில்லை. அதனால் தேவனுடனான தொடர்பு நம் ஆதி பெற்றோருக்கு மிக எளிதாக இருந்தது. தேவனுடைய இரண்டு கைகளையும் இரண்டு பேரும் பிடித்த வண்ணமாக ... சொல்ல முடியாத ஆனந்த குதுகல அனுபவமாயிருந்தது அது. இப்படி என்றென்றுமாக பூமியின் அதன் நிறைவும், அதிலுள்ள குடிகளும் ஆனந்தத்தில் மிதக்க வேண்டும் என்பதே தேவனுடைய திட்டமாயிருந்தது. ஏனென்றால் பரலோகத்தில் நல்லதை தவிர, சந்தோஷத்தைத் தவிர எதுவுமேயில்லை.

## தேவனைப் பார்க்க வேண்டும்:

என்று ஆசைப்படுபவர்கள், கஷ்டப்பட வேண்டியதில்லை. மனிதர்களைக் கூர்ந்து கவனியுங்கள், போதும்! அவர் தன்னைப்போலத்தான் மனிதர்களை உண்டாக்கினார். சாபத்தால் மனிதனிடமிருந்த தேவசாயல் கெடுக்கப்பட்டு போனபோதிலும், அவர்களையும் அறியாமல் சில நேரங்களில், சிலர் பல நேரங்களில் தேவனுடைய குணாதிசயங்களை வெளியிடவே செய்கிறார்கள். தேவனை அறிந்த மக்கள் என்றல்ல,

இயேசுவை ஏற்றுக் கொள்ளாத உலக மக்களிடமும்கூட தேவனுடைய நல்ல குணங்களைப் பார்க்க முடியும்.

மனிதனிடமிருந்து வெளிப்படும் சந்தோஷம், சிரிப்பு, அன்பு, கொடுக்கும் குணம், சுறுசுறுப்பு, எதிர்பார்ப்புகள், ஆசைகள், முன்னேற வேண்டும் என்ற துடிப்பு ... etc., மேலும் அறிவுப்பூர்வமான செயல்கள், மனுக்குலத்தின் அதிவேக நாகரீக முன்னேற்றம், அறிவியல் கண்டுபிடிப்புகள், நிலாவுக்கு மனிதர்களை அனுப்புதல், பூமியைப் போலவே வாழ்வதற்கு வசதியாக எங்கேயாவது கிரகம் இருக்கிறதா என்று ஆராய்தல், அண்டவெளியின் முடிவுவரை ஆராய்ந்து அவருடைய வல்லமையின் இடிமுழக்கத்தை கேட்பது! இப்படி பல காரியங்களில் மனிதன் தேவனை - அதாவது தேவனுடைய இயல்புகளை வெளிப்படுத்துகிறான். விதைப்பது, ஐசுவரியவானாக மாற வேண்டும் என்று முயற்சிப்பது, சகல வசதிகளையுமுடைய ஒரு நல்ல வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, முன்னேறி வெற்றி பெறுவது, உருவாக்கும் வார்த்தைகளைப் பெற்றிருப்பது, முயற்சிகளை விடாதிருப்பது, திருப்தி படாமல் இன்னும் இன்னும் என்று எதற்காகவோ ஏங்கும் நினைவு மண்டலம், சாபத்தோடு எதிர்நீச்சல், எப்படியாவது தனக்கு இந்த பூமியில் கொடுக்கப்பட்டிருக்கும் வாழ்க்கையை வாழ்ந்தே தீருவது என்ற உயிர்ப்போராட்டம்... சொல்லச் சொல்ல நிற்காது.

இவற்றையெல்லாம் நாம் மனித இயல்புகளாக நினைத்துப் பழகிவிட்டோம். காரணம் தேவனிடம் நன்மைக்கேதுவாக செயல்படுகிற இந்த குணாதிசயங்கள் அதிகபட்ச மனிதர்களிடம் தீமைக்கேதுவாக செயல்படுவதைப் பார்த்து இப்படி முடிவெடுத்துவிடுகிறோம். மனிதனிடம் காணப்பட்ட இந்த தேவனுடைய இயல்புகள், சாத்தானின் வார்த்தைகளால் கெடுக்கப்பட்டு, அவனுடைய இயல்புகளாக மாறிப்போன காரியம் தெரிந்திருக்கும். மனிதனின் மீறுதலால் அதுவரை பூமியில் இயங்கிக் கொண்டிருந்த ஆசீர்வாதம் என்ற பிரமாணம், அதனுடைய **negative side** ஆன (எதிர்மறையான) சாபம் என்ற பிரமாணத்தின்படி இயங்க ஆரம்பித்தது. பூமியின் மேல் இருந்த சகல சிருஷ்டிப்பின் மீதும் இந்த சாபம் வெளிப்பட ஆரம்பித்தது. இயற்கைக்கு நோய் பிடித்துக் கொண்டது, அது முற்றியது, சாகும் நிலைமை தீவிரித்தது, தேவபுத்திரராயிருந்த தேவன் இயேசு மனுபுத்திரராக இந்த பூமிக்கு இறங்கி வந்து நம் உயிரைக் காப்பாற்றினார். இல்லாவிட்டால் 2000 வருஷங்களுக்கு முன்னதாகவே இந்த பூமியை அடக்கம் செய்து, அடக்க ஆராதனை நடத்தியிருப்பார்கள்!

என்னதான் சாபம் மனிதனை மேற்கொண்டு, ஆக்கிரமித்து, ஊடுருவி, கிரியைகளை நடப்பித்தாலும், அவனிடம் மறைந்திருக்கும் ஆசீர்வாதமான நல்ல தெய்வ இயல்புகளை அதனால் அழிக்க முடியவில்லை என்பதுதான் உண்மை! ஆசீர்வாதத்திற்கு முன்பாக சாபத்தால் நிற்க முடியவில்லை, தோற்றுப்போனது. சாத்தானுடைய ஆளுகைக்குள் இருந்துகொண்டே தேவனுடைய இயல்புகளை வெளிப்படுத்துகிறான் பாருங்கள் இந்த மனிதன்! **நல்லதுக்குக் காலமில்லை என்ற சாத்தானுடைய வார்த்தைகளை உச்சரிக்காதிருங்கள், நல்லதுக்குத்தான் காலம்... அடித்து, ஆணித்தரமாகச் சொல்லுகிறோம்.**

இப்படியாக தேவனை அறியாத ஜனங்கள் நல்ல குணாதிசயங்களை வெளிப்படுத்தினாலும், அவர்களிடம் இயேசு இல்லாததினால் அவர்கள் நித்தியஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாமல் போகிறது. அதுமட்டுமல்ல தேவனுடைய சித்தப்படியான ஒரு அருமையான வாழ்க்கையை இந்தப் பூமியில் வாழ முடியாமலும் போகிறது. மட்டுமல்ல சாத்தானால் ஏமாற்றப்பட்டு, இதுதான் வாழ்க்கை என்று நினைத்துக் கொண்டு, ஏதோ பேருக்கு வாழ்ந்து முடித்துவிட்டு போய் சேருகிறார்கள். தாங்கள் இந்த பூமியில் பிறந்த நோக்கமே தெரியாமல், வாழ்க்கையின் அர்த்தமும் புரியாமல், இலக்கு தெரியாமல் முடிந்து போன கோடானுகோடி மனிதர்களின் வாழ்க்கை ... சோப்புக்குமிழிகள் போல நுரைத்து அடங்குகிறது. இப்படியொரு அர்த்தமேயில்லாத வாழ்க்கையை வாழ்ந்து முடிப்பதற்காகவா தேவன் மனிதனை தன்னைப்போல உண்டாக்கினார்? நிச்சயமாக இருக்கவே முடியாது. தன்னைப் போல மனிதன் வாழ வேண்டும், தன்னைப்போலவே குறைவில்லாமல் சந்தோஷமாக இருக்க வேண்டும், இன்னொரு பரலோகத்தைத் தன்னைப் போலவே நிர்வாகம் செய்ய வேண்டும் என்றல்லவா உண்டாக்கினார்? சரி, போனது போகட்டும், சத்தியத்தை அறிந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிற நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதுதான் இப்போதைய அவசரக் கேள்வி.

## என்ன செய்யப் போகிறோம் ? :

தேவன் எல்லாவற்றையும் உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே திட்டமிட்டு, அவற்றைத் தன் இருதயத்தில் வைத்து, வார்த்தையினால் அதை வெளிப்படுத்தி, சகலத்தையும் நேர்த்தியாக செய்து முடித்தார். பிறகு பூமியும் அதன் நிறைவும் பிரமாணத்தின்படி இயங்கும்படி விட்டுவிட்டார். முதலில் பூமியின் மீது ஆசீர்வாதம் என்ற பிரமாணம் இயங்கிக் கொண்டிருந்தது. பிறகு சாபம் என்ற பிரமாணம் அதற்கு மேலாக இயங்க ஆரம்பித்தது. இயேசு இந்த சாபத்தை மாற்றி, மீண்டும் ஆசீர்வாதம் என்ற பிரமாணம் இயங்குவதற்கான நடவடிக்கைகளை சிலுவையில் எடுத்தார், நம்மிடம் கொடுத்தார். நாம் பாவம் செய்யும்போதும், தேவனுடைய

சித்தத்திற்கு விரோதமாக செயல்படும்போதும் சாபம் என்ற பிரமாணத்தை இயக்குகிறோம். உடனே கேடான காரியங்கள் பூமியின் மேல் நடக்கின்றன. நல்லகாரியங்களையும், தேவசித்தத்திற்கு இசைவான காரியங்களையும் செய்யும்போது ஆசீர்வாத பிரமாணத்தை இயக்குகிறோம். அப்போது பூமியின் மேல் நன்மையானவைகள் நடைபெறுகின்றன. இரண்டுமே நம் வாயின் வார்த்தைகளினடிப்படையிலேயே நடந்தேறுகின்றன. தேவசித்தம் செய்யும்போது வசனத்தையும், அதோடு இசைந்த வார்த்தைகளையும் பேசுகிறோம். தேவசித்தத்திற்கு புறம்பானதை செய்யும்போது உலகத்தாரின் வார்த்தைகளை எடுத்துப் பேசுகிறோம். நாம் பேசுகிறது எதுவோ அவைகள்தான் இந்த பூமியின் மீது நடக்கிறது என்பதை முன்னமேயே பார்த்தோம்.

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நம் சார்பில் செயல்படுகிறது. நம் வார்த்தைகள் நமக்குப் பதிலாக வேலை செய்கிறது, நம்மைப்போலவே செயல்படுகிறது! நாம் செய்ய நினைப்பதை நம் வார்த்தைகள் செய்து முடிக்கிறது. நம்மை, நம் வாழ்க்கையை, ஏன் இந்த உலகத்தையே ஆட்டிப்படைக்கிறது. நம் நாக்கை நான் எவ்வளவு கவனமாக பாதுகாக்க வேண்டும் என்பதை உணர்ந்துகொள்வது மிகமிக அவசியம்.

ஒவ்வொரு காரியத்திற்காகவும் தேவன் இறங்கி இறங்கி வந்து கொண்டு இருப்பதுமில்லை, அவர் தீமையான காரியங்களை செய்வதுமில்லை. தேவனைப் பற்றி சரியாக அறிந்து கொள்ளாதவர்களுக்கு, அதனால் அவரைப் பற்றி தவறாக நினைப்பவர்களுக்கு அவர் தீமைகள் செய்பவராகத் தோன்றுகிறார். கெட்ட தேவன் என்று ஒருவர் இருக்க முடியுமா என்ன? தேவன் என்றாலே நல்லவராகத்தான் இருக்க வேண்டும் என்பது இயற்கையாகவே மனிதனுக்குத் தெரிந்திருக்க வேண்டிய காரியம். "புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடுள்ளவனுக்கு நீர் மாறுபாடுள்ளராகவும் **(forward)** தோன்றுவீர். சங். 18:26." தேவன் **நல்லவர், நல்லவர், நல்லவர், நல்லவர்** மாத்திரமே! வானத்தையும் பூமியையும் படைத்து சகலத்தையும் ஆளுகை செய்துவருகிற தேவன், நியாயப்பிரமாணம் சார்ந்த பிரசங்கங்களின்படி பயங்கரமானவராக இருப்பாரானால் மனிதனின் நிலவரம் என்னாவது? இந்த பூமியே இருக்காது, மனுக்குலமே அழிந்து போயிருக்குமல்லவா?

பிறகு ஏன் பழைய ஏற்பாடு முழுவதிலுமாக தேவனைப் பற்றி பேசும் போது பயங்கரமான வார்த்தைகள் பிரயோஜனப்படுத்தப்படுகிறதே, அது ஏன்? இயேசுவே அதற்கு விளக்கம் தருகிறார்: "இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள். (மாற். 12:24). ... மிகவும் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள் என்றார். (மாற். 12:27)"

## தப்பான எண்ணங்கள்:

வேதத்தை வாசிக்கிறோம்தான், வேதம் முழுவதும் ஏறக்குறைய மனப்பாடமாகிவிட்டது, வசனத்தின் இருப்பிடத்தை பளிச்சென்று சொல்ல முடியும், அழகாக பிரசங்கம் பண்ணவும் முடிகிறது, வேதபாட வகுப்புகள் கூட நடத்திவிடுகிறோம். இதையெல்லாம் செய்துவிடுவதனால் நாம் வேத வசனங்களில் தேர்ச்சியடைந்துவிட்டோம் என்று சொல்லமுடியுமா? இல்லை! வெறும் மூளையறிவினால் கூட இவையெல்லாவற்றையும் செய்துவிட முடியும். ஆனால் வேதத்தின் சத்தியங்களை, இரகசியங்களை அறிய வெளிப்பாட்டின் அறிவு தேவைப்படுகிறது. பரிசுத்தாவியானவர் அதற்கு உதவி செய்கிறார்.

"நீங்கள் அவராலே (இயேசுவால்) பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்கு போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. 1 யோவா. 2:27"

தேவனுடைய ஆவியானவரே நமக்குப் போதிக்கும் போது நாம் தவறான வழியில் போவதற்கான வாய்ப்பே இல்லை, யாராலும் நம்மை வஞ்சிக்கவும் முடியாது. எந்த சபைக்குப் போகலாம்? இந்த ஊழியக்காரர் சரியானவர்தானா? இவர் பிரசங்கத்தைக் கேட்கலாமா? என்ற குழப்பமோ, சந்தேகமோ, பயமோ இனித் தேவையிருக்காது.

ஒரு சபையோ, ஊழியக்காரரோ, பிரசங்கமோ நமக்கும் தேவனுக்கும் இடையிலான பரஸ்பர உறவை **(mutual understanding)** கெடுக்க முடியாது. அப்படி கெடுக்க முயற்சிக்குமானால் அதற்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டும். நம் வார்த்தைகளுக்கு வல்லமை இருக்கிறது, அவைகளுக்கு சிருஷ்டிக்கும் ஆற்றல் உண்டு என்று பார்த்தோம். அதனால் நாம் ஏற்ற வசனத்தின்படி ஜெபிக்கும் போது நம் சுற்றுப்புற சூழ்நிலையையும் (சபை, போதகர், பிரசங்கங்கள்) நாம் தேவனுடைய சித்தத்தின்படி மாற்றியமைத்துவிட

முடியும்! (இது என் அனுபவத்தில் பார்த்தது) அதைவிட்டுவிட்டு அவர்களை அற்பமாக நினைப்பதோ, நம்மையே மேன்மைப்படுத்தி பெருமைபட்டுக்கொள்வதோ, குறை சொல்லித் திரிவதோ, விவாதம் செய்வதோ, எதிர்ப்பதோ தேவையில்லாதது, அதற்கு அவசியமே இல்லை. நாமும் முன்னொரு காலத்தில் சத்தியத்தை அறியாமல், தவறான உபதேசங்களால் உருண்டு, புரண்டு, ஒரு வழியாகித்தான் இன்று இருக்கும் இந்த உன்னதமான நிலைமைக்கு ஆவியானவரால் நடத்தப்பட்டோம். நாம் எந்த விதத்திலும் அவர்களைவிட உயர்வானவர்கள் அல்ல, நிச்சயம் அவர்களும் சரியான வழிக்கு வருவார்கள். "... தேவன் பட்சபாதமுள்ளவரல்ல ... அப். 10:34"

ஒரு ஊழியக்காரரிடத்தில் ஏதோ ஒரு தவறைக் கண்டுபிடித்ததும், பயந்து அலறிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை. நீங்கள் இப்படிச் செய்வதால்தான் தவளை பிடிக்கும் ஊழியக்காரர்கள் ஊரில் பெருகி வருகிறார்கள்! அதாவது ஒரு சபையில் உள்ள விசுவாசியை தன்னுடைய சபைக்குள் கொண்டு வருவது, அதே நேரத்தில் தன்னுடைய சபையில் உள்ள விசுவாசியை பின் வாசல் வழியாக அடுத்த சபைக்குப் போகும் விதத்தில் கோட்டை விட்டு விடுவது! இப்படிப்பட்ட அனுபவங்களையெல்லாம் நானும் கடந்து வந்திருப்பதினால் சொல்கிறேன், இதனால் எல்லாம் நாம் சரியான சத்தியத்திற்குள் நடத்தப்பட முடியாது. போதகர்கள் சத்தியத்தை சத்தியமாக அறிவித்திருப்பார்களானால் விசுவாசிகள் தவளைகளாக மாறும் பிரச்சனையே சபையில் இருந்திருக்காது. உங்களுக்கும் பிதாவாகிய தேவனுக்கும் ஊடாக இயேசுவையும், பரிசுத்தாவியானவரையும் தவிர வேறு எந்த இடைத்தரகர்களையும் வரவிடாதிருங்கள். உங்கள் வாழ்க்கை ஜெயமாக இருக்கும்!

நாம் இருக்கும் சபையில் சரியான சத்தியம் போதிக்கப்படவில்லை, நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலான உபதேசங்கள்தான் செய்யப்படுகின்றன, என்ன செய்யலாம்? உடனடியாக அங்கேயிருந்து வெளியேறி, பாய்ந்து, பறந்து, வேறொரு சபைக்கு ஓடுவதாலோ, அல்லது நாமாக சபையை தொடங்கிவிடுவதாலோ இந்த பிரச்சனைக்கு முடிவுகட்ட முடியாது. சபைக்கு புதியஉடன்படிக்கையின் சத்தியத்தை அறிவிப்பதென்பது ஒன்றிரண்டு நாட்களில் நடக்கிற விஷயம் அல்ல. நாட்களை ஓடவிட்டு, பொறுமையோடு நாமும் பின்னால் ஓட வேண்டும்! "அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய் பேசத்தொடங்கினபோது ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். அப். 18:26"

இப்போதும் சபையில் செய்யப்படும் நியாயப்பிரமாண உபதேசங்களை புதிய பிரமாணத்தின் வெளிச்சத்தில் (பச்சைக்கண்ணாடி) கவனித்து குறிப்பெடுப்பேன். அதே நேரத்தில் சிவப்புக் கண்ணாடி (பழைய பிரமாண கண்ணோட்டம்) போட்டு கவனித்துக்கொண்டிருப்பவர்களுக்காக ஜெபிப்பேன். சந்தர்ப்பம் கிடைக்கும்போது, ஆவியானவரின் நடத்துதலின்படி, முடிந்த அளவுக்கு விவரித்துக்காண்பிப்பேன். வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவது போல செய்ய வேண்டிய வேலை இது! வெட்டு ஒன்று துண்டு ரெண்டு formula சரியாக வராது, ஏனென்றால் ஆண்டாண்டு காலமாக, குட்டையில் ஊறிய மட்டைகள்!

## இயேசுவைப் போலவே!:

"...அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். 1 யோ. 3:2" தேவன் மனிதனை சிருஷ்டிக்கும்போது அவர் தன்னைப் போலவே மனிதனை வடிவமைத்தார் என்று பார்க்கிறோம். தன்னுடைய சாயல், ஞானம், ஆற்றல், வல்லமை, இன்னும் என்னஎன்னவெல்லாம் உண்டோ அனைத்தையும் வைத்து உருவாக்கினார். அதில் ஒன்றுதான் முன்னேற வேண்டும், இன்னும் வளர வேண்டும் என்ற துடிப்பு! உலகம் உருவாவதற்கு முன்னதாகவே தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை தெரிந்துக்கொண்டாராம், ஆச்சரியமாக இல்லை?! நம் ஓட்டம், துடிப்பு, முன்னேற்றம் பூமி உருவாவதற்கு முன்பே ஆரம்பமாகிவிட்டது. பூமியில் வந்து மனிதனாக பிறக்க வேண்டும் என்ற துடிப்பில் ஒவ்வொரு மனித உயிரணுக்களும் (மனிதனின் இரத்தத்தில் இவை இருக்கின்றன) போராடி, போட்டிப்போட்டு நீந்தி, பத்து மில்லியனுக்கும் மேற்பட்ட உயிரணுக்களைத் தோற்கடித்து ஒன்று மட்டும் வெற்றியடைகிறது. குழந்தை பிறக்கும்போதும் அதன் முன்னேறும் இயல்புக்கான செயல்பாடுகள் தாயின் சரீரத்தில் காணப்படும். வயிற்றுக்குள் இருக்கும்போதே வெளியுலகை உள்வாங்குகின்றன. பிறந்தவுடனேயே (கண்கள் திறந்தபிறகு) கண்ணை உருட்டிப்பார்த்து பூமியை கிரகிக்க முயல்கின்றன. சிரித்து, கையை ஆட்டி, குப்புற விழுந்து, தவழ்ந்து, கையை ஊன்றி எழும்பி, எதையாவது பிடித்துக்கொண்டு நடக்கப் பழகி, பிறகு பிடிக்காமல் நடக்கப் பழகி ... கவனியுங்கள் இவைகளையெல்லாம் நாம் அன்றாடம்

பார்ப்பதால் சாதாரணமாக நினைக்கிறோம். மனிதனின் அந்த வளர்ச்சி, முன்னேற்றம், வெற்றிபெறவேண்டும் என்ற உந்துதல் போன்றவை தெய்வத்துவ இயல்புகளையே உண்மையில் வெளிப்படுத்துகின்றன.

5 வயதான மகன் தன்னுடைய அப்பாவை அண்ணாந்து பார்த்து, அதைப் போல 6 அடி உயரத்திற்கு வளர வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அந்த ஆசை நிறைவேறுகிறது... அவன் ஏற்கெனவே ஆசைப்பட்டிருந்தபடி சாஃப்ட்வேர் இன்ஜீனியர் ஆகிறான்... வெளிதேசம் போக வேண்டும் என்ற அவனது எண்ணமும் ஈடேறுகிறது. ஆறு லகரத்தில் சம்பளம் வந்து கொண்டிருக்கும்போதே அது ஏழாக வேண்டும் என்று திட்டமிடுகிறான். அதற்குள்ளாக வளர்ந்து கொண்டிருக்கும் அவனுடைய பிள்ளையின் மனதிலோ எட்டு லகரம்!

தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை என்பார்கள், அப்பாவைப் போலத்தானே பிள்ளையும் இருப்பான்? பூமியிலேயே மனுஷனுக்கு ஏகப்பட்ட இடம் இருக்கிறது, தேவையானது எல்லாம் இருக்கிறது, என்றாலும் சந்திரனுக்குப் போனானே ஏன்? செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா என்று ஆராய்ந்து பனிக்கட்டி இருப்பதைக் கண்டுபிடிக்கிறானே ஏன்? ஏறக்குறைய பூமியைப் போலவே இருக்கும் கிரகங்களை கண்டுபிடித்து பெயரிடுவது ஏன்? ஏழை நாடு என்று முத்திரை குத்தப்பட்ட இந்தியாவின் **I.S.R.O.** விண்வெளி ஆய்வு நிலையம் செவ்வாய் கிரகம் குறித்து ஆராய்ச்சிகள் நடத்தவிருக்கிறது. தற்சமயம் நடைபெற்று வரும் நிலவு ஆய்வுப்பயணமான சந்திரயான்- I முடிந்த பிறகு, செவ்வாய் கிரக ஆய்வைத் தொடங்கும். மட்டுமல்ல 2015-ல் செவ்வாய் கிரகத்திற்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் திட்டமும் இந்தியாவிடம் உள்ளது. இதெல்லாம் தேவையா? இருப்பதை விட்டுவிட்டு பறப்பதை ஏன் பிடிக்க வேண்டும்?

உலக கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இதெல்லாம் தேவையில்லை என்றே நமக்கும் தோன்றுகிறது... விண்வெளி ஆராய்ச்சிக்காக நாசா, அளவுக்கு அதிகமாக, தேசத்தின் பொருளாதாரம் பாதிப்படையும் வகையில் செலவு செய்கிறது என்ற வலுவான குற்றச்சாட்டு நியாயமானது என்றே தோன்றுகிறது. ஆனால் நம்முடைய ஆவியுலக உள்ளான மனிதனின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ... மனிதனின் முன்னேற்றத்தை, வளர்ச்சியை, வெற்றியை பூமியின் சாபக்கரங்கள் மட்டம் தட்டுவதைக் காண முடிகிறது. மனிதனின் இந்த அபார வளர்ச்சியை எப்படி குற்றம் சொல்ல முடியும்? மனிதன் என்றால் அப்படித்தான் இருப்பான்! தேவனைப் போலவே படைக்கப்பட்டிருக்கும் மனிதன் வேறு எப்படி இருப்பானாம்? உலகத்தாரைப் போல நாம் செய்யாதிருப்போம், எவ்வளவு செலவானால் என்ன, அதனால் ஆண்டவரின் பொருளாதாரம் பாதிப்படையப் போவதில்லை! அவருடைய **Universal Bank** நஷ்டமடையப்போவதுமில்லை. அது அள்ள அள்ளக் குறையாதது மட்டுமல்ல, விசித்திர விநோதமாக அதிகமாக பெருகும் வல்லமையுமுடையது.

வானங்களை ஆராய்ச்சி செய்வதன் மூலம் விஞ்ஞானிகள் தேவனுடைய மகத்துவங்களை அதிகமதிகமாக மனிதர்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கிறார்கள். இதனால் நாம் தேவனை இன்னும் அதிகமாக விசுவாசிக்கவும், நெருங்கவும், அவர் சித்தம் செய்யவும், பூமியின் மீது ஆசீர்வாதத்தை இயங்க வைக்கவும் அது வழிவகை செய்கிறது. தேவனுடைய சித்தத்தை இந்த பூமியின் மீது செயல்படுத்துவதற்கு ஏதுவாக மனிதன் செய்யும் எந்த செயலையும் நாம் ஊக்குவிக்கலாம், உற்சாகப்படுத்தலாம். அதே நேரத்தில் மனிதன் தன்னிடம் உள்ள இந்த தெய்வீக வல்லமையை சாத்தானுடைய ஆலோசனைப்படி, சாபத்திற்கேதுவாக மாற்றினான் என்றால் அதை முழுவீச்சாக எதிர்க்கவும் வேண்டும். ஆனால் ஒன்றைக் கவனிக்க வேண்டும், நாம் மனிதர்களுக்கு எதிர்ப்பாளராக மாறிவிடக்கூடாது. *"பூமியில் பிறந்த, பிறக்கிற, பிறக்கப்போகிற எந்தவொரு மனிதனாக இருந்தாலும் சரி, அவன் நமக்கு எதிரி அல்ல. அவனை தன்னுடைய ஆளுகைக்குள் வைத்து கிரியை நடப்பிக்கின்ற சாத்தானின் கூட்டத்தாரும், சாபமுமே நமக்கு எதிரி!"*

...மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, (மனிதர்களோடு அல்ல), துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. எபே. 6:12 ***(... not against flesh and blood, but against principalities, against powers, against the rulers of the darkness of this world, against spiritual wickedness in his places.)*** அதாவது சாத்தான், அவனால் இந்த பூமியில் ஆரம்பமான சாபம் என்ற நியமம் ***(principle),*** அந்த சாபத்தால் இந்த பூமியில் உருவாக்கப்பட்ட எண்ணிமுடியாத பாவங்கள்... அவற்றால் வந்த வியாதிகள்... வறுமை... இப்படியாக நாம் படும் பாடுகள்... இவைகள்தான் நம்முடைய முன்னேற்றத்தைத் தடுத்து, மட்டுப்படுத்தி, முட்டுக்கட்டை போடுகின்றன என்றாலும் இவற்றையும் மீறி மனிதனுக்குள் இருக்கும் தெய்வீகத் தன்மை சீறிப் பாய்கின்றன. பூமியின் மனிதர்கள் தேவனை அறிந்து, இரட்சிக்கப்பட்டு, சத்தியத்தை அறிந்து கொள்ளத் துவங்குவார்களென்றால்... மனிதனின் ஆற்றலுக்கு ஒரு அளவே இல்லாமல் போய்விடும்! இந்த புதிய கண்ணோட்டத்துடன் ஒவ்வொரு குழந்தையையும், மனிதனையும் கவனித்துப் பாருங்கள்,

பிரமிப்பாயிருக்கும், அவர்களின் குறைவுகள் கண்ணுக்குத் தெரியாது!

## கறுப்பனே (பிசாசு) வெளியேறு!:

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியா அடிமையாக இருந்த காலக் கட்டத்தில்... இந்தியர்கள் அவர்களுக்கு அடிமைகளாக இருந்தார்கள். அவர்களின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழ்ந்து வந்தார்கள். கால ஓட்டத்தில் அந்த வாழ்க்கை அவர்களுக்கு பழகிப் போய்விட்டது. அதுதான் நம் தலையெழுத்து, யாரைச் சொல்லி என்ன லாபம் என்று தங்களையே சமாளித்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இந்த நிலைமை நீடித்ததா? நீடிக்கவில்லை. *எங்கோ ஒரு குக்கிராமத்தின் ஒரு மூலையில் ஒரு குடிசையின் கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்த ஒரு மனிதனின் மனதில் ஏதோ ஒரு அதிர்வு. அங்கே லேசான வெளிச்சம் பரவ ஆரம்பித்தது. சுதந்திர தாகமெடுத்தது, மண்பானையின் தண்ணீரால் அந்தத் தாகத்தைத் தீர்க்க முடியவில்லை! விடுதலை என்ற நான்கெழுத்து இருதயத்தின் அடியில் இருந்து எழும்பி எதிரொலிக்க ஆரம்பித்தது.*

மனதில் எழுந்த அந்த அதிர்வலைகளை சாதாரணமாக நினைத்து அடக்கி வைக்க முடியவில்லை. இப்படி அடிமைகளாகவே வாழ்க்கையை ஓட்டுவது அவசியமில்லை என்று தோன்றியது. விடுதலைதான் நம்முடைய பிறப்புரிமை... அதை அடைந்தே தீர வேண்டும் என்று அவனுடைய உள்மனது அவனை கட்டாயப்படுத்த ஆரம்பித்தது. தன் வீட்டிலுள்ளவர்களிடம் இந்த கருத்தை சொன்னான்... சில நாட்களில் பக்கத்து வீட்டுக்காரருடன் இதைப் பற்றிப் பேசினான். செய்தி மெல்ல அந்த தெரு முழுவதும் பரவி புல்லரிக்கும்படிச் செய்தது. அடுத்த தெரு... கடைசியில் கிராமம் முழுவதும் இதைப் பற்றியே பேச்சு! ஆலமரங்களைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த திண்ணைகள் மேடையாக மாற, தொண்டைகள் ஒலிபெருக்கிகளானது! அடுத்த கிராமங்களும் தங்கள் காதைத் தீட்டிக் கூர்மையாக்கிக்கொண்டன. செய்தி தீப்பொறியாக மாறி பட்டணங்களையும் பற்றிக் கொண்டது, தமிழ்நாட்டு எல்லைகளில் எதிரொலிக்க ஆரம்பித்தது. கடைசியில் கைத்தடியுடன் மகாத்மா காந்தி எழும்ப, இந்தியாவே கொதித்து எழும்பியது!

விடுதலை போராட்டம் சூடுபிடித்தது. வெள்ளையனே வெளியேறு! கோஷம் விண்ணைப் பிளந்தது, இந்தியாவுக்கு சுதந்திரம் வந்தது. சரித்திர பாடபுத்தகத்தில் படித்த இந்த சுதந்திர போராட்ட நிகழ்வுகள் எல்லோருக்குமே தெரிந்த ஒன்றுதான். ஆனால் தெரியாத ஒன்றை இங்கே சொல்ல வருகிறேன். இங்கே நாம் வெளியேறச் சொல்வது வெள்ளையனை அல்ல, கருப்பனை! சாபம், அடிமைத்தனம் என்ற கருப்பனை! இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து, மரித்து, எழுந்து, சிலுவையில் மனுக்குலத்தின் சாபத்திற்கேதுவாக இருந்த எழுத்துக்களை அழித்தார். "நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து;

துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துக்கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். (கொலோ. 2: 14, 15)"

பூமியின் மீது ஏற்பட்ட சாபத்தால், அதனால் ஏற்பட்ட பாவங்களால், பாவங்களால் வந்த வியாதிகளால், தரித்திரத்தினால் மூழ்கடிக்கப்பட்ட மக்கள்; இதுதான் வாழ்க்கை என்று தவறான முடிவுக்கு வந்துவிட்டார்கள். யுகாயுகங்களாக இதுவே பழகிப் போனது. என்றாலும் ஒரு சிலர் மாத்திரம் இந்த அடிமைத்தன வாழ்க்கை, இருட்டறை, அந்தகாரம், கண்ணீர், தோல்வி இவைகள் நமக்கு நியமிக்கப்பட்டதல்ல என்பதைக் கண்டு கொண்டார்கள். தேவனால் தங்களுக்கு நியமிக்கப்பட்டது விடுதலையோடு கூடிய ஒரு செழிப்பான வாழ்க்கை என்பதைக் கண்டு கொண்டார்கள். அந்தச் செழிப்பான தேசத்திலே வியாதி இல்லை, தரித்திரம் கிடையாது, பாவம் செய்ய முடியாது, சாபம் தங்களை மேற்கொள்ள முடியாது என்பதையும் கண்டுபிடித்தார்கள்.

## விண்ணுலக விடுதலை போராட்டம்:

மண்ணுலக விடுதலை போராட்டத்தைப் போலவே, விண்ணுலக விடுதலை போராட்டமும் கிறிஸ்துவுக்குப் பின்னதான (கி.பி.) காலகட்டங்களில் நடந்து கொண்டே வந்திருக்கிறது. இந்த ஆவிக்குரிய விடுதலை வீரர்கள் சளைக்கவில்லை, தோல்வியைக் கண்டு தங்கள் முயற்சியை கைவிடவும் இல்லை. உலகத்தை ஜெயித்த (உலகத்தின் சாபத்தை ஜெயித்த) தேவன் இயேசு கொடுத்த ஜெயக்கொடியுடன் ஓடி வந்து கொண்டே இருந்தார்கள். பரிசுத்த பவுல் அப்போஸ்தலனின் ஊழியக்காலங்களிலேயே இந்தப் போராட்டம் துவங்கிவிட்டது. அவருடைய நிருபங்களில் ஊழியக்காலங்களில் அவருக்கு வந்த எதிர்ப்புகளையும், போராட்டங்களையும் வரிசையாகப் பார்க்க முடியும்.

"… யூதரில் சிலர் ஒருமித்து, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லையென்று சபதம் பண்ணிக்கொண்டார்கள். அப். 23:12" ஏன்? அப்படி என்ன நடந்துவிட்டது? பவுலை கொலை செய்யத் திட்டம்போடும் அளவுக்கு பெரியதாக அவர் என்ன தப்பு செய்துவிட்டார்? பவுலின் பிரசங்கம்தான் காரணம், இயேசுவையும், அவரின் சிலுவைப் பாடுகளையும், சிலுவையில் அவர் என்னென்ன செய்தார் என்பதையும், அதனால் நமக்கு என்ன அனுகூலங்களெல்லாம் கிடைத்திருக்கிறது என்பதை பிரசங்கித்ததினால்தான். "… மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம். ரோமர். 3:28" என்று பிரசங்கம் பண்ணியதால்தான். "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். ரோமர். 4:5" என்று அடித்து பிரசங்கம் பண்ணினதால்தான்!

இயேசு கிறிஸ்து மோசேயின் நியாயப்பிரமாண முறைமைகளை சிலுவையில் மாற்றி, புதிய விசுவாச பிரமாணத்தை ஏற்படுத்திவிட்டார் என்று பவுல் பிரசங்கித்தபோது; வேதபாரகர், பரிசேயர், ஆயக்காரர், மூப்பர், இன்னும் பல தலைமைத்துவ பொறுப்பிலிருந்தவர்கள் தங்கள் பிழைப்பில் மண் விழுவதைப் பார்த்து அதிர்ந்து போனார்கள். அதனால் ஒருவன் நீதிமானாக்கப்படுவதற்கோ, ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கோ இனிமேல் கிரியை எதுவும் நடப்பித்து, மல்லுக்கட்டி, போராட வேண்டியதில்லை. தேவன் இயேசுவின் மேல் வைக்கும் எளிய விசுவாசமே இவைகளெல்லாவற்றையும் நமக்கு நடப்பித்து தந்துவிடுகிறது என்று பிரசங்கித்தபோது … அதிலிருந்த சத்தியத்தை ஜீரணிக்கமாட்டாதிருந்தார்கள்.

அதனால் தான் சுவிசேஷ அறிவிப்பிற்கே தடை விதித்தார்கள். அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். அப். 4:18 இயேசுவை பிரசங்கித்தால்தானே, அவருக்குள் இருக்கும் இரகசியங்களையும், ஆசீர்வாதங்களையும் பிரசங்கிக்க வேண்டியதாகிவிடுகிறது? அதனால் அப்படிச் செய்தார்கள். பவுல் பிரசங்கித்த இயேசுவையும், சிலுவையின் அடிப்படை சத்தியங்களையும்தான் இந்த புத்தகங்கள் வழியாக நாங்களும் சொல்லி வருகிறோம். அக்காலங்களைப் போலவே இக்காலங்களிலும் எதிர்ப்புகள் இருந்து கொண்டேதான் இருக்கிறது. என்றாலும் பவுலின் காலக்கட்டங்களில் அந்த எதிர்ப்புகள் எடுபடாமல் போனதுபோலவே இக்காலத்திலும் நடந்து வருகிறது! ஆம், நாங்கள் ஜெயித்து வருகிறோம்.

எதிர்ப்புகளைத் தாண்டி பவுல் தைரியமாக விசுவாசப்பிரமாணத்துக்கடுத்த சத்தியங்களைப் போதித்தார். எதிர்ப்பாளர்களின் பேச்சைத் தூக்கி குப்பைக்கூடையில் எறிந்தார். அவரை கூடையில் வைத்து காய்கறியைப் போல ஜன்னல் வழியாக இறக்கும் சூழ்நிலை வந்தும் அவர் பயப்படவில்லை (அப். 9:25). யூதர்களுடைய தேவாலயங்களில் தைரியமாக பிரசங்கித்தார். சாத்தான் தோற்கடிக்கப்படாத காலங்களில் வாழ்ந்த பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் ஓடமுடியாமல் இடையில் விட்டுவிட்ட ஓட்டத்தை, ஜெயம் பெற்ற இயேசுவால் பவுல் வெற்றியாக ஓடி முடித்தார். பவுல் வாழ்ந்த நாட்களைக் காட்டிலும் வெளிப்பாடுகள் அதிகம் கொடுக்கப்படுகிற இந்நாட்களில் நாம் அதிகப்படியான வெற்றிகளைப் பெற வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். நிச்சயமாகவே ஜனங்களை அடிமைத்தனத்திற்குள், சாபத்திற்குள் வைத்திருக்கிற நியாயப்பிரமாண உபதேசத்திலிருந்து ஜனங்களை விடுவித்து கருப்பனை வெளியேற்றுவோம். இயேசு சிலுவையில் சம்பாதித்த வெற்றியைச் சொந்தமாக்கத்தக்கதாக புதிய உடன்படிக்கையின் சத்தியங்களை சாந்தமாய் உபதேசிப்போம். விசுவாச ஓட்டம் ஒரு தொடர் ஓட்டம். (Relay race!) இந்த தொடர் ஓட்டத்தில் தோல்வி இதுவரை இருந்ததில்லை. இயேசுவின் சிலுவைப் பாடுகளுக்கு பிறகு, பேதுரு ஆரம்பித்து பவுல் தொடர்ந்து ஓடிய இந்த ஓட்டப்பந்தயத்தில் ஒரு கூட்ட ஜனங்கள் ஓடி வந்துகொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருவரின் ஓட்ட முடிவிலும் அவர்களின் கையில் இருக்கிய "பேட்டன்" (Baton) தொடர்ந்து ஓட இருக்கிற அடுத்த ஓட்டக்காரரின் கைகளில் கொடுக்கப்படுகிறது… இப்போது அது எங்கள் கைக்கும் வந்திருக்கிறது. இயேசுவின் சிலுவையை வீணாக்கி, கிருபையை நழுவ விட்டுக்கொண்டிருப்பவர்கள் இதை எங்கள் கையிலிருந்து பறிக்க முடியாது. ஏனென்றால் பேட்டனை (Baton) தொடர் ஓட்ட வீரனிடம்தான் கொடுப்போம், கபடி விளையாடுகிறவரிடமல்ல!

"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ இவையெல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். ரோமர். 8: 36-39"

## "ஏன் இந்த தாமதம்"? :

இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்து, மரித்து, உயிர்த்தெழுந்து, பரத்துக்கேறிப் போனபிறகு, தொடங்கப்பட்ட இந்த சுவிசேஷம் (+ சுவிசேஷத்தின் இரகசியம் + சிலுவையைப் பற்றிய உபதேசம் + வெளிப்பாடுகள்) பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. நியாயப்பிரமாணத்திற்குட்பட்டிருக்கும் சபையார்களும் இயேசுவை அறிவிக்கவே செய்கிறார்கள். அவர்கள் இயேசுவே இரட்சகர், பாவம் போக்கும் பரிகாரி, அவரேயல்லாமல் பாவ விமோசனம் இல்லை, என்பதோடு நிறுத்திக்கொள்கிறார்கள். ஆனால் இயேசு பூமிக்கு பிதாவினால் அனுப்பப்பட்டதன் காரணத்தை (மறைபொருளை) சரியானபடி அறிந்து பிரசங்கிப்பவர்கள் மிகச் சிறிய கூட்டத்தவராயிருக்கிறார்கள். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். மத். 7:14

கண்டுபிடித்து அதைப் பிரசங்கிக்கிறவர்களின் கூட்டம் மிகச் சிறியதாக இருந்தாலும், இன்றைய உலகத்தின் அறிவியல் முன்னேற்றங்களைக் கணக்கில் எடுக்கும்போது (Radio, TV, Internet, Mobile phone, News, Print medias, ...) நிச்சயமாகவே சில நிமிஷங்கள், சில மணி நேரங்களில் உலகம் முழுவதுமாக பரவிவிட வேண்டும். ஆனால் அப்படி பரவுவதில்லையே ஏன்? 2000 வருஷங்களாக இயேசு அறிவிக்கப்பட்டுக் கொண்டேயிருந்தாலும், இன்றளவும் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்ட கூட்டத்தார் மிக சொற்ப சதவிகிதம் (10%) தான். அதே நேரத்தில் சாத்தானின் கூட்டத்தார் மிகவும் கீழ்த்தரமான, மட்டரகமான, மோசமான, கெட்ட, அசிங்கமான, அர்த்தமில்லாத, யாருக்கும் பிரயோஜனமில்லாத வதந்திகளைப் பரப்பி வருகிறார்கள். ஆனால் இவர்கள் பரப்பும் செய்தி எவ்வளவு வேகமாகப் பூமியெங்கும் பரவுகிறது தெரியுமா?

## தெரிந்து கொள்ளுங்கள்:

50, 000 பேர் வசிக்கும் நகரத்தில் உள்ள ஒருவர் ஒரு சுவையான செய்தியை (சாத்தானின் இராஜ்ஜியத்தில் இருந்து வந்த ஒரு விறுவிறுப்பான யாருக்கும் பிரயோஜனமில்லாத செய்தி - அந்த செய்தி உண்மையானது என்று சொல்வதற்கில்லை, ஒருவேளை வதந்தியாகக்கூட இருக்கலாம்.) காலை 8 மணிக்கு தன் வீட்டில் உள்ள மூன்று பேருக்குத் தெரிவிக்கிறார். 8.15 மணிக்கு இந்த செய்தி உள்ளூர்வாசிகள் 3 பேருக்குத் தெரிந்துவிடுகிறது. அந்த மூன்று பேரில் ஒவ்வொருவரும் வேறு மூன்று நபர்களுக்குத் தெரிவிக்கின்றார். 8.30 மணிக்கு, அதாவது அரை மணி நேரத்தில் **4+(3X3) = 13** பேருக்குப் பரவிவிடுகிறது. இப்படியே தொடர்கிறது **...**காலை 8.45க்குள் **13+(3X9)=40** பேருக்கும், 9.00 மணிக்கு **40+(3X27)=121**பேருக்கும், 9.15 மணிக்கு **121+(3X81)=364** பேருக்கும், 9.30 மணிக்கு **364+(3X243)=1,093** பேருக்கும், இவ்விதமாக ஒன்றரை மணி நேரத்தில் ஏறக்குறைய 1,100 பேருக்குத் தெரிந்துவிடுகிறது. நகரம் முழுவதும் செய்தி போய் சேர நெடுநேரமாகும் என்று தோன்றலாம். ஆனால் செய்தி பரவும் வேகத்தை சற்றுக் கவனிப்போம்:

காலை 9.45 மணிக்குள் **1,093+(3X729)=3,280** பேர்! இதுவே கொஞ்சம் வாயாடிகளாயிருப்பவர்கள் ஒவ்வொருவரும் 5 பேருக்கு சொல்வார்களானால் இன்னும் செய்தி பரவும் வேகம் அதிகரிக்கும். 9.45 மணிக்கெல்லாம் நகரத்தில் வாழும் 50,000 பேருக்குச் செய்தி தெரிந்துவிடும். இன்னும் அதிகபட்ச வாயாடிகள் 10 பேருக்குச் சொல்வார்களானால் 9.45 மணிக்கு 1,11,11,111 பேருக்கு பரவி விடும். செய்தி தேசங்களைத் தாண்டிவிடும்! 10.45 மணியளவில் பூமியில் வாழும் 800 கோடி மக்களுக்குமே செய்தி சென்றடைந்துவிடும்! விரைவு செய்தி தொலை தொடர்புகள், குறும் செய்தி (SMS) அதிகரித்துள்ள இந்தக் காலக்கட்டத்தில் இப்படி செய்தி பரவுவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை.

ஆனால் அதே தொலை தொடர்புகளைத்தான் சுவிசேஷகர்களும் உபயோகிக்கிறார்கள். என்றாலும் இயேசுவும், அவருடைய சுவிசேஷமும், சுவிசேஷத்தின் இரகசியங்களும் இந்த அளவுக்கு பரவுவதில்லையே ஏன்? இதை வாசிக்கிற நீங்கள் என்னுடைய அலைவரிசையிலேயே வந்து கொண்டிருப்பீர்களானால் இந்தக் கேள்விக்கு நீங்களே பதில் சொல்லிவிட முடியும். பூமியின் மீது கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கும் சாபம் என்ற நியமம் (Law) சாத்தானுடைய செய்திகளுக்கு அனுகூலமாக இருப்பதால்; அவனுடைய செய்தி விரைவாக பரவி விடுகிறது. பூமியின் ஆரம்பக்கட்டத்தில் இருந்த ஆசீர்வாத நியமம் மாறாமல் இன்றளவும் செயல்பட்டுக்கொண்டிருக்குமானால் இயேசுவின் சுவிசேஷமும் இதே அளவிலான வேகத்தில் பரவியிருந்திருக்கும். ஆதி மனிதனால் ஏற்பட்ட சாபம் பூமியின் ஆசீர்வாத நியமத்தை மாற்றியமைத்ததால்

அது சாப இயக்கமாகிப் போனது. அதனால் இயேசுவுக்கடுத்த ஆசீர்வாதமான நற்செய்திகளுக்கு பூமி ஒத்துழைக்க மறுத்தது. அதனால் அதிகமான வருத்தத்துடன், போராடி, கதவுகளை உடைத்து, இரத்தம் சிந்தி, உயிரைக் கொடுத்து... இவ்விதமாகத்தான் சுவிசேஷத்தை பிரசங்கிக்க வேண்டியதாகிவிட்டது.

அப்படி அறிவிக்கப்பட்ட சுவிசேஷம் பரவுவதற்கும் இதே விதமான தடைகள் சாபத்தின் சட்டங்களால் ஏற்பட்டன. சாதாரணமாகவே பூமியின் மேல் நடக்கும் காரியங்களைக் கவனித்தாலே இது புரியும். ஒரு தவறைச் செய்வதற்கு மனிதனுக்கு யாரும் கற்றுத் தர வேண்டிய அவசியமில்லை. தவறுகள் செய்ய மனிதன் சிறுகுழந்தை முதலே தானாகக் கற்றுக் கொள்கிறான், அதில் **Champion** ஆகவும் மாறுகிறான்! ஆனால் ஒரு நல்ல காரியத்தைச் செய்ய ஒரு குழந்தைக்கு கற்பிப்பதென்றால் அதற்கு செப்பபடிவித்தைக்காரரின் சமார்த்தியம் தேவை! ஒரு குழந்தையின் கையிலிருக்கிற சாக்லேட்டைத் தா என்று கேட்டால் அது விருட்டென்று கையை முதுகுக்குப் பின்னால் இழுத்து சாக்லேட்டை மறைக்க முயற்சிக்கும். கேட்பவருக்கு சாக்லேட்டை கொடுக்க வேண்டும் என்று யாராவது அதற்கு சொல்லிக் கொடுத்தால்தான் புரியும்... வேண்டாவெறுப்பாகத் தரும். ஆனால் கையைப் பின்னுக்கு இழுத்து மறைத்துக் கொள்ளச் சொல்லி அதற்கு யாரும் சொல்லிக்கொடுத்திருக்கவில்லை, கவனியுங்கள்! அது பிறவியிலேயே அதைத் தானாகக் கற்று வைத்திருந்தது. சாபமும் சாத்தானும் மனுக்குலத்தின் குடுமியை பிடித்து ஆட்டி எப்படி அடக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை கவனியுங்கள்!

அப்படியென்றால் இதற்கு விமோசனமே கிடையாதா? இதே நிலைமைதான் கடைசிவரைக்குமா? இல்லை, நிச்சயமாக இல்லை! இந்தப் பிரச்சனையை மாற்றத்தான் இயேசு வந்தார். "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். கலா. 3:13 இனி ஒரு சாபமுமிராது. ... வெளி. 22:3" நாம் பெரிதாக எதையும் செய்ய வேண்டியதில்லை. இயேசு சிலுவையில் நமக்காக செய்த சகல காரியங்களையும் நாம் விசுவாசிக்க வேண்டும், அவ்வளவுதான். "... நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் ... யோவான். 11:40" "... நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்... மாற்கு. 9:23"

## மலையே நீ பெயர்ந்து விலகு!:

அடுத்ததாக அந்த விசுவாசத்தை, வார்த்தைகளை வெளிப்படுத்தியே ஆக வேண்டும். விசுவாசத்தை வெளிப்படுத்தி நினைத்ததைச் சாதித்துக் காட்ட வார்த்தைகளைத் தவிர வேறு வழியை வேதம் பரிந்துரை (recommend) செய்யவில்லை.

- எவனாகிலும் (யாராக இருந்தாலும் சரி - அவன் ஒரு மனிதனாக இருக்க வேண்டும், அவ்வளவுதான்)

- இந்த மலையைப் பார்த்து; (சாபத்தால் இந்த பூமியில் தோன்றிய பிரச்சனை எதுவானாலும் சரி, அது மலைதான், அந்த மலையைப் பார்த்துப் பேச வேண்டும். வியாதியே, மலேரியா காய்ச்சலே... வெளியேறு என்று சொல்ல வேண்டும்.)

- நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி (வார்த்தைகளால் பேசி, அறிக்கை செய்து. வாய்விட்டு சொல்ல வேண்டும், மௌன ஜெபத்தால் பிரயோஜனம் இல்லை)

- தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் (தன்னுடைய வார்த்தைகளின்படி நடக்கும் என்று அவன் அறிந்திருந்தால் - அறிகுறிகள் எதுவும் கண்களுக்கு தெரியாத அளவில் இருந்தாலும், விசுவாசித்தால்)

- அவன் சொன்னபடியே ஆகும் (அவன் சொன்ன வார்த்தைகள் கண்களால் காணும் வடிவத்தைப் பெறும்)

- என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (இது இயேசு சொன்ன வார்த்தைகள், அதன்படியே நடக்கும், நடந்துகொண்டே இருக்கும்.) மாற்கு. 11:23.

ஜெபத்தை பற்றி வேதம் போதித்த கருத்துக்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக உள்ளடக்கிய ஒரு சிறப்பான (high-light) வசனம் இது. இந்த வசனத்தின்படிதான் நாம் ஜெபத்தை இயக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்தை வார்த்தைகளால் வாய்விட்டுச் சொல்லும்போதுதான் அது நடக்கிறது என்பதை உறுதி செய்யும்படியாகவே சொல்லி... சொன்னபடியே... சொன்னபடியே என்ற வார்த்தைகள் வசனத்தில் மூன்று

முறை வருகிறது. ஆனால் ஜனங்கள் காலமெல்லாம் ஜெபிக்கிறார்கள், விடியவிடிய ஜெபிக்கிறார்கள், என்றாலும் எதுவும் நடப்பதில்லையே ஏன்? அதாவது ஜெபிக்கிறார்கள்தான், ஆனால் பதிலைப் பெற்றுக்கொள்ளும் அளவில் ஜெபிக்காமல் அதாவது பதில் கிடைக்காத அளவில் ஜெபிக்கிறார்கள்! இதில் மிகப்பெரிய வேதனை என்னவென்றால் தாங்கள் ஜெபிக்காத, ஜெபிக்க விரும்பாத, மோசமான, எதிர்மறையான காரியங்களையும் ஜெபத்தால் பெற்றுக் கொள்கிறார்கள்!

ஜெபிக்கும்போது அப்படி என்ன தவறை செய்துவிடுகிறார்கள்? அந்த வசனத்தின் **negative image** (எதிர்மறையான அர்த்தத்தின்படி) ஜெபிக்கிறார்கள், அதுதான் பிரச்சனையான பதில்களுக்குக் காரணம். அறியாமையினால் ஜெபிக்கும் ஜெபத்தினால் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போமா?

- எவனாகிலும் (யார் வேண்டுமானாலும் ஜெபிக்கலாம், தவறில்லை)

- இந்த மலையைப் பார்த்து, (மலையைப் பார்த்துப் பேசாமல், அந்த மலையை பற்றிப் பேசுகிறார்கள், அதுதான் பிரச்சனை. நம்முடைய பிரச்சனைதான் தேவனுக்குத் தெரியுமே! அதனால் அதைச் சொல்வதால் எந்த பிரயோஜனமுமில்லை. மட்டுமல்ல, பிரச்சனைகளையே திரும்பத் திரும்ப ஜெபவேளையில் பேசி பேசி, அது அதிகமாக பெருகும்படி செய்துவிடுகிறார்கள். காரணம் நம் வார்த்தைகளுக்கு உருவாக்கும் சக்தி உண்டு)

- நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி (தங்களுக்கு இருக்கும் அதிகாரத்தை அறியாமல் அழுது புலம்புகிறார்கள்.)

- தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் (ஜெபத்தில் பிரச்சனையை பேசி புலம்பும் போது விசுவாசம் பயமாக, சந்தேகமாக, அவிசுவாசமாக உருமாறிவிடுகிறது. அதனால் விருப்பத்திற்கு மாறான எதிர்மறையான விஷயங்கள் நடப்பதாக கற்பனை செய்துகொண்டு பயப்பட ஆரம்பிக்கிறார்கள். என்ன செய்யப்போகிறேனோ தெரியவில்லை என்று அங்கலாய்க்கிறார்கள்.)

- அவன் சொன்னபடியே ஆகும் (கடைசியில் அவன் பயந்தபடியே, சந்தேகப்பட்டபடியே, அங்கலாய்ப்பின்படியே நடந்துவிடுகிறது.)

- என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (இது இயேசு சொன்ன வார்த்தைகள், அதன்படியே நடக்கும், நடந்துகொண்டே இருக்கும். அதாவது எதை நினைத்துப் பயந்தார்களோ அது நடந்துகொண்டே இருக்கும். ஆனால் அது தேவன் தரும் பதில் அல்ல. அவர்கள் எதை உளறிக்கொட்டினார்களோ அது நடக்கிறது, அவ்வளவுதான். வார்த்தைகளுக்கு உருவாக்கும் சக்தி உண்டு, அது ஒரு நியமம் - **law** அதை மாற்ற முடியாது.) மாற்கு. 11:23.

சாதாரணமாக சபை மக்கள் ஜெபிக்கும் முறையைப் பார்த்தோம், அதன் விளைவுகளையும் பார்த்தோம். இதை யாரும் இவர்களுக்குச் சொல்லித் தரவில்லை. தானாகக் கற்றுக் கொண்டார்கள். சிறு குழந்தைகளைப் பார்த்து, வேதம் வாசித்து ஜெபித்துவிட்டு படியுங்கள் என்று கட்டளையிடுகிறார்கள். ஆனால் ஜெபத்தின் வரைமுறைகளைச் சொல்லித் தருவதில்லை. பெற்றோர்களைச் சொல்லியும் குற்றமில்லை... காரணம் அவர்களுக்கே சரியான விதத்தில் ஜெபிக்கத் தெரியாது. ஆனால் முதலில் சொல்லப்பட்ட சரியான ஜெபமுறைமையை யாரும் தானாகக் கற்றுக் கொள்வதில்லை, அதை யாராவது சொல்லித் தர வேண்டியதாயிருக்கிறது.

அது சரி, யார் கற்றுத் தருவார்கள்? காலம் கெட்டுக் கிடக்கிறது, யாரையும் நம்ப முடிவதில்லை என்ற பயம், நியாயமான பயம்தான். என்றாலும் அந்த பயம் அவசியமில்லை, தேவனே ஆலோசனை தருகிறார். “உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்கு போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. 1 யோ. 2: 26, 27” அப்படியானால் நான் ஏன் போதிக்கிறேன் என்பதுதானே கேள்வி? உங்களுக்கு எதுவுமே தெரியாது என்பதனால் நான் போதிக்கவில்லை. ஒரு உண்மையைச் சொல்லுகிறேன். உங்களுக்கு தெரியாதது எதுவுமில்லை, நீங்கள் சகலகலா வல்லவர்கள்!

“அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது:

என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; ... எபி. 8:10" சகல சத்தியங்களையும், இரகசியங்களையும் தேவன் உங்கள் இருதயங்களில் ஏற்கெனவே எழுதியிருக்கிறார். இதை வாசிக்கும்போது அவற்றை சரிபார்க்கிறீர்கள் (check)! அவ்வளவுதான்! தவறு எதுவுமிருக்குமானால் பரிசுத்தாவியானவர் அதனடியில் சிவப்பு அடிக்கோடிட்டு காட்டுவார். உடனே அதை strike out (நீக்கி, அழித்து) செய்துவிடலாம். மீன் நல்லதுதான், அதற்காக எல்லாவற்றையும் சாப்பிடுவதில்லையே, முள்ளை எடுத்து ஓரமாக வைக்கிறோம் இல்லையா?

## கனவு காணுங்கள்!:

அது நிறைவாக ஜெபியுங்கள். ஜெபத்திற்குத் தேவையானது விதைகள்... அந்த விதைகள் வேறு எதுவுமில்லை, வேதத்திலுள்ள ஆசீர்வாதமான வாக்குத்தத்த வசனங்கள்தான். இப்படிப்பட்ட வசனங்களை உங்கள் சூழ்நிலைக்கேற்ற வார்த்தைகளாக மாற்றி ஜெபத்தில் பேசுங்கள், தேவன் ஊடுருவுவார், விதைகள் முளைக்கும், விளைச்சலைக் கொடுக்கும்! வெற்றியும் தோல்வியும் உலக வீரனுக்கு அழகாக இருக்கலாம். ஆனால் வெற்றியுள்ள ஜெபம் மாத்திரமே ஆவிக்குரிய வீரனுக்கு அழகு.

அலாவுதீனும் அற்புத விளக்கும் கதையின் நாயகன் அற்புதவிளக்கின் மூடியை திறப்பதற்கு ஒரு எளிய உபகரணத்தை வைத்திருப்பான். திறந்திடு சீசே என்ற இரண்டே வார்த்தை, மூடி திறக்கும், பிரமாண்ட பூதம் வெளியே வரும், அவன் கேட்டதையெல்லாம் கொண்டு வரும். வார்த்தைகளின் வல்லமையை அறிந்த ஒரு உலக மனிதனின் கற்பனைக் கதையின் உயிரோட்டத்தை சற்றுக் கவனியுங்கள்! ஜீவனுள்ள தேவனுடைய ஆவியைப் பெற்றிருந்தும் வார்த்தையின் வல்லமை விளங்காமல், எதையெதையோ பேசி தேவபிள்ளைகள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். "தேவஜனங்களை வாதிக்கும் சாவு நீரோட்டமே நில்!"

## நற்செய்தியின்றி பாழாகும் சபைகள்!:

நியாயப்பிரமாண உபதேசங்களுக்கு சபைகள் பழகிப்போய்விட்டன, பாழாகிக்கொண்டிருக்கின்றன என்று கூடச் சொல்லலாம். "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள். 1 தீமோத். 1:7" விடிய விடிய பிரசங்கிக்கிறார்கள், எதைப் பிரசங்கிக்கிறோம், இதனால் யாருக்காவது பிரயோஜனம் இருக்குமா? முடிவுதான் என்ன என்பதை பற்றியெல்லாம் யோசிக்காமல், அதைப் பற்றிய உணர்வே இல்லாமல் பிரசங்க பீடத்தை விட்டு இறங்குகிறார்கள். தனக்காக வழிமேல் விழிவைத்து காத்திருக்கும் அடுத்த பிரசங்கபீடத்தை நோக்கி கார்களை ஓட்டுகிறார்கள். இவைகளெல்லாம் ஏன் நடக்கின்றன? இவர்கள் எதை உத்தேசிக்கிறார்கள்? (motive?).

சிலுவையில் புதிய உடன்படிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டபிறகும், சிலுவைக்கு முன் காணப்பட்ட சாபத்தையே மீண்டும் பிரசங்கிப்பதினால் எவ்வித பிரயோஜனமுமில்லை. பிரயோஜனமில்லாவிட்டால் போகிறது விடுங்கள்... ஏதோ நேரத்தையாவது போக்கிவிட்டு எழும்பி வரலாம். ஆனால் பிரசங்கங்களில் உபயோகிக்கப்படும் வார்த்தைகளினால் சபைக்கு கேடுகள் அதிகரிக்கிறதே, அதற்கு என்ன செய்வது? அதனால்தான் இதற்கு எதிராக பிரசங்கிக்க வேண்டியதாயிருக்கிறது. "... தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது; புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது. மாற்கு. 4:11". கடந்த நாட்களில், நாங்களும் நியாயப்பிரமாண பாதைகளை கடந்து வந்தவர்கள்தான். அதைக் கடந்து வந்ததால் தான் இந்த வெளிச்சத்திற்குள் வர முடிந்தது என்பதையும் மறுக்கமுடியாது, வாஸ்தவம்தான். அதற்காக நியாயப்பிரமாணமும் தேவை, அதையும் தேவன் அனுமதிக்கிறார் என்று சமாளித்தபடி அதையே அசை போட்டுக் கொண்டிருப்போமானால் ... ?

"... நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும் (lawless), அடங்காதவர்களுக்கும் (disobedient), பக்தியில்லாதவர்களுக்கும் (ungodly), பாவிகளுக்கும் (sinners), அசுத்தருக்கும் (unholy), சீர்கெட்டவர்களுக்கும் (profane), தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலை பாதகருக்கும், வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும், நித்தியானந்த தேவனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரிடையாயிருக்கிற மற்றெந்த செய்கைக்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. 1 தீமோத். 1. 9, 10, 11"

கவனியுங்கள்... நியாயப்பிரமாணம் இன்னும் தேவனை அறியாமல் இருக்கிற உலக ஜனங்களுக்கு

விதிக்கப்பட்டிருக்கிறது. தேவனை அறிந்திருக்கிற நாம், தேவனை அறியாத ஜனங்களை கையாளுவதற்காக இந்த பூமியின்மேல் இயங்கிக்கொண்டிருக்கிற நியாயப்பிரமாணத்தின் நியமங்களுக்கு இன்னமும் கீழ்ப்பட விரும்புவோமானால், நாம் இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியமேயில்லையே. இன்னும் புறஜாதியார்களின் முறைமைகளே நமக்குப் போதுமென்றால்; எதற்காக இத்தனை இலட்சக்கணக்கில் சபைகள்? பிரங்கியார்கள்? பிரசங்கங்கள்? பிரசங்கபீடங்கள்? ஆராதனைகள்? எதுவுமே தேவையில்லையே?! நியாயப்பிரமாணத்தை தேவன் இயங்க விடவில்லை. தேவனை அறிந்திருந்தும் நாம் இன்னும் அதை மேற்கொள்ளாமல் (ஜெயிக்காமல்) இருப்பதால், அது இயங்கிக்கொண்டே இருக்கிறது. நம் இந்திய தேசத்தை ஆக்கிரமித்திருந்த வெள்ளையர்களை, நம் தேசத்தின் விடுதலை போராட்ட வீரர்கள் போராடி மேற்கொண்டார்கள், அதனால் அவர்கள் வெளியேறிவிட்டார்கள். போனால் போகட்டும் என்று விட்டு வைத்திருப்பார்களானால், அவர்கள் இன்றளவும் இங்கேயேதான் இருப்பார்கள்.

பூமியின் மீது இயங்கிக்கொண்டிருக்கும் சாப, நியாயப்பிரமாண நியமங்களின்படியே மனிதர்களையும் தன்னிச்சையாக இயங்கும்படி விட்டுவிட்டார், அவ்வளவுதான்! அதாவது அவர்களின் போக்கிலேயே விட்டுப்பிடிக்கிறார், எப்படியும் திரும்ப வருவார்கள் என்று அவருக்குத் தெரியும். மனிதனை தன்னைப்போலவே படைத்து, சுயாதீனத்தையும் கொடுத்திருக்கிறார். அதனால் நிச்சயமாக ஒருநாள் சத்தியத்தின் எல்லைக்குள் நுழைந்துவிடுவான் என்பது அவருக்குத் தெரியும், ஏனென்றால் அவன் தன்னைப் போலிருக்கிறானே! அவருடைய நம்பிக்கை எங்களைப் பொறுத்தவரை வீணாகவில்லை. உங்களைப் பொறுத்தவரையிலும் வீணாகாது, நிச்சயமாக எங்கள் எல்லைகளுக்குள் வருவீர்கள்; என்று அறிக்கையிடுகிறோம். "... ஞானத்தை அறிந்து கொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது. நீதி. 24:14" வசனத்தைப் பிடிப்போம், ஜெயிப்போம்!

## என்ன வித்தியாசம் ? :

நியாயப்பிரமாணத்தினால் எந்த மனிதனும் தேவனுக்கு முன்பாக நீதிமானாக முடியாது, ஆனால் விசுவாசப்பிரமாணத்தினால் அது சாத்தியம் என்பதை இக்காலங்களில் போதித்து வருகிறோம். எவ்வளவுதான் விளக்கிச் சொன்னாலும் இன்றளவும் அநேகருக்கு இந்த விஷயத்தில் குழப்பம் நீடித்து வருகிறது. இரண்டிற்கும் உள்ள வித்தியாசத்தில் ஒரு சிலவற்றை பட்டியலிட்டு ஆராய்வோம். நியாயப்பிரமாணத்தினால் ஒரு மனிதன் ஏன் நீதிமானாக வாழ முடிவதில்லை என்பதைப் பார்ப்போம்.

"ஆகையால் நியாயப்பிரமாணம் பெலனற்றதாகி, நியாயம் ஒரு போதும் செல்லாமற்போகிறது; துன்மார்க்கன் நீதிமானை வளைந்துகொள்ளுகிறான்; அதனால் நியாயம் புரட்டப்படுகிறது. ஆபகூக். 1:4." நீதிமானைச் சாதிக்க வைக்கக்கூடிய பலம் நியாயப்பிரமாணத்திற்கு இல்லாதிருக்கிறது என்று பார்க்கிறோம்.

"... நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. யோவான். 1:17." இரண்டையுமே பிதாவாகிய தேவன்தான் கொடுத்தார். பழைய ஏற்பாட்டின் காலத்தில் சாத்தான் ஜெயிக்கப்படாமல் இருந்ததால், ஜனங்கள் பாவத்தை மேற்கொள்ள பெரிய போராட்டமே நடத்த வேண்டியதாயிருந்தது, அப்படியிருந்தும் பெரும்பான்மையாய் தோல்விகளையே சந்திக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் இந்நாட்களைவிட, அக்காலங்களில் பூமியின் சாபத்தின் பாதிப்பு குறைவாக இருந்ததால், ஒரு சிறு கூட்டத்தார் ஓரளவுக்கு பாவத்தை ஜெயித்து சாட்சியாக வாழ்ந்தார்கள். நியாயப்பிரமாணத்தை தேவன் ஒரு மனிதனின் மூலமாகத்தான் கொடுத்தார். ஆனால் கிருபையின் பிரமாணத்தை தன் ஒரே குமாரனாகிய, தன்னுடைய வார்த்தையாகிய இயேசுவின் மூலமாகக் கொடுத்தார். எது சிறந்தது என்பதை நாமே நிதானிக்கலாம்.

"மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை. ரோமர். 4:15." பரிசுத்தம் என்ற எல்லைக்கோட்டைத் தாண்டி பாவத்திற்குள் குதிக்க நியாயப்பிரமாணமே காரணமாகிவிடுகிறது. ஏனென்றால் தன்னுடைய சுய கட்டுப்பாட்டினால் மனிதனால் தன்னுடைய பரிசுத்தத்தை காத்துக்கொள்ள முடியவில்லை. ஏதோ கொஞ்ச காலத்திற்கு தாக்குப்பிடித்தது, பிறகு சுய கட்டுப்பாடு என்ற கயிறு அறுந்து விடுகிறது.

"மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ரோமர். 5:20." பாவம் பெருகுவதற்கு நியாயப்பிரமாணம் ஒரு காரணமாக மாறிப்போனது. ஏனென்றால் பாவப்பரிகாரியான இயேசு வெளிப்படாத காலங்களில் அது கொடுக்கப்பட்டதால், ஓரளவுக்கு பாவத்தைக் கட்டுப்படுத்த அது உதவியதே தவிர, விடுதலைக்கு உதவவில்லை.

"எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக். 2:10." ஒரு பாடத்தில் தோற்றாலும் அடுத்த வகுப்புக்குப் போக முடியாத மாணவனைப் போல ... எல்லோரையும் முட்டிக்குமுட்டி தட்டியெடுத்தது பிரச்சனை!

இப்படிப்பட்ட குறைபாடுகள் நியாயப்பிரமாணத்தில் இருந்ததால் வாழ்க்கை மனிதர்களைப் பார்த்து சவால் (challenge) விட்டது! சாபமும், பாவமும், வியாதியும், தரித்திரமும் மனிதனை போக்குக்காட்டியது (தலைமேல் மிளகாய் அரைத்த கதையாய்). இந்தப் பிரச்சனையை மாற்றி, முடியாதவைகளையெல்லாம் முடித்துக்காட்ட தேவன் போட்ட திட்டம் தான் இயேசுவின் பிறப்பு, சிலுவைப்பாடுகள், உயிர்த்தெழுதல் போன்றவை. இப்போது விசுவாசப் பிரமாணத்தின் அனுகூலங்களைப் பார்ப்போம்.

"நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர். 6:14." இங்கே நாம் எந்த முயற்சியும் எடுக்காமல், நம்மையே கட்டுப்படுத்திக் கொள்ளாமல், போராடாமல் பாவத்தை ஜெயிக்கும் ஒரு வழிமுறையைப் பார்க்கிறோம். நாம் ஆசீர்வாதங்களைப் பெற்று, அதே நேரத்தில் சகலவித நன்மையான காரியங்களையும் செய்வதற்கு கிருபை பிரமாணம் நமக்கு உதவி செய்கிறது. 2 கொரி. 9:8. பாவம் செய்யாதபடி பாதுகாக்கிறது. 2 கொரி. 12:9

"நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை, நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. கலா. 2:21." நியாயப்பிரமாண முயற்சிக்காரர்கள் இயேசுவை அறிந்திருக்கிறோம் என்று நினைத்தாலும், உண்மையில் அவர்கள் இயேசுவை அறியவேயில்லை. "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். கலா. 5:4." நியாயப்பிரமாண உபதேசங்களில் நடக்க வாஞ்சிப்பவர்களின் இருதயத்தில் இயேசுவால் தங்க முடியாது, தங்குவதுமில்லை. நாம் செய்த பாவங்கள் மாத்திரமல்ல, செய்யப்போகிற பாவங்கள் கூட மன்னிக்கப்பட்டிருக்கிறது. இதுதான் கிருபை சார்ந்த விசுவாசப்பிரமாணத்தின் சிறப்பம்சம். (speciality) எபி. 8:12

முடிவாகச் சொல்லப்போனால் கிரியை பிரமாணத்தினால் எதுவும் முடியாது. கிருபை பிரமாணத்தினால் எல்லாம் முடியும்... முடியாது என்ற பேச்சுக்கே இடமில்லை. விசுவாசப்பிரமாண அகராதியில் முடியாது, கூடாது, நம்பிக்கையில்லை, சாத்தியமில்லை போன்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் கொடுக்கப்படவில்லை. அவைகளுக்கு அர்த்தம் தெரிய வேண்டுமானால் அதை நியாயப்பிரமாண அகராதியில் தேடுங்கள்.

ஒரு உதாரணத்தின் மூலமாக விளக்கி முடிக்கிறேன். ஒரு மனிதன் மரங்களடர்ந்த ஒரு தோட்டத்தில் உட்கார்ந்திருந்தான். எதிரேயிருந்த ஒரு தடிமனான மரத்தின் பின்பக்கத்திலிருந்து ஒரு அணில் தன்னுடைய தலையை மட்டும் நீட்டி அவனை உற்றுப் பார்த்தது. அதனுடைய அழகான கூர்மையான மூக்கையும், பளபளக்கும் கண்களையும் பார்த்த அவன், அதனுடைய முழு உடலையும் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் அருகே சென்றான். மிக அருகில் சென்றால் ஓடிவிடும் என்பதால் மரத்திலிருந்து ஐந்தடி தூர ஆர வட்டத்தில் மெதுவாக மரத்தை சுற்றிவர ஆரம்பித்தான். நாலைந்துமுறைகள் மரத்தை சுற்றி வந்துவிட்டான். அந்த பொல்லாத அணில் அவனைப் பார்த்து திருட்டு முழி முழித்தவாறே பின்னோக்கி நகர்ந்து கொண்டே இருந்தது. எவ்வளவு முயற்சி செய்தும் அவனால் அணிலின் முதுகுப் பகுதியைப் பார்க்கவே முடியவில்லை. அணிலின் மூக்குப் பகுதியையும், கண்களையும் தவிர அதனுடைய உடற்பகுதியை பார்க்க முடியாதபடி தடிமனான மரம் மறைத்தது.

அந்த மனிதன் (X) தன்னுடைய நண்பனிடம் (Y) இந்த சம்பவத்தைச் சொன்னான். X சம்பவத்தை விவரிக்கும்போது சொன்ன ஒரு வாக்கியம் வினோதமாக இருந்தது.

X: நான் மரத்தை நாலைந்துமுறைகள் சுற்றி வந்தேன், ஆனால் அணிலை சுற்றிவர முடியவில்லை!

Y: அந்த அணில் மரத்தில் இருந்ததாகச் சொல்கிறாய், அப்படியானால் மரத்தை சுற்றி வந்தாலே அணிலையும் சுற்றி வந்ததாகத்தானே அர்த்தம்?

X: என்னால் அணிலின் பின்புறத்தை, அதாவது முதுகுப் பகுதியை பார்க்கவே முடியவில்லை. அப்படியிருக்க நான் அணிலைச் சுற்றி வந்ததாக எப்படிச் சொல்ல முடியும்?!

Y: அணிலின் முதுகு இப்போது பிரச்சனை இல்லை. அணில் மரத்தில் இருந்தது, நீ மரத்தை சுற்றி வந்தாய், அப்படியானால் அணிலையும் சுற்றி வந்ததாகத்தான் அர்த்தம்?!

**X:** இல்லையில்லை! நான் உன்னைச் சுற்றி வருவதாக வைத்துக்கொள். அப்போது எந்நேரமும் நீ உன் முகம் என்னைப் பார்க்கும்படி திரும்பிக் கொண்டேயிருக்கிறாய், அப்போது நான் உன்னை சுற்றி வந்ததாகச் சொல்ல முடியுமா?

**Y:** வேறு எப்படிச் சொல்வதாம்? சுற்றி வந்ததாகத்தான் சொல்வேன்.

**X:** நான் உன் முதுகைப் பார்க்கவேயில்லை, பிறகு எப்படி நான் உன்னைச் சுற்றி வந்ததாகச் சொல்கிறாய்?

**Y:** முதுகை மறந்துவிடு, நீ என்னைச் சுற்றி வந்தாய், கவனிக்க வேண்டியது இது ஒன்றுதான். என் முதுகை உன்னால் பார்க்க முடிகிறதா என்பதல்ல இப்போது பிரச்சனை.

**X:** ஒன்றைச் சுற்றி வருவதென்றால் என்ன? நாம் சுற்றி வரும் பொருளை நான்கு பக்கங்களிலிருமிருந்து பார்க்கும்படியான விதத்தில் இடம் பெயர்ந்து செல்கிறேன் என்றுதான் அர்த்தம். சரி, இந்த பிரச்சனையை நம் ஆசிரியரிடமே கொண்டு போவோம்.

(பிரச்சனை பேராசியர் வரை போகிறது)

பேராசிரியர்: உங்களுடைய வாக்குவாதம் "சுற்றிவருதல்" என்ற சொல்லைப் பற்றி அமைந்திருக்கிறது. இந்த பிரச்சனையை இரண்டு விதமாகப் புரிந்து கொள்ளலாம். முதலாவதாக, அப்பொருளை மையமாய்க் கொண்டு ஒரு வட்டத்தில் அதைச் சுற்றி வருவதாய்க் கொள்ளலாம். இரண்டாவதாக, அப்பொருளை எல்லா பக்கங்களிலிருந்தும் பார்க்கும்படியாக சுற்றி வருதல் என்றும் கொள்ளலாம்.

**X:** சரி இரண்டு அர்த்தங்கள் இருப்பதாக ஒத்துக் கொள்கிறேன், ஆனால் இரண்டில் எது சரியானது?

ஆசிரியர்: இப்படிக் கேட்பது சரியாகாது, ஏனென்றால் இரண்டில் எதை வேண்டுமானாலும் சரி என்று ஒத்துக்கொள்ளலாம், அது உன் ஏற்புத்திறன் அளவைப் பொருத்தது. முதலாவது அர்த்தத்தை ஏற்றுக் கொள்வாயானால் அணிலை நீ நான்குமுறை சுற்றி வந்ததாக ஆகிறது. இரண்டாவதை ஏற்றுக் கொள்வாயானால் நீ அணிலை சுற்றி வரவேயில்லை என்றாகிறது. ஆனால் இரண்டில் எது அதிக அளவுக்கு ஏற்கத்தக்கதாய் இருக்கிறதோ அதை சரியானதாக எடுத்துக் கொள்ளலாம். என்னுடைய கருத்துப்படி முதலாவதுதான் சரி.

**X:** எப்படி? விளக்கிச் சொல்லுங்கள்.

ஆசிரியர்: சூரியன் 25 நாட்களுக்குச் சற்று அதிகமான காலத்தில் தன்னைத்தானே ஒரு தரம் சுற்றி வருகிறது. 25 நாட்ளுக்குப் பதிலாக, 365 $^1/_4$ (அதாவது ஒரு முழு ஆண்டில்) அது தன்னைத்தான் ஒரு தரம் சுற்றி வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது பூமியானது சூரியனுடைய ஒரு பக்கத்தை மாத்திரம் (அதாவது முகப் பக்கத்தை) பார்த்துக்கொண்டிருக்கும். அதற்காக பூமி சூரியனை சுற்றி வரவில்லை என்று வாதாட முடியுமா?

**X:** ஆமாம் சார், நான் அணிலை சுற்றி வந்தேன் என்பதை ஒத்துக் கொள்கிறேன்!

என்ன சொல்ல வருகிறேன் என்பது புரிந்திருக்கும். முதலாவது அர்த்தம் (அணிலைச் சுற்றி வந்ததாக) இயேசுவின் மூலமாக சிலுவையில் கொடுக்கப்பட்ட புதிய உடன்படிக்கைக்கடுத்த விசுவாசப் பிரமாணத்துக்கு ஒப்பீடாகச் சொல்லப்படுகிறது. இரண்டாவது அர்த்தம் (அணிலை சுற்றி வரவில்லை) சிலுவைக்கு முன்னதாக இயங்கி வந்த, மக்களை இயக்கி வந்த நியாயப்பிரமாணத்துக்கு ஒப்பீடாக வருகிறது.

அணிலை நாற்புறங்களிலிருந்து பார்க்க முடியாவிட்டாலும், அதை சுற்றி வந்ததாக அர்த்தம் எடுத்துக் கொள்ளப்பட்டதுபோலவேதான் புதிய பிரமாணமும் செயல்படுகிறது. நம்மில் யாரும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றியதில்லை, நிறைவேற்றவும் முடியாது. என்றாலும் இயேசு நம் சார்பில் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார். "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். ரோமர். 10:4." அதனால் இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிற (இரட்சிக்கப்பட்டிருக்கிற) நாம் அனைவரும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றாவிட்டாலும் நிறைவேற்றி விட்டதாகவே அர்த்தம் ஆகிறது... இதுதான் புதிய பிரமாணம்.

அணிலைச் சுற்றி வரவில்லை என்ற இரண்டாவது அர்த்தத்தின்படி இயங்குகிறது நியாயப்பிரமாணம்.

எத்தனை முறை மரத்தை சுற்றிவந்தாலும் சரி, அணில் பெப்பே காட்டிவிட்டு திருட்டுமுழியுடன் பின்னோக்கி நகர்ந்து கொண்டேயிருக்கும். உங்களால் அதை சுற்றி வரவே முடியாது. நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே முடியாது, மன்னிக்கவும்... நான் சொல்லவில்லை வேதம் சொல்லுகிறது.

"... எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. ரோமர். 3:20"

"ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம். ரோமர். 3:28"

"... அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் (நீதியை) தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை ... ரோமர். 9:32"

"... நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். கலா. 2:15"

இந்த வசனங்களுக்கு வியாக்கியானமே தேவையில்லை, எவ்வளவு அழகாக புரியும்படி பரிசுத்தாவியானவர் எழுதியிருக்கிறார் பாருங்கள்! என்றாலும் இதுநாள்வரைக்கும் புரியாமல் போனதே ஏன்? அதுதான் சாத்தான் போட்டுவிடும் சாபத்தின் "சிவப்பு கண்ணாடி"! எப்போது அதைக் கழட்டிவிட்டு இயேசு கொடுத்த ஆசீர்வாதத்தின் "பச்சைக் கண்ணாடி"-யை மாட்டிக்கொண்டீர்களோ அப்போதே உங்களுடைய கண்கள் சத்தியத்தை கண்டுகொள்ள ஆரம்பித்தது, இப்போது புரிகிறது பார்த்தீங்களா?

"ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்? கலா. 3:2. அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, ... அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசுவாசக்கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்? கலா. 3:5." நம்மை தேவன் இரட்சித்தது, அபிஷேகித்தது, வரங்களைத் தந்தது, ஊழியம் செய்ய வைத்தது எல்லாமே புதிய உடன்படிக்கையின், விசுவாசப்பிரமாணத்தின் (நீதி பிரமாணம்) அடிப்படையில்தான். இந்தக் காரியங்களையெல்லாம் நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள நியாயப்பிரமாணம் எள்ளளவும் உதவி செய்யவில்லை என்பதைக் கவனியுங்கள்! இதுவரை நீங்கள் அறியாமையினால் அரைகுறையாக நிறைவேற்றி வைத்திருந்த நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் இந்த பாக்கியங்களை உங்களுக்குத் தரவில்லை. மாறாக நீங்கள் எதுவுமே செய்யாமல் இயேசுவின் சார்பில் இலவசமாக இவைகள் எல்லாவற்றையும் பெற்றீர்கள், அல்லேலூயா! அணிலைச் சுற்றாமலேயே சுற்றி வந்த மனிதனைப் போன்றதொரு பாக்கியம் பெற்றோம் நாம், அல்லேலூயா! நியாயப்பிரமாணக் கிரியையை விட்டுவிடுவோம், விசுவாசத்திற்குள் நுழைவோம், அது தானாக நம்மில் கிரியையை நடப்பிக்கும். கொய்யாமரத்தில் கொய்யாபழம் மிகவும் கஷ்டப்பட்டு, கிரியை நடப்பித்து பழுக்கவில்லை, அது தானாகப் பழுத்தது! எப்படி? அது கொய்யா மரத்தில் இருந்ததால்!

"நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவா. 15:5"

## மோசம் போக்கிவிட்ட சாத்தான்:

சபையில் சத்தியம் மறைக்கப்படுகிறது, போனால் போகிறது என்று ஒரு சில கதவுகளை மாத்திரம் திறந்து காட்டிவிட்டு உடனே மூடிவிடுகிறார்கள். ஆனால் எவ்வளவுதான் இவர்கள் முயற்சிகள் செய்தாலும், அது சாத்தியமில்லாமல் போயிற்று. சத்தியம் வெளிப்பாடுகள் என்ற ரூபத்தில் கதவுகளை திறந்து கொண்டு வெளியேற ஆரம்பித்தது. கர்த்தருடைய தூதன் சத்தியம் அடைபட்டு கிடக்காதபடி கதவைத் திறந்துவிடுவதை அப்போஸ்தலர் நடபடிகள் 5 ஆம் அதிகாரத்தில் பார்க்கலாம். இயேசுவை அறிவிக்கவிடாதபடி காலாகாலமாக சாத்தான் ஊழியர்களை தடைசெய்து வருவதற்கு காரணம் ஜனங்கள் இரட்சிக்கப்பட்டுவிடுவார்கள் என்ற ஒரு காரணம் மாத்திரம் அல்ல. இரட்சிக்கப்படும் போது மனிதர்களின் இதயத்துக்குள் தங்கியிருக்க வந்துவிடும் இயேசு, தன்னுடைய ஆவியானவரின் மூலமாக நிச்சயமாக ஒருநாளில் உலகதோற்றத்திற்கு முன்னதான இரகசிய காரியங்களை அம்பலமாக்கிவிடுவார் என்பதால் தான்.

ஜனங்கள் சத்தியத்தை அறிந்துக்கொண்டால், தங்களுடைய சொத்து சுகங்களை, ஐசுவரியங்களை, ஆசீர்வாதங்களை claim பண்ணுவார்கள் என்பது சத்துருவுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல தேவஜனங்களின் பக்கம்தான் வழக்கு ஜெயிக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும்... ஏனென்றால் அவர்களின் சார்பாக இயேசு ஜெயித்துவிட்டாரே! அதனால் வெற்றியைக் கையில் வைத்திருக்கும் மனிதர்களைப் பார்த்தால், தோல்வியை தலை மேல் வைத்திருக்கும் சாத்தானுக்கு அலர்ஜி! மனிதர்களை அவனுக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம் அவர்கள் தேவசாயலாக உருவாக்கப்பட்டிருப்பதால்தான். தனக்குக் கிடைக்காத அந்தஸ்து, பாக்கியம் மனிதர்களுக்கு கிடைத்திருப்பதை அவனால் சகிக்க முடியவில்லை. மண்ணு பொம்மைகளான நமக்கு, தேவன் தந்திருக்கும் மகிமையைப் பார்த்து அவன் அரண்டுபோயிருக்கிறான்! அதாவது பரவாயில்லை, ஒன்றுமில்லாமல் போன அந்த சாத்தானைப் பார்த்து ஜனங்கள் மிரண்டு ஓடுவதுதான் அதைவிட வேடிக்கை.

அதனால் தேவனுடைய சாயலை மனிதனைவிட்டு எடுத்துப்போட வேண்டும் என்று முயற்சிக்கிறான். முதல் மனிதன் (ஆதாம்) மாத்திரம் சாத்தான் விரித்த வலையில் விழாமலிருந்திருப்பானானால் ... பரலோகத்தின் விரிவாக்கமான பூமி (extension) பரலோகத்தைப் போலவே ஆனந்தமயமாக இயங்கிக் கொண்டிருந்திருக்கும். "பூமியையும் அதன் மக்களையும் சாத்தான் எத்தனையாய் மோசம் போக்கிவிட்டான்? "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான்... வெளி. 12:9." இழந்து போன அந்த ஆதி பூமியை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற வெறி ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வரட்டும்! வந்தாக வேண்டும்.

எதிலெல்லாம் மோசம் போக்கினான்? அதுவா? சொல்லிமுடியாது. ஆதாம் முதல் உன் வரைக்கும், என் வரைக்கும் எல்லோரையுமே மோசம் போக்கினான். ஆதி. 3ஆம் அதிகாரத்தில் முதல் மனுஷியிடம் பேச்சுக் கொடுத்து, தன்னுடைய கொடுக்குகள் நிறைந்த வார்த்தையால் பூமியையும், அதைச் சார்ந்த தேவனுடைய முழு நோக்கத்தையுமே தலைகீழாகப் புரட்டிப்போட்ட கொடூர சாத்தான். அவன் மனிதர்களை மோசம் போக்கியது ஒன்றிரண்டு விஷயங்களில் அல்ல, லட்சம்... கோடியாக... நீண்டு கொண்டே வருகிறது.

முதலில் மனிதனுக்கு அவன் யார் என்பதையே மறைத்து விட்டான். தெய்வத்துவம் வாய்ந்த மனிதனை சாதாரண மண் தானே என்ற தாழ்வு மனப்பான்மைக்குள்ளாக வரவழைத்தான். மனிதனுக்குள்ளிருந்த தேவ இயல்புகளைக் கேட்டுக்கேதுவாக மாற்றி தேவனிடமிருந்து பிரித்தான். பூமியை சாபத்திற்குள் தள்ளினான். பூமியின் சாப இயக்கத்தின் பலன்களை புசிக்க வைத்தான். சாபம் என்ற தொற்று நோயை சந்ததி சந்ததியாகத் தொடர வைத்தான். சாபத்தின் வெளிப்பாடான பாவம், வியாதி, வறுமை மூலமாக மனுக்குலத்தை பூரண ஆயுசு வரை உயிர் வாழ முடியாதபடி கொன்று குவித்தான்.

தேவனைப் பற்றியும், அவர் உருவாக்கின பூமியைப் பற்றியும் ஒரு எதிர்மறையான வெளிப்பாட்டை (negative view) மனிதனுக்குக் கொடுத்து, அதை நம்ப வைத்தான். பூமியின் சாப விதியின் இயக்கத்தால் ஏற்பட்ட சகல கெட்ட காரியங்களுக்கும் தேவன்தான் காரணம் என்றான். தன்னுடைய திருவிளையாடல்களுக்கும் தேவன்தான் காரணம் என்றான். உதாரணமாக யோபு 9-ஆவது அதிகாரத்தில் தேவனைப் பற்றி யோபுவின் அறியாமையினால் வந்த தவறான அறிக்கையை பாருங்கள். "இதோ, அவர் பறித்துக்கொண்டு போகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்? அவர் புசலினால் என்னை முறிக்கிறார்; முகாந்தரமில்லாமல் அநேகம் காயங்களை எனக்கு உண்டாக்குகிறார். நான் மூச்சுவிட எனக்கு இடங்கொடாமல், கசப்பினால் என்னை நிரப்புகிறார். ...அவர் குற்றமில்லாதவர்களின் சோதனையைப் பார்த்து நகைக்கிறார்." ஆண்டவரைப் பற்றி எவ்வளவு மோசமான துர்ச்செய்தியை சாத்தான், மனுஷர் வாயின் வார்த்தைகள் மூலமாக பரப்பி மனுக்குலத்தை வஞ்சிக்கிறான் பாருங்கள்!

கதை அந்த ஒரு யோபுவுடன் முடியவில்லை... சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட மக்கள் தேவனையும், அவருடைய மகத்துவங்களையும் எதிர்மறை கண்ணோட்டத்துடன் பார்த்து, வாயில் வந்ததையெல்லாம் பேசிப்பேசியே வாழ்க்கையைத் தொலைத்தார்கள். நீங்களும் நானும்கூட இதற்கு விதிவிலக்கல்ல, சாத்தானால் வாழ்க்கையைத் தொலைத்தோம்.

பூமியைப் பற்றியும், மனிதனின் வாழ்க்கையைப் பற்றியும் பிரசங்கியின் கண்ணோட்டத்தைப் பாருங்கள்: "சூரியனுக்குக் கீழே (பூமியின் மேலே) செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; ... எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது. ... பலன் ஒன்றுமில்லை. மனுபுத்திரருக்கு சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; இவைகள் சாகிறதுபோலவே அவர்களும் சாகிறார்கள்; ... மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல... பிர. 1:14, 2:11, 3:19"

உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே தேவன் நமக்காக ஏற்படுத்தி வைத்த ஆசீர்வாதங்களை

மறைத்தான். அந்த இரகசியங்களை நாம் ஆராய்ந்து கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதற்காக, அவைகள் "கருகலான பகுதிகள்" என்று உபதேசித்தான். வேத வசனங்களின் பூட்டைத் திறந்துவிடாதபடி சாவியை எடுத்து ஒளித்துவைத்துவிட்டு, வசனங்களைத் தவறாக புரிந்து கொண்டு, தவறாகப் பேசும்படி சூழ்நிலைகளை ஏற்படுத்தி வைத்தான். இயேசுகிறிஸ்து மனிதர்களின் இருதயத்திற்குள் வந்துவிடாதபடி போராடுகிறான். ஏனென்றால் சகல ஆசீர்வாதங்களும் அவருக்குள் அடக்கம். அதனால் அவர் நமக்குள் வந்துவிட்டால் திரும்பவும் பூமியை ஏதேனாக்கிவிடுவாரோ என்ற பயம். நியாயப்பிரமாண வாத்தியாரைவிட்டு போகாமல் பார்த்துக்கொண்டான், கிருபையிலிருந்து விழ வைத்தான். இயேசுவை வெறும் அலங்காரப் பொம்மையாக்கி அழகு பார்க்க வைத்தான். வியாதிகள், பொருளாதார நெருக்கடிகள் தேவன் நடத்தும் பாதை என்று சொல்லி, அதிலே நடக்க வைத்து மனிதன் 70 வயதைத் தாண்டி விடாதபடி கவனமாகக் கண்காணித்தான்.

இதையெல்லாம் செய்து வருகிற சாத்தானின் ஏமாற்று வித்தைகளுக்கு முடிவுகட்டி, அவன் ஒரு செல்லாக்காசு, அவனுக்கு ஏற்கெனவே சாவுமணி அடிக்கப்பட்டாயிற்று என்பதை அறிவிக்கவே இந்த சத்தியங்கள் பிரசங்கிக்கப்படுகின்றன. பிரசங்கியார் என்றாலே சிலருக்குக் கிண்டலாக இருக்கிறது. அவர்களின் கேலிப் பேச்சுக்களுக்கு டப்பிங் கொடுப்பது சாத்தான். பைபிளைத் தூக்கிக்கொண்டு போகிறவர்களை நான் நம்புவதேயில்லை என்றார் ஒருவர். யார் இவர்களை நம்பச் சொன்னது, அப்படி நம்பச் சொல்லி வேதத்தில் எங்கும் இல்லையே, தேவனை விசுவாசிக்கச் சொல்லி மட்டுமே வேதம் சொல்லுகிறது. "... தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள். மாற்கு. 11:22. ... கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். நீதி. 16:20. ... கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். நீதி. 28:25" கிறிஸ்தவர்களைவிட மற்ற மதத்தினர்கள் எவ்வளவோ நல்லவர்களாக இருக்கிறார்கள் என்றார் இன்னொருவர். அவர்கள் அப்படி நல்லவர்களாக இருப்பதில் எல்லோரையும் விட எனக்குத்தான் சந்தோஷம் அதிகம். நான் இதைப் பற்றி முன்பே எழுதியிருக்கிறேன். தேவனை அறியாத புறஜாதியார் (உ.ம்.: இந்துக்கள்) சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருந்து கொண்டே, தன்னைப் படைத்த தேவனின் (இயேசுவின்) குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறார்கள் என்றால் அது நிச்சயம் பாராட்டப்பட வேண்டிய விஷயம். தன்னுடைய ஆளுகைக்குள் வைத்திருப்பவர்களைக்கூட சாத்தானால் முழு அளவில் வஞ்சிக்க முடியவில்லை என்பதையே இது காட்டுகிறது. சாத்தானுடைய தோல்விக்கு இது ஒரு எடுத்துக்காட்டு (Highlight) தேவனுடைய குணாதிசயங்களை வெளிப்படுத்துகிற வண்ணமாய், நல்லவர்களாக இருந்து, நன்மைகள் பல செய்துவரும் புறஜாதியாருக்கு எங்கள் வாழ்த்துக்கள். அவர்களிடம் காணப்படும் இந்த உயர்ந்த குணாதிசயங்களுக்கு காரணகர்த்தாவான இயேசு சீக்கிரமே அவர்கள் இருதயங்களுக்குள் பிரவேசிப்பார், அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

"... நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, ... தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்களுடைய மனச்சாட்சியும்கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். ... தேவன் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும். ரோமர். 2:14-16" வசனங்களை நிதானித்தால் தான் ஏன் இப்படி நடக்கிறது என்பது புரியும். பூமியில் தோன்றிய முதல் மனிதன் முதல், பிறக்கப்போகிற கடைசி மனிதன் வரை எல்லோரையும் இயேசுவின் மூலமாய் உருவாக்கியவர் நம் தேவன்தான். இதைப் புறஜாதியார் ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி அவர்களுடைய சிருஷ்டிகர் இயேசுதானே தவிர, அவர்கள் அறியாமையினால் தேவனென்று நினைத்து ஆராதிக்கும் "ஏதோ ஒன்று" அல்ல!

மனிதர்கள் எல்லோருமே தேவனுடைய சாயலில், அவருடைய குணாதிசயங்களோடுதான் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவரை அறியாதிருப்பவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. தன்னுடைய சிருஷ்டிகரின் இயல்புகளை வெளிப்படுத்தாமல் ஒரு மனிதனாலும் இருக்க முடியாது. என்னுடைய கையெழுத்தைப் பார்த்ததுமே என்னுடைய வீட்டார் இது லதாவுடைய எழுத்துதானே என்று சொல்லிவிடுகிறார்கள். எவ்வளவுதான் நான் முயற்சி செய்து மறைக்க முயற்சித்தாலும் என் எழுத்துக்களில் என் மூஞ்சி தெரிந்துவிடுகிறதே! சாத்தான் ஒரு மனிதனை எவ்வளவு கெட்டவனாக மாற்றி வைத்திருந்தாலும் சரி. அதை மீறி பீறிட்டுக்கொண்டு வருகிறது அவனிடமிருக்கிற தெய்வத்துவம்! அவன்தான் மனிதன்!

## ஏன் இந்த முரண்பாடு ? :

புதிய உடன்படிக்கையின் அடிப்படையிலான சத்தியத்தை, பெருங்கூட்டத்தார் ஏற்றுக் கொள்ளத் தயங்குவதற்கு காரணம்? கிரியையின் அடிப்படையில் மனிதன் நீதிமானாவதில்லை, வெறும் விசுவாசம்

போதும் என்று பிரசங்கிப்பதால்தான். இப்படிப்பட்ட பிரசங்கத்தினால் ஜனங்கள் கிரியை நடப்பிக்காமல் இருப்பார்கள், அதனால் அவர்கள் பாவம் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகுமல்லவா? இது பாவம் செய்வதற்கு அனுமதி (permission to do something) அளிப்பதைப் போல தோன்றுகிறதல்லவா? நியாயமான கேள்வியைப்போலத் தோன்றினாலும், இது நியாயமல்லாத கேள்வி! வசனங்களைக் கவனிப்போம்.

"ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். ரோமர். 4:5." தேவனை அறிந்து கொள்வதற்கு முன்னதாக, நியாயப்பிரமாணத்திற்குட்பட்டிருந்த காலங்களிலும் மனிதன் கிரியைகளை நடப்பிக்கிறான். இதை சன்மார்க்கம் என்கிறோம்... தேவனை அறியாத, இரட்சிக்கப்படாத மனிதர்களிடமும் இதைக் காண முடியும். எல்லா மனிதர்களிடமும் நற்கிரியைகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த கிரியையினால் எந்த மனுஷனும் நீதிமானாவதில்லை. இயேசுவைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போதுதான் மனிதன் நீதிமானாக்கப்படுகிறான். மனிதன் இரட்சிக்கப்படும்போது எந்த கிரியையும் செய்வதில்லை, விசுவாசிக்கிறான் அவ்வளவுதான். அடுத்த வசனத்தை கவனிப்போம். "... ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? யாக். 2:14"

வசனங்களை சரியாக நிதானிக்காவிட்டால் குழம்பிப் போய்விட வாய்ப்புண்டு. கிரியைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று கி. மு. (கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்பாக) கிரியை, அடுத்தது கி.பி. (கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பு) கிரியை. இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாக மனிதனால் செய்யப்படுகிற கிரியைகளுக்கும் (நற்காரியங்கள்), அவன் இரட்சிப்பிற்கும் சம்பந்தமில்லை. *இயேசு ஒரு மனிதனை இரட்சிப்பதற்காக அவனிடமிருந்து கிரியை என்ற விலைக்கிரையத்தை வாங்குவதில்லை.* இரட்சிப்பையும், அதனுடன் இணைக்கப்பட்ட சகல ஆசீர்வாதங்களையும் இலவசமாகவே கொடுக்கிறார்.

ஆனால் இரட்சிக்கப்பட்டபின்பு செய்ய வேண்டிய கிரியை என்று ஒன்று இருக்கிறது. முந்தைய கிரியைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இரட்சிக்கப்படுவதற்கு முன்னதாக நம்மில் காணப்படும் கிரியைகள் இயற்கையானது... இது எல்லா மனிதர்களிடமும் காணப்படுவது, இதில் விசேஷம் எதுவுமில்லை. ஆனால் இரட்சிக்கப்பட்ட பின்பு நாம் கிரியை நடப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. அப்படியானால் வெறும் விசுவாசம் போதும் என்று நீங்கதானே சொன்னீங்க என்று கேட்கத் தோன்றும். ஆமாம் நாங்கதான் சொன்னோம்; வசனத்தைப் பாருங்கள்:

"ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும். யாக். 2: 15, 16, 17" நாம் தேவனை விசுவாசிக்கிறோம்... அது நல்லதுதான். "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படி செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. யாக். 2: 19"

ஆனால் நாம் தேவனை விசுவாசிக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு அடையாளம் காட்டுவதே நம்முடைய கிரியைகள்தான். அதாவது நம்முடைய கிரியைகளினால்தான் நம்முடைய விசுவாசம் உயிரோடு காக்கப்பட்டு சாதனை படைக்கிறது. எந்தக் கிரியையும் நடப்பிக்காமல், வெறும் விசுவாசத்தை மட்டும் வைத்திருப்போமானால், அது இருதயத்தினுள்ளேயே சிறைப்பட்டு, அமுத்தமடைந்து செத்துப்போகும். செத்துப்போன எதுவுமே எதற்கும் பிரயோஜனப்படுவதில்லை. அந்த விசுவாசம் நம்முடைய வாழ்க்கைக்கோ, ஊழியத்திற்கோ, தேவனுடைய சித்தத்தை செய்வதற்கோ எந்த விதத்திலும் பிரயோஜனமாயிருக்காது. கிரியை என்பது விசுவாசத்தின் outlook என்று கூடச் சொல்லலாம். கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் விசுவாசத்தை, மற்றவர்களின் கண்ணுக்குத் தெரியும்படி கொண்டுவருவது நம்முடைய விசுவாசக் கிரியைகள் மாத்திரம்தான். கிரியையை விசுவாசத்தின் output என்றும் சொல்லலாம். நம் விசுவாசத்தின் உற்பத்தியளவு (production) எந்த அளவில் இருக்கிறது என்பது நம் கிரியையில்தான் வெளிப்படும்.

இந்த இரண்டு விதமான கிரியைகளுக்கும் வித்தியாசங்கள் பல உண்டு. இரட்சிக்கப்படுமுன்னதாக மனிதர்கள் செய்யும் கிரியைகள் நியாயப்பிரமாணம் சார்ந்தது. இவர்களின் கிரியைகள் இயற்கையாக, அறிவுசார்ந்ததாக இருப்பதுடன் சுயமாக முயற்சி செய்வதினாலும் வருகிறது. இவ்விதமான கிரியைகளைச் செய்ய அதிகம் கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது. இயேசுவுக்கும், விசுவாசத்திற்கும் சம்பந்தமில்லாத இந்தக் கிரியைகள் பூரணமாக்கப்படுவதில்லை. அரைகுறையாக இருக்கிறது, இல்லாவிட்டால் முடியாமல்

போகிறது.

இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசிகளானபின்பு நடைபெறும் கிரியை புதிய உடன்படிக்கை சார்ந்தது (விசுவாச பிரமாணம், புதிய பிரமாணம், நீதி பிரமாணம் என்று பல பெயர்கள் இருக்கின்றன). இந்த கிரியைகள் இயேசுவின் மூலமாக உண்டாகிறது. அவரில் நாம் இணைக்கப்பட்டிருப்பதால் தானாகவே கிரியைகள் தோன்றி விடுகின்றன. "நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின் மேல் கிடத்தினபோது கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; யாக். 21, 22, 23." இப்போது புரிந்திருக்கும், இப்படியாக நாம் நியாயப்பிரமாணத்தினடிப்படையில் அல்ல, புதிய பிரமாணத்தின் அடிப்படையில் கிரியைகள் நடப்பிப்போமாக. இயேசு அதற்கு உதவி செய்வார். "... நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; ..." அதாவது அவருடைய கையில் கையுறை (gloves) போல இருக்கிறோம். அறுவை சிகிச்சை அறையில் (Operation thertre)-ல் நோயாளிக்கு அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் கையில் கையுறை அணிந்திருப்பார். நோயாளியை நேரிடையாகத் தொடுவது கையுறைதான். அதற்காக கையுறைதான் ரணசிகிச்சையை செய்தது என்று சொல்ல முடியுமா?

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; (it is the gift of God). எபே. 2:8. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; எபே 2:9" ஆகையால் நாம் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களைப் போல நற்கிரியைகள் செய்வதற்காக செப்படிவித்தைக் காட்டவேண்டிய அவசியமில்லை!

## எங்களை விட்டுவிடுங்கள் ப்ளீஸ்!:

ஒரு மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்திற்கு ஒரு சில சடங்காச்சாரங்களால் மாற்றப்பட்ட, ஆனால் இயேசுவை அறியாத, ஒரு பெயர்க்கிறிஸ்தவ சகோதரியிடம் பேசிக்கொண்டிருந்தபோது; பல "ஏன்?" களுக்கு பதில் கிடைத்தது. அந்தச் சகோதரியின் கேள்வி: நாங்கள் ஏன் கிறிஸ்தவர்களாக மாற வேண்டும்? எங்களுடைய மதம் உங்க மதத்தைவிட எந்தவிதத்திலும் தரக்குறைவானது இல்லையே. அதுமட்டுமல்ல, எங்களுடைய மதக்கோட்பாடுகள் கிறிஸ்தவத்தைவிட அதிக தரம் கூடியதாகத்தான் இருக்கிறது என்றாள். அதுமட்டுமல்ல "கர்மா" என்ற முறைமையின்படி மனிதனின் பாவத்திற்கு விமோச்சனம் கிடையாது, அதற்கேற்ற தண்டனையை அவன் அடைந்துதான் தீர வேண்டும். இதுதான் அவர்கள் மதத்தின் முக்கியமான காரியம். தண்டனை என்றால்தான் மனிதனுக்கு பயம் வரும், தவறு செய்யாமல் இருப்பான். பாவமன்னிப்பு என்று ஒன்றை நீங்கள் வைத்திருப்பதால் கிறிஸ்தவர்களுக்கு துளிர்விட்டுப் போய்விட்டது *(அதாவது தேவனைக்குறித்த பயமில்லாமல் கிறிஸ்தவர்கள் தான் கொழுத்துப்போய், திமிர்பிடித்து அலைகிறார்கள்)* என்றாள்.

பிசாசின் ஆளுகைக்குள், நியாயப்பிரமாண சாபக்கட்டுக்குள் இருக்கும் ஒரு மனிதனுடைய கண்ணோட்டம் (view - point) இந்த அளவில்தான் இருக்கும். இந்த அளவில் இருப்பதே பெரிய விஷயம், பாராட்டலாம்! அந்தச் சகோதரி இவ்வாறாக பேசியதற்கு என்ன காரணம்? இதைப் பற்றி கொஞ்சம் அலசுவோம். சுவிசேஷ ஊழியங்கள் வெற்றியாக அமைய அது உதவியாக இருக்கும்.

முதலில் ஒரு விஷயம், அது என்னவென்றால்; தேவனுக்கு மதம் தேவையில்லை! மதம் மனிதனால், உலகத்தால், சாத்தானால் உருவாக்கப்பட்ட ஒன்று. கிறிஸ்தவ மதம் கூட தேவனால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல, கிறிஸ்தவ மதத்திற்கும் கிறிஸ்துவுக்கும் சம்பந்தமில்லை! கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள், அதாவது இயேசுவை தனக்குள்ளாகக் கொண்ட தேவ பிள்ளைகளைத்தான் அக்காலங்களில் கிறிஸ்தவர்கள் என்று அழைத்தார்கள். "... முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று. அப். 11:26" சீஷர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வந்தது, ஆனால் அது ஒரு மதமாக அறிவிக்கப்படவில்லை, இயேசுவை உடையவர்கள் என்ற அர்த்தத்தில் அந்த பெயர் வந்தது. சீஷர்கள் என்றால் யார்?

"... நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, ... மத். 28:19" சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுகிற ஒவ்வொருவனும் இயேசுவுக்கு சீஷனாக மாறுகிறான் என்று பார்க்கிறோம். சீஷராக மாற இந்த ஒரு தகுதி போதுமானது. கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த, பெயர்க்கிறிஸ்தவர்களின் மதவாத

நடவடிக்கைகளைத் தவறாக புரிந்து கொண்டவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள், அல்லது மறுக்கிறார்கள். அவர்களின் தயக்கம், மறுப்பு இரண்டுமே நிச்சயமாக நியாயமானதுதான்! காரணம் ஜனங்கள் தாங்கள் ஏற்கெனவே இருக்கிற மதத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு வருவதனால் அவர்களுக்கு எந்தவொரு பிரயோஜனமும் இருக்கப்போவதில்லை. அப்படி வந்தவர்களுக்கும் கிறிஸ்துவினால் எந்தவொரு பிரயோஜனமும் இருப்பதில்லை. ஏனென்றால் கிறிஸ்தவர்களின் கிரியைகளை அவர்கள் கவனிக்கிறார்கள், கண்காணிக்கிறார்கள். தங்களுடைய கிரியைகளைவிட அது மோசமாக இருப்பதாலும், தங்களைவிட அவர்கள் சகல ஆசீர்வாதங்களிலும் குறைச்சலுள்ளவர்களாகக் காணப்படுவதை அவர்கள் கவனித்திருப்பதினாலும் இயேசுவை புறக்கணிக்கிறார்கள். ஏன் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு சரியான காரணகாரியங்கள் அவர்களுக்கு விளக்கமாகக் கொடுக்கப்படாததினால் தான்... அதனால் தான் கிறிஸ்தவர்கள் மதமாற்றம் செய்கிறார்கள் என்று தவறாகப் புரிந்து கொண்டார்கள். இதனடிப்படையில் வந்தது தான் மதமாற்றுத் தடைச் சட்டம்.

இயேசு கிறிஸ்து ஒரு மதத்தை ஸ்தாபிக்க இந்தப் பூமிக்கு வரவில்லை, கிறிஸ்தவ மதத்தை அவர் ஸ்தாபிக்கவும் இல்லை. இயேசுவின் பெயரைச் சொல்லி பிழைப்பு நடத்த வந்தவர்களின் வேலை இது. இழந்துபோன மனுக்குலத்தை சாத்தானிடமிருந்து மீட்க வந்தார், மீட்டும் கொண்டார். வெற்றி பெற்றார், அதற்குக் கிடைத்த பரிசுகளை நம் கையில் கொடுத்தார். இதுதான் தேவன் பூமிக்கு வந்த நோக்கம். இயேசு ஒரு மதத்தை ஸ்தாபித்திருப்பார் என்றால் அவர் வந்த நோக்கமே நிறைவேறாமல் போயிருக்கும்.

கர்மாதான் சரியான தீர்வு என்று அவர்கள் முடிவெடுக்கக் காரணம்; தேவனைப் பற்றின அவர்களுடைய தவறான மனப்பக்குவம் (mind settings.) அஸ்திபாரத்திலேயே பிரச்சனை என்றால் அதன் மேல் எழுப்பப்படும் கட்டிடம் கேள்விக்குறியாவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. வேரில் பிரச்சனை என்றால், காய்கள் அதை பிரதிபலிக்கும். "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. 1 கொரி. 3:11"

அவர்களின் மனம் இன்னும் தாங்கள் அடையாளம் கண்டுக்கொள்ளாத தேவனைப் பற்றின தவறான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறது. அதைப் பிரயோஜனப்படுத்தி சாத்தான் ஒரு அரணையே அமைத்து வைத்திருக்கிறான். அதுமட்டுமா அதில் அவன் தங்கியும் விடுகிறான். பிறகென்ன அவன் வைத்ததுதான் சட்டம், அவன் ஓதுவதுதான் வேதம், அவன் வைத்ததுதான் வரிசை! அவன் இதுவும் பேசுவான்... இதைவிட அதிகமாகவும் பேசுவான்! ஏன்? ஏன்? ஏன்? என்ற கேள்விகளால் சூழப்பட்டிருக்கும் அவர்களுடைய இருதயம் நாம் எவ்வளவுதான் கத்திப் பிரசங்கம் பண்ணினாலும் சுவிசேஷத்தை உள்வாங்காது. அதனால் அவர்களுக்குச் சத்தியத்தை விளக்கி, புரியவைத்து, நற்காரியங்களைச் சுவிசேஷமாகச் சொல்ல வேண்டும். தங்கள் வாழ்க்கையின் சகல பிரச்சனைகளுக்குமான தீர்வு தேவனிடம் இருக்கிறது... இயேசுதான் விடியலைத் தரப்போகிறார் என்பதை அவர்கள் சரியான விதத்தில் புரிந்து கொள்வார்களானால் இயேசுவை ஏற்றுக் கொள்ள ஏன் தயக்கம் காட்டப் போகிறார்கள்.

பாவம் செய்தவன் அதற்கான தண்டனையை அடைந்தே ஆகவேண்டும், விமோச்சனம் இருக்கக்கூடாது என்று அவர்கள் முடிவு கட்டக் காரணமும் இதுவேதான். தேவனைக் குறித்ததான தவறான நினைப்பு thinking தான் காரணம். அவர்கள் தேவனைப் பற்றி தவறாகச் சிந்திப்பதற்குக் காரணம்; அவர்கள் ஆராதிக்கிற சாத்தானின் தூதர்கள்தான் என்பது சொல்லாமலேயே புரியும். அவர்கள் தொழுதுகொள்ளுகிற அந்த பிசாசின் தூதர்களின் குணாதிசயங்களை, தேவனுடைய குணாதிசயங்களாகத் தவறாகப் புரிந்து கொண்டதுதான் இதற்குக் காரணம். தேவனை இன்னும் சரியாக அறியவேண்டிய விதமாக அறியாத நியாயப்பிரமாணத்திற்குட்பட்ட விசுவாசிகளின் நிலவரமே இப்படித்தான் இருக்கிறது. தேவனுக்கு பயந்து கிடுகிடுவென்று நடுங்கி ஓட வேண்டும் என்கிறார்கள். அப்படியிருக்க புறமதஸ்தவர்களைக் குற்றம் சொல்வதில் எந்தவித நியாயமும் இல்லை!

அவள் மிக மிக சிக்கலான கேஸ், அவளை இயேசுவுக்குள் நடத்த உன்னால் முடியவே முடியாது. அதனால் நீ அவளை பின்தொடருவதை விட்டுவிடு என்றான் சாத்தான். முடியாது, தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று சொல்லியிருக்கிறதே என்றேன். அதற்குச் சாத்தான்: இருக்கலாம், ஆனால் உன்னால் முடியாதே என்றான். அதற்கு இயேசு: ... கடுகு விதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் ... உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது ...உங்களுக்குச் சொல்லுகிறேன். மத். 17:20 என்றும் சொல்லியிருக்கிறதே என்றேன். சாத்தான் என்னை விட்டு ஓடிப்போனான்!

வசனத்தைச் சொன்னவுடன் சாத்தான் ஓடிப்போவதற்கு என்ன காரணம்? வேதத்தில் இருந்து

சூழ்நிலைக்கு ஏற்ற சரியான வசனத்தை எடுத்துப் பேசும்போது; அந்த வார்த்தைகள் தேவனுடைய சித்தத்தை பூமியில் உருவாக்கிவிடுகிறது. அதுமட்டுமல்ல, அந்த வசனங்கள் ஏற்கெனவே இருக்கும் சாத்தானுடைய காரியங்களின் மீது **overwrite** செய்யப்படுவதால், அவைகள் அழிக்கப்பட்டுப் போகின்றன. தன்னுடைய காரியங்கள் இல்லாத, அதே நேரத்தில் தேவனுடைய காரியங்கள் நடைபெறும் இடங்களில் சாத்தானுக்கு எந்தவித வேலையும் இருப்பதில்லை, அதனால் அவன் அந்த இடத்தைவிட்டு நகர்ந்துவிடுகிறான், அவ்வளவுதான்.

## தடம் புரண்ட நாக்கு:

ஒரு ராஜா தன்னுடைய இராஜ்ஜியத்தின் காரியங்களை குறித்து மந்திரிகளுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருந்தான். பிரச்சனைகள் அடுக்கடுக்காக அவன் முன்பாக கொண்டுவரப்பட்டன. ஏறக்குறைய 1,00,000 பிரச்சனைகள் வந்து குவிந்தன. அரசனுக்கு மூச்சுத் திணறியது. தேசத்தின் இத்தனை பிரச்சனைகளுக்கும் காரணம் என்ன? காரணகர்த்தா யார்? உங்களுக்கு 3 நாட்கள் அவகாசம் தருகிறேன்... அதற்குள் காரணத்தைக் கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றான். மந்திரிகள் கலைந்து, விவரங்கள் சேகரிப்பதற்காக தேசத்தின் நாலாதிசைகளிலும் சிதறிப்போனார்கள்.

மூன்று நாட்களுக்குப் பின்பு; ஒரு மந்திரி ஒரு சிறிய பெட்டியைக் கொண்டு வந்தான். அரசே பிரச்சனைகளுக்குக் காரணம் இந்த பெட்டிக்குள் இருக்கிறது என்றான். இத்தனை பிரச்சனைகளுக்கும் காரணம் இத்தனை சிறிய பெட்டியிலா? அரசன் ஆச்சரியப்பட்டு பிரமித்தான். மந்திரி பெட்டியைத் திறந்தான் ... உள்ளே ஒரு ரப்பரினால் செய்யப்பட்ட ஒரு நாக்கு இருந்தது! ஆம்... மன்னா, ஜனங்கள் பேசிப்பேசியே நாட்டைக் கெடுத்துவிட்டார்கள் என்றான். அதெப்படி? பேசுவது ஒரு குற்றமாகுமா? நாம் பேசுவதெல்லாம் நடந்தாவிடுகிறது? என்றான். ஆம்... மன்னா, ஜனங்கள் என்ன பேசுகிறார்களோ அதுதான் தேசத்திலே நடக்கிறது என்றான்! அரசனுக்கு இந்தச் செய்தி சற்றுப் புதிதாக இருந்தது. அவன் மந்திரியைப் பார்த்து: நீர் சொல்வது உண்மையோ பொய்யோ அது இருக்கட்டும். தேசத்தில் எந்த பிரச்சனைகளும் இல்லாமல் நல்ல காரியங்கள் மாத்திரம் நடக்க ஏதாவது செய்ய முடியுமா? என்று கேட்டான். யோசித்த மந்திரி, அரசே அதற்கும் ஒரு வழி இருக்கிறது, இதோ கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளே போய் மீண்டும் அதே மாதிரியான ஒரு சிறிய பெட்டியுடன் வெளியே வந்தார். அரசனுக்கு மீண்டும் ஆச்சரியம், சகல நன்மைகளும் இந்தச் சிறிய பெட்டியிலா? என்று நினைத்தபடி பெட்டியை திறவுங்கள் என்றான். மந்திரி பெட்டியை திறந்தான், அங்கே மீண்டும் அதே நாக்கு! அரசன் பதில் ஏதும் பேசவில்லை, அவனுக்கு எல்லாம் புரிந்து போனது!

பரிசுத்தாவியானவர் பேச நம்முடைய நாவைத்தான் பிரயோஜனப்படுத்துகிறார் (2 சாமு. 23:2). ஆவியான தேவன் தன்னுடைய சித்தத்தை வார்த்தைகளாக்கி இந்த உலகத்துக்கு வெளிப்படுத்த அவர் உபயோகப்படுத்தும் ஒரே உபகரணம் நாக்கு மாத்திரமே! ஒரு உன்னத நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட நாக்கை சாத்தான் எவ்வளவாய் கெடுத்திருக்கிறான் பாருங்கள்! "... அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள். சங். 5:9" பேச்சினால் பிசாசுக்கு வாசலைத் திறந்துவிட்டு விடுகிறார்கள். நாக்கை அடக்கி வைத்திருந்தாலே போதும்; பிசாசுகளைத் துரத்த ஊழியக்காரர்களைத் தேடிப்போக வேண்டிய அவசியம் இருக்காது. அதற்காக பேசாமலேயே இருக்க முடியுமா? என்று கூடத் தோன்றலாம். இருக்க முடியாதுதான், தேவன் மனிதனை பேசும் ஆவியை உடையவனாகத்தான் உருவாக்கியிருக்கிறார். பேச வேண்டியது மிக அவசியம், ஆனால் எதைப் பேசுகிறோம் என்பதை குறித்து கவனமாயிருப்பதும் அதைவிட முக்கியம். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்று வேதம் சொல்லுகிறது. இருதயத்தை வசனத்தினால் நிரப்பி வைத்திருந்தால், அது நல்ல விசேஷத்தினால் பொங்கும், அதற்கு கடிவாளம் போட வேண்டிய அவசியம் இருக்காது. சங். 39:1 சண்டித்தனம் பண்ணும் குதிரைக்குத்தான் கடிவாளம் போடுவார்கள்! நாம் அப்படிப்பட்டவர்களாக இருக்கக்கூடாது என்றுதான் தேவன் விரும்புகிறார். நாம் தேவனுடைய சாயலில் அவரைப் போலவே படைக்கப்பட்டிருக்கும் மனிதர்கள்; நாம் கோவேறு கழுதைகள் அல்ல! நாக்கினால் நம்முடைய தரம் ஒரு கழுதையின் அளவுக்கு தாழ்ந்து போகாமல் பாதுகாக்கும் பொறுப்பு நம் கையில்தான் இருக்கிறது; இல்லையில்லை நம் நாக்கில்தான் இருக்கிறது. "வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப்போலவும் இருக்க வேண்டாம். சங். 32:9"

... அவனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து, அவன் செவ்வையாய்ப் பேசினான். மாற்கு. 7:35. சாத்தான் மனிதர்களை பேச முடியாதபடி ஊமையாக இருக்கும்படி அவர்களின் நாக்கைக் கட்டிவிடுகிறான். நல்லதாய்ப் போய்விட்டது, பேசுவதால்தானே இத்தனை பிரச்சனைகள் முளைக்கின்றன... பேசாமல் வாயை

மூடிக்கொண்டிருப்பதே நல்லது என்று தோன்றலாம். ஆனால் பேச முடியாமல் சாபத்தால் ஊமையர்களாக பிறப்பவர்கள், நன்மையானதையும் பேச முடியாமல் போய்விடுகிறதே? அதனால் தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியின் மீது அவர்களால் நிறைவேற்ற முடியாமல் போகிறது. அவர்களைப் பொறுத்தவரையில் விதைகள் **packet**-லேயே தங்கி, நாளடைவில் பூஞ்சை காளான் **(fungus)** பிடித்து, அழிக்கப்படுகிறது.

நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், ... யாக். 3:6. மனிதனின் வாழ்க்கையே நாக்கைப் பொறுத்துதான் அமைகிறது என்பதைப் பார்க்கிறோம். மனிதனின் வார்த்தை எப்படியோ, அப்படியே அவனும் இருக்கிறான். பிதாவாகிய தேவனும், அவருடைய வார்த்தையும் (இயேசு) வேறு வேறு அல்ல என்பதைப் போலவே, நாமும், நம்முடைய வார்த்தையும் வேறு வேறு அல்ல. நானும் (இயேசுவும்) பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் ... யோவான். 10:30 அந்தப்படியே நாமும் நம் வார்த்தைகளும் ஒன்றாயிருக்கிறது. நம்முடைய வார்த்தையின்படியே நம் வாழ்க்கையை சிருஷ்டித்துக்கொள்ளும் பாக்கியத்தை ஒரு வரப்பிரசாதம் போல தேவன் தந்திருக்கிறார். அதை ஏற்றவாறு பிரயோஜனப்படுத்தி, ஆசீர்வாதத்தை இயங்க வைப்போமானால் நம் வாழ்க்கை செழிக்கும். அதை அப்பிரயோஜனமாக்கி, சாபத்தை இயக்குவோமானால் நம் ஆயுசு கொளுத்தப்பட்டு, அற்ப ஆயுசில் போய்ச்சேர வேண்டியதாகிவிடும். "இந்த சின்ன வயசுலேயே பொட்டுன்னுப் போயிட்டானே" போன்றதான வாசகங்களைக் கேள்விப்படுகிறோம். அவன் தானாகப் போகவில்லை, அவன் வார்த்தைகள்... அல்லது அவனைக் குறித்து அடுத்தவர் பேசிய வார்த்தைகள் அவனைப் போக வைத்தது!

நம்மை அற்ப ஆயுசில் கொல்வதில் சாத்தானுக்கு என்ன லாபம்? ஏன் இல்லை, மனிதன் உயிருடன் இருந்தால்தானே பூமியில் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவான்? அவனையே இல்லாமல் ஆக்கிவிட்டால்! இதுதான் சாத்தானின் திட்டம். ஆனால் சாத்தானால் மனிதனின் விஷயத்தில் முழு அளவிலான வெற்றியை ஒருபோதும் நிச்சயம் பெறவே முடியாது. ஏனென்றால் மனிதன் தேவனைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டு, அவருடைய ஆற்றலையும் உள்வாங்கி, அவருடைய திவ்விய சுபாவத்தையும் உடையவனாக இருக்கிறான். அதனால் தன்னால் முடிந்த அளவுக்கு **(max.)** மனிதனைத் தாக்குகிறான். மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பகுதிகளையுமே தாக்குகிறான்.

இதில் சரீரம் என்பது மனிதன் இந்தப் பூமியில் தங்கியிருப்பதற்கு ஏற்றவாறு தேவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு கூடாரமாயிருக்கிறது என்று முன்னமேயே பார்த்தோம். நம்முடைய உள்ளான மனிதனே உண்மையில் மனிதன்! உண்மையில் மனிதன் என்பவன் மாமிசக் கண்களினால் பார்க்கக்கூடாதவனே! ஏனென்றால் அவன் தேவனைப் போலிருக்கிறான். தேவன் கண்களால் காணமுடியாத ஆவி ரூபத்தில் இருக்கிறார், அதனால் மனிதனையும் அவ்விதமாகத்தான் உருவாக்கியிருக்கிறார். நாம் கண்களினால் பார்ப்பது உண்மையான மனிதனை அல்ல, மனிதன் தங்கி வாழும் மண்ணாலான ஒரு கூடாரத்தைதான்! உள்ளான ஆவி மனிதன் இந்த மண்ணாலான கூடாரத்தின் வழியாக இந்த பூமியை பார்க்கிறான், அதனோடு தொடர்பை ஏற்படுத்துகிறான், தேவனின் நோக்கத்தை பூமியின் மீது நிறைவேற்றுகிறான், ஸ்தாபிக்கிறான். **(establish)** பண்ணுகிறான்.

இப்படியாக மனிதன் தேவனுடைய நோக்கத்தை பூமியின் மீது நிறுவி, பூமியை பரலோகமயமாக்கிவிடத் துடிக்கிறான். இந்த வெளிப்பாட்டை ஒரு தரிசனமாக தேவனிடமிருந்து பெற்றும் இருக்கிறான். (விதைகள் புத்தகங்கள் கூட தேவனுடைய திட்டத்தைப் பூமியின் மீது நிறுவுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு திட்டம்தான்!) இதனால்தான் சாத்தான் பெருமளவில் மனிதனின் சரீரத்தைத் (அதாவது பூமிக்குரிய கூடாரத்தைத்) தாக்குகிறான். இந்த கூடாரத்தை அழிக்க அவன் எத்தனையோ சதித்திட்டங்களோடு வருகிறான். சகோ. டேவிட்டைக் கூட இப்படியாய் (heart attack) இருதய வியாதியைக் கொண்டு வந்து தாக்கினான். நாங்கள் ஆண்டவர் இயேசுவின் வல்லமையுள்ள வார்த்தைகளை உபயோகித்து சாத்தானை ஜெயித்து, முன்னைக் காட்டிலும் பலமாக அவரது புதிய உடன்படிக்கையைக் குறித்து அநேகருக்குப் போதித்து வருகிறோம். (எங்களது சாட்சியை www.sovereignjesus.com வாசியுங்கள்.) இன்னும் போர்கள், கொலைகள், விபத்துக்கள், பாவங்கள், அதனால் வரும் வியாதிகள் இப்படியாக பல திட்டங்களோடு இந்த கூடாரத்தை அழிக்க வருகிறான். இவற்றில் வியாதிகள் முக்கியமானவை.

ஒரு மனிதனை ஏதாவது ஒரு நோய் தாக்கும்போது, அவனுடைய கூடாரம் சேதமடைகிறது. மேற்கூரையின் சில ஓடுகள் உடைந்து, கதவில் கீல் உடைந்து, ஜன்னல் உடைந்து, தரையின் தளம் பெயர்க்கப்பட்டு, சுவரில் வெடிப்பு விழுந்து பாழடைந்து போன ஒரு வீடாக மனிதனின் பூமிக்குரிய

கூடாரம் (சரீரம்) மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட கூடாரத்தில் வசிக்கும் ஒரு மனிதனின் நிலைமை என்னவாகும்? தேவையான பாதுகாப்பு, வசதிகள், சௌகரியங்கள் எதுவுமே கிடைக்காமல் அல்லாடவேண்டிய சூழ்நிலை வரும். மழை பெய்யும் போது வீடு ஒழுகும்... உடைந்த ஜன்னல் வழியாக குப்பைக்கூளங்கள் எல்லாம் உள்ளே வந்து விழும். திருடன் பூட்டை, கதவை உடைக்காமலேயே உள்ளே நுழைவான்! இப்படிப்பட்ட நிலைமையில் ஒரு மனிதன் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவது எப்படி?

சாதாரண வியாதியாக இருந்தால் பரவாயில்லை, வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம். காய்ச்சல், மண்டையிடி என்றால் பிரச்சனையே இல்லை, மாத்திரையை முழுங்கி வைக்கலாம். இன்னும் மருந்தே கண்டுபிடிக்கப்படாத வியாதிகளும் இருக்கின்றன. ஓரளவுக்கு கட்டுப்படுத்தி மட்டுமே வைக்கப்படும் வியாதிகள் எத்தனையெத்தனையோ. இப்படிப்பட்ட கூடாரங்களில் முழுக்கூரையையும் சூறாவளிக் காற்று வந்து அடித்துக் கொண்டுபோய்விடுகிறது. ஒரு பக்கச் சுவரே இடிந்து விழுந்து மற்ற மூன்று சுவர்களில் வீடு நிற்கிறது! இந்தச் சூழ்நிலையில் தேவ சித்தமாவது, ஒண்ணாவது!

பலவிதமான அங்கவீனக் குறைபாடுகளும் மனிதனை சாப ரூபத்தில் தாக்குகிறது. சரீர அங்க குறைபாடுகள் (கை, கால் இல்லாத ஊனம், குருடு, செவிடு, ஊமை) போன்றவை. இப்படிப்பட்டவர்கள் இந்த பூமியில் வாழ்வதற்கே பெரிய போராட்டம் நடத்த வேண்டியதாகிவிடுகிறது. தேவ சித்தத்தை விட்டுவிடுவோம், தேவனை நினைத்துப் பார்க்கக்கூட அவர்களால் முடியாத சூழ்நிலை வருகிறது. அடுத்ததாக மூளை வளர்ச்சி குறைபாடுகள் (இது மூளையில் ஏற்படும் குறைபாடு - சரீரம் வளர்ந்தும் அதற்கேற்ற வளர்ச்சி மூளையில் இல்லாத சூழ்நிலை - 20 வயதானாலும் 5 வயதுக்குரிய மனநிலை) இப்படிப்பட்டவர்களால் தேவனையே புரிந்து கொள்ள முடியாது. அடுத்ததாக பாலின குறைபாடுகள், இதுவும் ஒருவித அங்கவீனம்தான். (ஆண், பெண் என்ற இரண்டு பாலினத்தையும் உள்ளடக்கிய சரீர, மனதளவிலான தோற்றங்கள்) வேதம் இவர்களை **"அண்ணகர்கள்"** என்று அழைக்கிறது. இவர்கள் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு, விசித்திர ஜந்துக்கள் போல ஒதுக்கப்பட்டு, கேலி கிண்டலுக்கு உள்ளாவதால் தேவனைத் தேட முடியாமல் போகிறார்கள். தேவனைத் தேடாமல் அவரை அறிந்து கொள்ள முடியாது. அவரை அறிந்து கொள்ளாவிட்டால் அவரின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியாது; அதாவது அவர் சத்தத்தைக் கேட்க முடியாது. அவர் குரல் கேட்காமல் அவர் சித்தம் அறிந்து, அதை இந்த பூமியின் மீது செய்ய முடியாது.

அதாவது சாத்தான் சாபத்தின் வெளிப்பாடான வியாதிகள், பலவீனங்கள், அங்கஹீனக்குறைபாடுகள் மூலமாக மனிதனின் கூடாரத்தை பூமியில் சரிவர இயங்க முடியாதபடி தடுக்கிறான். சரிவர இயங்காத கூடாரத்தில் வாசம் செய்யும் மனிதன் (ஆவி ரூபத்தில் இருக்கும் உள்ளான மனிதன்) சரிவர இயங்க முடியாமல் தவிக்கிறான். தேவனுடைய சித்தத்தை நோய்கள், மற்றும் குறைபாடுகளினால் பாதிப்படைந்த சரீரத்தின் வழியாக வெளியே கொண்டு வருவதில் பல தடைகள், பிரச்சனைகள் ஏற்படுகின்றன. வேறு வழியில்லாத மனிதன் வியாதிக்கொடுமையால் உருக்குலைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சரீரத்தின் வழியாக எதையெதையோ வெளிப்படுத்திவிடுகிறான். அதில் மிக சொற்பமான அளவே தேவசித்தம் கலந்திருக்கிறது. அதிகப்படியாக உலகத்தோடு உருண்டுப் போகக்கூடிய காரியங்கள், சாத்தானின் ஆலோசனையின்படியான காரியங்கள், சாபத்தீடான காரியங்கள், பாவங்கள் போன்றவைகளே அதில் வெளிப்படுகின்றன.

நாம் வியாதியோடிருப்பது ஏன் தேவசித்தமில்லை என்பது புரிந்திருக்கும். நாம் பரிபூரண சுகத்தோடிருப்பதே தேவனுடைய சித்தம் என்பதும் விளங்கியிருக்கும். ஏனென்றால் எந்த விதத்திலும் சேதமாகாமல், பரிபூரணத்தோடும், ஆரோக்கியத்துடனும் இருக்கின்ற சரீரம்தான் இப்பூமியில் தேவனுடைய சித்தம் செய்வதற்கேதுவாக இயங்க முடியும். அதாவது ஆரோக்கியமான உடல் தேவனுடைய மனவிருப்பத்தை இப்பூமியில் செய்து முடிப்பதற்கிசைவான சாத்தியக்கூறுகளைப் பெற்றிருக்கிறது. நாம் சுகத்தோடிருப்பது ஏன் சாத்தானுக்கு பிடிப்பதில்லை என்பது இப்போது புரிந்திருக்கும். நாம் வியாதியோடும், குறைபாடுகளோடும் இருப்பதுதான் சாத்தானுக்கு பிடிக்கும் என்பதும் விளங்கியிருக்கும்!

அதனால் நாம் கண்டிப்பாக சுகத்தோடிருந்தே தீரவேண்டியதாயிருக்கிறது! நாம் பாவத்திலிருந்து விடுதலையாக வேண்டும் என்பதற்காக மாத்திரமல்ல, வியாதி நீங்கி சுகத்தோடிருக்க வேண்டும் என்பதற்காகவும் இயேசு மரித்தார். இதை ஏற்றுக்கொள்வதற்கு அநேகருக்கு யோசனையாக இருக்கிறது. ஏனென்றால் வியாதியோடிருப்பது தேவசித்தம் என்ற தவறான பிரசங்கங்களைக் கேட்டு, காலாகாலமாக வியாதிகளை சுமந்துகொண்டு, தேவனுக்காக எதுவுமே செய்யத் திராணியில்லாமல் அல்லாடிக்கொண்டிருப்பவர்கள் ஏராளம், தாராளம்! இவர்கள் வியாதியின் மூலமாக தேவன் தங்களுக்கு பாடம் கற்றுத் தருவதாகச் சொல்கிறார்கள். கற்றுக்கொண்டார்களா என்றால் அதுவும் இல்லை. ஒண்ணாங்கிளாசிலேயே பெயில், தக்கிமுக்கி பாஸ்

பண்ணி இரண்டாம் கிளாஸ் வந்தால் ... அங்கே தேர்வு எழுதப்போற நேரத்துல டைபாய்ட் காய்ச்சல் வந்துவிட்டது. ஆக மூணாங்கிளாசுக்கு போகாமல் படிப்பதையே நிறுத்திவிட்டு மாடு மேய்க்கப் போய்விட்டார்கள். இதுதான் இவர்கள் வியாதியின் மூலமாக, பாடம் கற்றுக்கொண்ட இலட்சணம்!

"மெய்யாகவே அவர் (கவனியுங்கள், பழைய ஏற்பாட்டிலேயே பெயரிடப்படாத இயேசு வருகிறார்!) நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார்;..." என்று ஏசாயா. 53:4-ல் தீர்க்கத்தரிசி சொல்லியிருக்க, அவர் பாடுகள் என்று சொல்லியிருப்பது நம்முடைய பலவீனங்களைத்தான் என்பதையும், அவர் துக்கங்கள் என்று சொல்லியிருப்பது நம்முடைய நோய்களைத்தான் என்பதையும் மத்தேயு. 8:17ல் நமக்கு விளக்கவுரையும் கொடுக்கப்பட்டிருக்க, இன்னமும் வியாதியும் தேவனுடைய வழிநடத்துதல்தான் என்று சமாளித்துக் கொண்டு இருப்பீர்களானால்... உங்களைப் பார்த்து பரிதாபப்படுவதைத் தவிர வேறு வழியில்லை! பிரகாசமுள்ள மனக்கண்களை ஜெபித்து பெற்றுக்கொண்டு, திறந்து வசனத்தைப் பாருங்கள். "அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. மத். 8:17." "தாம் (பிதாவாகிய தேவன்) கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். எபே. 1:19"

இப்பூமிக்குரிய கூடாரமாகிய சரீரத்தை வியாதியிலிருந்து விலக்கி பாதுகாத்து, அதற்குள்ளாக நம் உள்ளான மனிதனை சகல சௌகரியங்களுடன் தங்க வைத்து, அவன் மூலமாக தேவ சித்தங்களை இப்பூமியில் நிறுவி (establish) செய்து, பன்னிரண்டு வகையான இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட தங்க வீதியில் நடந்து, பரலோகம், ஏதேன், ஜீவவிருட்சம், நித்தியஜீவன், சந்தோஷம் போன்ற பெயர்களை எழுதி மாட்டுவோம்!

## கண்களை திறந்து பாருங்கள்!:

ஜெபத்தை குறித்து இன்னும் சில காரியங்களைப் பார்ப்போம். "ஜெபம் பண்ணக்கடவோம்" என்றவுடன் "சிக்"கென்று கண்களை மூடிக்கொள்ளாமல்; கண்களை நன்றாக அகல திறந்து பார்க்க வேண்டும்! அப்போதுதான் நாம் எங்கே, யாருடன் உட்கார்ந்திருக்கிறோம் என்பது தெரியும், அதற்கேற்றபடி சரியாக ஜெபிக்கவும் முடியும். ஜெபம் என்றவுடன் முக்காடு போட்டு, கண்ணை மூடி, கடகடவென்று ஏற்கெனவே மனப்பாடம் செய்து தயாராக வைத்திருந்த ஐந்து பக்க கட்டுரையை ஒப்பிப்பதல்ல. பொலபொலவென்று கண்ணீர் வடித்து, புலம்பி, ஒப்பாரி வைத்து, முகம் குப்புற விழுந்து கிடப்பது... இதெல்லாம் செய்ய வேண்டாம் என்று சொல்ல வரவில்லை, தாராளமாகச் செய்யலாம், அதற்கான உரிமை எல்லோருக்கும் இருக்கிறது, யாரும் தடுக்க முடியாது. ஆனால் இப்படிச் செய்வது மட்டும் ஜெபமாகாது என்றும், இதனாலெல்லாம் தேவனிடமிருந்து பதில் வந்துவிடாது என்பதையும் நாம் தியானித்து வருகிறோம். சாபம் சூழ்ந்த வாழ்க்கையில், நியாயப்பிரமாண வாத்தியார் செய்த பிரசங்கங்களைக் கையில் வைத்துக்கொண்டு, அறியாமை இருளில் தத்தளித்துக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகளால் இதைத்தான் செய்ய முடியும். என்ன செய்வது, பழக்க தோஷம், அதனால் அவர்களைக் குறைசொல்லி பிரயோஜனமில்லை.

கிறிஸ்துவுடன் உன்னதங்களில் (heavenly places) உட்காரவைக்கப்பட்டிருக்கிற நாம் (எபே. 2:7) அந்த ரீதியில் ஜெபிக்க வேண்டும். சகல ஆசீர்வாதங்களும் நாம் உட்கார்ந்திருக்கும் உன்னதங்களிலேயே இருக்கிறது (எபே. 1:3). உன்னதங்களிலே உட்கார்ந்திருக்கிற நாம், அதே உன்னதங்களில் இருக்கிற ஆசீர்வாதங்களை பெறுவதற்கு இவ்வளவு கஷ்டப்பட வேண்டுமா என்ன, கையை நீட்டி எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே? Yes, எடுக்கிறோம், அதுதான் ஜெபம்!

அடிபட்டு, இறக்கை ஒடிந்து கீழே விழுந்து கிடந்த ஒரு கழுகு, அண்ணாந்து வானத்தைப் பார்த்தது. இறக்கையின் காயம் அதிகமாக இருந்ததால் அதனால் எழும்பிப் பறக்க முடியவில்லை. இறக்கையை அடித்து, அடித்து சோர்ந்து போனது. சில நாட்களுக்கு முன்பு வரை எந்த தடையுமில்லாமல், சுதந்திரமாக, தான் பறந்த வானத்தை ஏக்கத்துடன் பார்த்து பெருமூச்சுவிட்டது. ஒரு நிமிஷம் நிதானமில்லாமல் அவசரப்பட்டுவிட்டதால், இரையைப் பிடிக்க பாய்ந்து கீழ்நோக்கி பறக்கும்போது, மரக்கிளையில் இறக்கை பலமாகப்பட்டு முறிந்து போனது. தன்னுடைய புத்திகெட்டதனத்தை நினைத்துத் தன்னையே நொந்து கொண்டது. "காயம் ஆறி, சுகமான பின்பு, மீண்டுமாக வானத்தில் பறப்பேன். இனிமேல் எந்தக்காலத்திலும்

விளையாட்டாகக்கூட கீழ்நோக்கிப் பார்க்க மாட்டேன். இரை தேடவும் இனிமேல் கன்மலைகளின் சிகரங்களுக்குத்தான் போவேன்" என்று தீர்மானமாக முடிவெடுத்துக் கொண்டது. இங்கே கழுகைப் பற்றி கதை எழுதுவது என் நோக்கமல்ல, நம்முடைய நிலவரம் என்ன? சிந்திப்போம்.

அடுத்ததாக ஜெபத்தில் நம்முடைய அதிகாரத்தை **(authority)** ஐ பயன்படுத்த வேண்டும். நாம் தேவனைப் போலவே இருக்கிறோம். அவரைப் போலவே நம்மால் செயல்பட முடியும், அவ்விதமாகத்தான் அவர் நம்மை சிருஷ்டித்திருக்கிறார். அவர் எப்படி செயல்படுகிறார்? வார்த்தைகளை அனுப்பி செயல்படுகிறார்... சகலத்தையும் சிருஷ்டிக்கிறார். ஆதி. 1 ஆம் அதிகாரம் முழுவதிலுமாக இதை நாம் பார்க்க முடியும். அவர் சொல்லச்சொல்ல ஒவ்வொன்றாக உருவாகிறதைப் பார்க்கிறோம். ஜெபத்தை பற்றிய நம் பார்வை **(outlook)** மாற வேண்டும். பழைய பஞ்சாங்கத்தையே பாடிக்கொண்டு திரியக்கூடாது. நம்மால் முடியாத பழைய ஏற்பாட்டின் காரியங்களை, நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களைத்தான் தேவன் சிலுவையில் முடித்துவிட்டாரே! மல்கியாவுக்குப் பிறகு பழைய ஏற்பாடு முற்றிற்று (முடிந்தது) என்ற வார்த்தைகளைப் பார்த்த பிறகும், நமதாண்டவர் இயேசுகிறிஸ்து சிலுவையிலே அனைத்தையும் செய்து முடித்து "முடிந்தது" என்று சிலுவையில் அறிக்கையிட்டதைத் தியானித்தும் கூட அதைப்பற்றி தொடர்கதை எழுதிக்கொண்டிருப்பவர்களைத்தான் இன்று சபை முழுவதிலுமாகப் பார்க்க முடிகிறது.

நம்முடைய அதிகாரத்தை எப்படி பயன்படுத்துவது? அது அப்படியொன்றும் கஷ்டமான விஷயம் கிடையாது. நாம் பேசிப் பேசி நம்முடைய அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டும். கண்டதையெல்லாம் அல்ல, வேத வசனத்தை - அவற்றிலிருக்கும் ஆசீர்வாதமான வாக்குத்தத்த வாசகங்களை எடுத்து பேச வேண்டும். "... தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ... தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான்... அப். 13:22." என்னுடைய சித்தத்தை நானே செய்வேன் என்று தேவன் சொல்லவில்லை. அவரால் செய்ய முடியும்தான், என்றாலும் பூமிக்கு மனிதனை **incharge-** ஆக வைத்திருப்பதினால், எனக்குச் சித்தமானவைகளை அவன் (தாவீது - அதாவது மனிதன் - இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகளாகிய நாம்தான்) செய்வான் என்கிறார். அதனால் தேவனுடைய சித்தத்தை இந்த பூமியின் மீது செய்வது அவரல்ல, அவர் சார்பாக அவருடைய பிரதிநிதிகளாக இருக்கும் நாம் தான் செய்ய வேண்டும் என்றும் பார்க்கிறோம்.

அவருடைய சித்தத்தை எப்படிச் செய்வது? அதுவும் பெரிய வேலை அல்ல, சொல்லிச் சொல்லி செய்ய வேண்டும். எப்படி? "கோரேசைக் குறித்து: அவன் என் மேய்ப்பன்; அவன் எருசலேமை நோக்கி நீ கட்டப்படு என்றும், தேவாலயத்தை நோக்கி நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, எனக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவான் ... ஏசா. 44:28" தேவன் தாவீதுக்கென்று தனியாக ஒரு பைபிளையும், கோரேசுக்கென்று தனியாக ஒரு பைபிளையும் எழுதிக் கொடுக்கவில்லை. சகல ஜனங்களுக்கும் (நமக்கும்) சேர்த்துத்தான் கொடுத்திருக்கிறார். தேவன் எதையுமே பூமியின் மேல் செய்வதில்லையென்பதையும், அவருக்குப் பதிலாக நாம்தான் செய்ய வேண்டும் என்பதையும், சொல்லிச் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்பதையும் அதிக நிச்சயமாக அறிந்து கொள்கிறோம்.

"கர்த்தரிடத்தில் மாத்திரம் நீதியும் வல்லமையுமுண்டென்று அவனவன் சொல்லி தேவனிடத்தில் வந்து சேருவான்; ஏசா. 45:24" "அவர்கள் தங்களை பரிசுத்த நகரத்தார் என்று சொல்லி, ... ஏசா. 48:2"

தேவனுடைய சித்தத்தை எப்படி தெரிந்து கொள்வது? இது மிக முக்கியமான கேள்வி. ஏனென்றால் அவருடைய சித்தத்தைத் தெரிந்து கொண்டால்தான், அவருக்குச் சித்தமானதை இந்தப் பூமியின் மீது பேச முடியும். அவருடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ளாமல் நாம் எதையும் பேசி உருவாக்க முடியாது. அவருடைய சித்தத்தைத் தவறாக புரிந்து கொண்டால்? அது அதிக பிரச்சனையான ஒன்று. அவருக்குச் சித்தமில்லாததைத் தவறாகப் பேசுவோம், தவறானது நடந்துவிடும். அதுமட்டுமல்ல சாத்தானின் சித்தம் பூமியில் நடக்க அது பாதை வேறு போட்டு கொடுத்துவிடும். அதனால் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானதொன்றாக இருக்கிறது. அதை வேத வசனங்களில் இருந்துதான் அறிந்து கொள்ள வேண்டும். வேத வசனங்களை விட்டுவிட்டு, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ள நீங்கள் வேறு எங்காவது போவீர்கள் என்றால்? நீங்கள் யாரிடமாவது ஏமாறப் போகிறீர்கள் என்று அர்த்தம்! வேதத்தை விட்டுவிட்டு வெளியேயிருந்து ஒரு காரியத்தை எடுத்து, அதை தேவசித்தமாக நினைத்து அதை யாருக்காவது ஆலோசனையாக சொல்லுவீர்களானால்? நீங்கள் அவர்களை ஏமாற்றப்போகிறீர்கள் என்று அர்த்தம்!

அவருடைய சித்தத்தை வேதவசனத்தில் இருந்து மாத்திரம்தான் நாம் பெற்றுக் கொள்ள முடியும். அப்படியானால் ஊழியக்காரர்கள்? அவர்கள் வசனத்தின் அடிப்படையில் தேவசித்தத்தை எடுத்துச்

சொல்வார்களானால்; check பண்ணிவிட்டு சரியாக இருந்தால் எடுத்துக்கொள்ளலாம். “இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மத். 7:28.” இயேசு கிறிஸ்து போதித்த அதே வேதத்தின் வசனங்களைத்தான் வேதபாரகர்களும் போதித்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்து அதிகாரத்துடன் போதிக்கிறார், வேதபாரகர்களுக்கு அப்படி போதிக்கமுடியாமல் போனது, ஏன்? வேதபாரகர்கள் இன்னும் நியாய்பிரமாணத்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறாமல் இருந்ததால், கண்கள் திறக்கப்படாமல் இருந்ததால், சிவப்புக் கண்ணாடி போடப்பட்டிருந்ததால், அடிமைத்தனத்தையே அவர்கள் போதித்தார்கள்.

இன்றளவும் சபையில் அதே நிலவரங்களைத்தான் பார்க்க முடிகிறது. அடிமைத்தனத்திற்குள்ளாக இருந்த சபைகளுக்குள் சென்று பவுல் அதிகாரத்துடன் பிரசங்கித்தபோது பல பிரச்சனைகள் வெடித்துச் சிதறுவதை நிருபங்கள்தோறும் பார்க்கிறோம்.

“அப்போது பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, ... மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள். மிகுந்த தர்க்கம் உண்டானபோது, ... (அப். 15: 5, 7)”

“... யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் (பேதுரு) புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து (நியாயப்பிரமாணத்துக்கு மீண்டுமாய் அடிமைப்பட்டு) விலகிப் பிரிந்தான். மற்ற யூதரும் அவனோடேகூட மாயம்பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான். இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்; யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம் பண்ணலாம்? (கலா. 2: 12-14)”

புதிய உடன்படிக்கையின் சத்தியத்தை நியாயப்பிரமாண சபைகளுக்குள் கொண்டு போய் பவுல் பிரசங்கிக்க ஆரம்பித்த நாள் முதற்கொண்டு இதே போல பல எதிர்ப்புகளையும், பிரச்சனைகளையும் பவுல் சந்திக்கிறார். நாங்களும் அதைப்போலவே பல எதிர்ப்புகளையும், பிரச்சனைகளையும் சந்தித்து வருகிறோம். புதிய உடன்படிக்கைக்கடுத்த ஆசீர்வாதங்களை பிரசங்கித்தால் எதிர்க்கிறார்கள், ஆனால் எல்லோரும் ஆசீர்வதிக்கப்படவே விரும்புகிறார்கள். பழைய உடன்படிக்கைக்கடுத்த தரித்திர உபதேசங்களுக்கு ஆதரவு தருகிறார்கள்... ஆனால் தரித்திரத்தை விரும்புவதில்லை, புறக்கணிக்கிறார்கள், வெறுத்துத் தள்ளுகிறார்கள்! இது எப்படி இருக்கு?

இரண்டுமே தேவை என்கிறார்கள். ஆனால் அது சரியாக வராதே? நான் முன்பே எழுதினபடி துளி விஷம் விழுந்தாலும் பாத்திரத்தில் இருக்கும் மொத்த திராட்சை ரசமும் விஷமாகிவிடும். 5 ஆப்பிள் பழங்களைச் சாப்பிட்டுவிட்டு, அதற்கு மேலே ஒரு துளி அமிலத்தை குடித்தால்? ஆப்பிள்கள் அல்ல, ஆசீட்தான் வேலை செய்யும்! உடலின் உணவு மண்டலத்தையே அரித்துவிடும். எத்தனை டாக்டர்கள் முயன்றாலும் உயிரை மீட்பது கேள்விக்குறியாகிவிடும்.

புது திராட்சைரசத்தை ஏற்கெனவே நொந்து நூலாகிப்போய் மூலையில் போடப்பட்ட துருத்தியை எடுத்து வந்து அதில் ஊற்றுகிறார்கள். வெடிப்புகளின் வழியாக ரசம் சிந்திப்போகிறது. என்றாலும் அந்த பழைய துருத்தியை விட மனதில்லை! (மத். 9:17, மாற்கு. 2:22, லூக். 5:37). ஏன் இப்படி நடக்கிறது? “... ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார். லூக். 5:39.” இதுதான் காரணம்! பெரும்பாலும் புறமதஸ்தர்களை இரட்சிப்புக்குள் நடத்துபவர்கள் நியாயப்பிரமாண உபதேசத்திற்குட்பட்ட சபையினர்தான். சுவிசேஷத்தின் தோல்விக்கு காரணமான காரியங்களில் இதை முதலாவதாகக் கொள்ளலாம். இரட்சிக்கப்பட்ட இளம் விசுவாசியின் உள்ளான மனிதன் அதிக பசியுடன் இருப்பான். சபை மூலமாக கிடைக்கும் பழைய திராட்சை ரசத்தை வயிறு நிரம்ப குடித்தும் விடுகிறான்! பிறகென்ன, அதுவே அவர்களுக்குப் பிடித்துப்போய்விடுகிறது!

அமெரிக்காவில் நடந்த (சமீபத்தில் வெளி வந்த) ஒரு உண்மை சம்பவத்தை இடம் பெயர் குறிப்பிடாமல் சொல்லுகிறேன், பலர் இதைக் கேள்விப்பட்டிருக்கலாம். மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் தன்னுடைய சொந்த மகளை தன் வீட்டின் அடித்தளத்தில் அமைக்கப்பட்ட ஒரு காங்கிரீட் பாதாள பதுங்கரைக்குள்

24 வருஷங்களாக யாருக்கும் தெரியாமல் (அந்தப் பெண்ணின் தாயாருக்குக் கூட) அடைத்து வைத்து பாலியல் கொடுமைப்படுத்தியிருக்கிறான். உயிர்வாழ்வதற்கு தேவையான காற்று, உணவு ஆகியவற்றை ஏற்படுத்தி, சூரிய வெளிச்சத்தை பார்க்க முடியாத அளவிற்கு ஒழுங்கும் கிரமுமாக எல்லாவற்றையும் ஏற்படுத்தியிருக்கிறான். 24 வருஷங்களில் 6 குழந்தைகளுக்குத் தாயானாள்(?) அந்த விவரிக்கமுடியாத, வர்ணிக்கமுடியாத பரிதாபத்திற்குரிய அந்த பெண்! வெளியுலகத்தையே பார்க்காமல், (வானம், வெளிச்சம், சூரியன், மரங்கள், பூக்கள், மிருகங்கள் என்று எதையுமே பார்க்காமல்) வளர்ந்த அந்தக் குழந்தைகளின் பயங்கரப்படத்தக்க சூழ்நிலை! நினைத்துப் பார்க்கும்போதே எனக்கு மூச்சுத் திணறுவதால் சம்பவத்தை இதற்குமேல் விளக்கவில்லை. முடிவில் எப்படியோ விடுதலையாகின்றனர்... அந்த கோரமான மனிதன் தற்போது கைது செய்யப்பட்டு, விலங்கிடப்பட்டு, தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கிறான்.

சாத்தானின் கதையை விட்டுவிடுவோம், அவன் ஒழிந்து போக வேண்டியவன்தான். ஆனால் பாதிக்கப்பட்ட அந்த பரிதாபமான குழந்தைகளின் நிலவரமும், கலவரமாகிப்போனதுதான் பரிதாபம்! பாதாளத்திற்குள் இருந்து மீண்டுவந்த அவர்களை இந்த உலகத்துடன் பொருத்தி வாழ வைக்க அந்த பெண்ணின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், மருத்துவர்கள், மனோதத்துவ நிபுணர்கள், ஆலோசகர்கள் என்று ஒரு கூட்டத்தார் ஒரு உலக மகா போரையே நடந்தி வருகின்றனர், முடிவு?(!) அவர்களுக்கு வாழ்வு கிடைக்குமா? "... மனுஷரால் இது கூடாதுதான், தேவனால் இது கூடாததல்ல, தேவனாலே எல்லாம் கூடும் ... மாற். 10:27"

போதைப் பழக்கத்திற்கு (வெற்றிலை, சிகரெட், சாராயம், கஞ்சா) அடிமைப்பட்டவர்களை அந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்பது எவ்வளவு கஷ்டமாகிவிடுகிறது! அதே பரிதாபமான சூழ்நிலைதான் இங்கே ஆவிக்குரிய ரீதியில் நடக்கிறது, ஆவி மனிதன் தள்ளாடுகிறான்! அவர்களைப் பார்த்து கோபப்படுவதோ, எரிச்சலடைவதோ, முறுமுறுப்பதோ கூடாது... அதனால் பிரயோஜனமும் இல்லை. எதிர்ப்புகள் அவர்களுடைய பிடிவாதத்திற்கு எண்ணெய் வார்த்து தீ மூட்டிவிடுகிறது. நாம் செய்ய வேண்டியது: "எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். 2 தீமோத். 2:26"

அதுமட்டுமல்ல, புதிய உடன்படிக்கைவாதிகளாகிய நாம் சுவிசேஷம் அறிவித்து புறமதஸ்தர்களை கிறிஸ்துவுக்குள் நடத்தும் விஷயத்தில் நியாயப்பிரமாணவாதிகளை மிஞ்ச வேண்டும், முந்த வேண்டும், முண்டியடிக்க வேண்டும்! இதை வெற்றியாக செய்துவிட்டோமானால் புதிதாகப் பிறக்கும் இளம் குழந்தை விசுவாசிகள் கண்ணைத் திறந்தவுடனேயே ஏதேன் அனுபவத்திற்குள் போய்விடுவார்கள். வனாந்திர மார்க்கத்தில் அவர்களை இழுத்தடிக்க வேண்டிய அவசியமும் இருக்காது.

## கூடாதது எதுவுமில்ல, என்னால் கூடாதது எதுவுமில்லை!:

"... மனுஷரால் இது கூடாதுதான், தேவனால் இது கூடாததல்ல, தேவனாலே எல்லாம் கூடும் ... மாற். 10:27" இந்த வசனத்தில் பார்க்க வேண்டிய விஷயங்கள் இன்னும் சில உண்டு, புதிய உடன்படிக்கையின் பச்சைக் கண்ணாடியை மாட்டிக்கொள்ளுங்கள். அதாவது நாம் தேவனைப் போலவே படைக்கப்பட்டிருக்கிறோம், தேவனைப் போலவே சகலத்தையும் செய்யும் ஆற்றலையும் நமக்குள் பெற்றிருக்கிறோம் என்ற இரகசியம் தெரியாத மனுஷரால் எதுவும் செய்யக்கூடாதுதான்! ஆனால் சத்தியத்தை அறிந்த உங்களுக்கும் எனக்கும் எல்லாம் கூடும்! "... விசுவாசம் உங்களுக்கு இருந்தால் .. உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது ... மத். 17:20" தேவன் பூமியின்மேல் மனிதனுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரங்களைப் பார்க்கும்போது; சில நேரங்களில் நமக்கு அது சற்று அதிகப்படியாகக்கூடத் (more than enough) தோன்றும். அந்த அளவிற்கு நமக்கு மதிப்பு கொடுத்து உயர்த்தி வைத்திருக்கிறார். யோவான் 20:23-ல் இயேசு: "எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்(!)"

பூமி மனுபுத்திரர்களாகிய நம்முடைய அதிகாரத்தின் கீழ் இயங்குவதால்; அவருடைய மன்னிப்புகூட நம்மைத் தாண்டித்தான் வருகிறது, கவனியுங்கள்! கவனித்து, ஆச்சரியப்படுங்கள், அதோடு நின்றுவிடாமல் உடனடியாக எல்லோரையும் மன்னித்தும் விடுங்கள். நமக்கு எதிராக வருபவர்கள் மனிதர்கள் அல்ல, மனிதர்களின் மூலமாக வான மண்டலத்தின் பொல்லாத ஆவி சேனைகள்தான் நம்மைத் தாக்குகின்றன என்பதை முன்பே பார்த்தோம். அப்படியிருக்க மனிதர்களை மன்னிக்கத் தயக்கம் காட்டுவது ஏனோ? நாம்

நம்மைப்போலவே தேவசாயலாகப் படைக்கப்பட்டிருக்கிற எந்தவொரு மனுஷ(ஷியை)னையும் நேசிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். அது நம்மேல் விழுந்த கடமையாய், கட்டாயமாயிருக்கிறது. ஏனென்றால் நாம் தேவனைப்போலிருக்கிறோமே, தேவன் அன்பாகவே இருக்கிறார்.

அன்பு என்றால் அப்படியிப்படிப்பட்ட அன்பு அல்ல. தேவனிடம் 1000 சாக்லேட்டுகள் இருப்பதாகக் கொள்வோம். ஒவ்வொரு சாக்லேட்டும் இனிப்பு! இதென்ன பெரிய விஷயம்? சாக்லேட்டுன்னா இனிக்கத்தானே செய்யும்? இப்போது சொல்ல வருகிற முக்கியமான விஷயம் என்னவென்றால்; சாக்லேட்டுகளைக் கையில் வைத்திருக்கிற தேவனே சாக்லேட்டாக இருப்பாரானால்? எங்கே கடித்தாலும் இனிக்கிறது! அவர்தான் இயேசு! "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; ... சங். 34:8"

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை இந்தப் பூமியின் மேல் சரியான விதத்தில் இயக்க இந்த அன்புதான் பூரணமாக உதவுகிறது. தேவனிடமிருந்து மன்னிப்பைப் பெறாத ஒவ்வொரு பாவியான மனுஷனாலும் நம்முடைய பூமிக்குத்தான் பிரச்சனை. அவனால் சீரழிக்கப்படுகிற பூமியின் சாப வெளிப்பாடுகள் நம்மைத்தான் தாக்குகின்றன... அதனால் நமக்கு மட்டுமல்ல, நம் எல்லைக்குட்பட்டவர்களுக்கும் பாதிப்புகள் வருகின்றன. நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற முடியாதபடிக்கு நம்மை எதிர்க்க, சாத்தான் இப்படிப்பட்ட மனிதர்களின் தோள்மேல் ஏறிக்கொண்டுதான் வருகிறான். கசப்பையும், வெறுப்பையும் மனதுக்குள் புதைத்து வைத்து வேர்விடச் செய்து கொண்டிருப்போமானால், அது நசுக்கப்பட்ட சாத்தானின் தலைக்குள் இருக்கும் சின்னாபின்னமான மூளையைக்கூட வேலை செய்ய வைத்துவிடும்! அவன் யார் நம்மைப்போலொத்த மனிதர்களின் மேல் குதிரையேற? மனிதர்களைச் சாத்தானின் கைகளில் விட்டுக்கொடாதிருப்போம். நாமே நம் தலையில் மண்ணை அள்ளி போட்டுக் கொள்ளும் பைத்தியக்காரத்தனம் இனியும் வேண்டாம்.

பூமியின் சகல ஜனங்களும் தேவனிடம் இருந்து மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு இரட்சிப்டைவதற்கேதுவாக, முதலில் நாம் அவர்களுக்கு மன்னித்து, இயேசுவுக்கு வழியை ஆயத்தம் செய்து, அவர் வரக் காத்திருப்போம்.

ஒரு தாய் மக்கள் நாம் என்போம்!

ஒன்றே எங்கள் குலம் என்போம்!

தலைவன் ஒருவன்தான் என்போம்!

சமரசம் எங்கள் வாழ்வென்போம்!

தேவனை அறியாத உலகத்தானுக்கு இந்த அளவுக்கு விழிப்புணர்வு இருக்குமானால்... உங்களுக்கும் எனக்கும் எவ்வளவாய் இருக்க வேண்டும்? நான் தேவனை அறியாத உலக ஜனங்களின் சிந்தனைகளை (thinking) அடிக்கடி உதாரணமாகக் காட்டும் காரியம் விமரிசனத்திற்கு உள்ளாகியது. நான் காரணமில்லாமல் எழுதவில்லை.

## மனிதனை அறிந்து கொள்ளுவோம்:

முதலில் நாம் அறிய வேண்டியது: உலகம் தோன்றிய நாள் முதல் தோன்றிய ஆதாம் ஏவாள் தொடங்கி, இப்போது பிறந்து கொண்டிருக்கிற மனிதன் வரை, பூமியின் முடிவு வினாடிவரை தோன்றிக்கொண்டேயிருக்கப்போகிற மனிதன் வரை எல்லோரும் மனிதர்களே! நாம் மாத்திரம் அல்ல, தேவனை அறியாத பூவுலக மக்கள் எல்லோருமே அவருடைய சாயலில்தான் படைக்கப்பட்டிருக்கிறார்கள். சாத்தான் அதை அவர்கள் தெரிந்து கொள்ளாத வகையில் மறைத்து, அவர்களை ஆளுகை செய்கிறான், அவ்வளவுதான்! அவர்களும் தேவனைப் போலத்தான் இருக்கிறார்கள்; ஆனால் அந்த தெய்வத்துவம் அவர்களுக்குப் புரியாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சாத்தான் அவர்களுடைய தெய்வத்தையே அவர்களுக்கு மறைத்தும் விட்டான்! அவர்கள் ஆண்டவர் இயேசுவின் ஆளுகைக்குள் வந்துவிடக்கூடாது என்பதற்காக, சாத்தான் என்னதான் கெஜ கர்ணம் வைத்தாலும்; யுகாயுகங்களாக அவன் தோற்றுக்கொண்டு வருகிறான் என்பதுதான் உண்மை. மனிதர்கள் தங்களுக்குள் தேவனால் பதிக்கப்பட்ட அவருடைய குணாதிசயங்களை அவர்களையும் அறியாமல் தங்களுடைய சிந்தனை, பேச்சு, செயல்கள் மூலம் வெளிப்படுத்தத்தான் செய்கிறார்கள். அப்படி வெளிப்படுத்தாமல் அவர்களால் இருக்கவும் முடியாது; காரணம் அவன் மனிதன், சாதாரணப்பட்ட மனிதனல்ல, தெய்வத்தைப்போலிருக்கும் மனிதன்! தேவசாயலில் உருவாக்கப்பட்ட மனிதன்!

அதனால்தான் அவர்களிலும் குறிப்பிட்ட சதவிகிதத்தினர் நல்லவர்களாக இருக்கின்றனர், நல்ல கருத்துக்களை வெளிப்படுத்துகின்றனர், அவைகளில் சில வேத வசனத்தைச் சார்ந்த வெளிப்பாடுகளாகக்கூட இருக்கின்றன. அவர்கள் வேதம் வாசிப்பதில்லை, தேவனை அறியவும் இல்லை, என்றாலும்: வசனங்களை உற்றுக் கவனியுங்கள் - "... புறஜாதிகள் (உலகத்தார் -Gentiles) சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, ... அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை (நற்கிரியைகள்) தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். ...தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து (the secrets of men) நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும். ரோமர். 2:14, 15, 16"

"மனுஷனுடைய இருதயத்திலுள்ள யோசனை (advice) ஆழமான தண்ணீர் போலிருக்கிறது; புத்திமானோ அதை மொண்டெடுப்பான். நீதி. 20:5" எல்லா மனிதர்களின் இருதயத்திலும் (நினைவு சார்ந்த மூளைப் பகுதி) பலவிதமான சிந்தனைகள் எப்போதுமே தோன்றிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அவை எல்லாமே சரியானவையாக, தேவனுடைய சித்தத்திற்கு ஏற்றவையாக இருப்பதில்லை, ஏனென்றால் அவர்களுக்குத் தேவனையேத் தெரியாது. அதனால் அங்கொன்றும் இங்கொன்றுமாக, பட்டும்படாமலும், தொட்டும் தொடாமலும் தேவ சித்தத்திற்கிசைவான சிந்தனைகள் சிதறுகின்றன. அவைகள் நல்லவைகளாக இருப்பதால், அவற்றைக் கதைகள், கட்டுரைகள், இலக்கியங்கள், செய்யுள்கள், காப்பியங்கள், திரைப்படங்கள், அறிவு சார்ந்த புத்தகங்கள், இப்படி பல ரீதியில் வெளியிடப்படுகின்றன. அவைகள் மனிதர்களைப் போய் சேர்ந்து, அவர்களை சிந்திக்க வைக்கிறது, நல்வழிப்படுத்துகிறது. மனிதன் மிருகம்போலாகிவிடாதபடி, காட்டுமிராண்டித்தனம் அவனுக்குள் வராதபடி ஓரளவுக்கு அவனைக்கட்டுப்படுத்துகிறது. அப்படிப்பட்ட காரியங்களிலிருந்து வேதத்தின் வெளிப்பாடுகளுடன் ஒத்த சில காரியங்களைக் குறிப்பெடுப்பது (Reference) தவறு என்றால்? அது ஒட்டுமொத்தமாகஅவர்களையே புறக்கணிப்பதைப் போலாகிவிடும். அப்படிச் செய்தோமானால் நமக்குள் தேவ அன்பு நிலைத்திருப்பது எப்படி? அவர்களுக்காகவும்தானே இயேசு வந்தார்? இயேசுவின் இரத்தம் அவர்களின் பாவங்களையும் சுத்திகரித்திருக்கிறதே? நம்முடைய மலரும் நினைவுகள் பகுதியை திறந்து பார்த்தால் முழுவதும் அவர்களைப் போலத்தானே நாமும் இருந்தோம்? அவர்களைவிட மோசமாகவும் சில விஷயங்களில் இருந்தோம் என்ற இரகசியம் நம் மனதுக்குத் தெரியுமே!

இதையெல்லாம் எழுதி தேவனை அறியாத உலக ஜனங்களுக்கு வக்காலத்து வாங்குவது என் நோக்கமல்ல, அப்படியே வாங்கினாலும் அது தவறுமல்ல, அவர்களும் இயேசுவுக்குள் வரவேண்டுமே! அவர்களைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதால் அவர்களைக்குறித்த நம் ஆத்மபாரம் அதிகமாகும். "... நீ தீழ்ப்பானதினின்று விலையேறப்பெற்றதைப் பிரித்தெடுத்தால், என் வாய் போலிருப்பாய்; நீ அவர்களிடத்தில் திரும்பாமல், அவர்கள் உன்னிடத்தில் திரும்புவார்களாக என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே. 15:19". அவர்களின் யோசனைகளை குறிப்பெடுப்பதால் நாம் அவர்களைப் போலாகிவிடுவோம் என்றெல்லாம் பயப்பட வேண்டியதில்லை. பூவுடன் சேர்ந்து நாறும் மணம் பெறும்! தேவனை அறியாதவர்கள் ஏதோ தீண்டத் தகாதவர்கள் அல்ல. அப்படி நினைக்கத் தோன்றுகிறது என்றால் இன்னும் பரிபூரணமாக சுவிசேஷத்தினை நீங்களும் நானும் இன்னும் சரியாக அறியவில்லை என்றுதான் அர்த்தம்.

"நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களைஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன். யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு... யூதனைப் போலவும், ...நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன். (under the law) நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு... நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன். ... அப்படியிருந்தும் நான் தேவனுக்குமுன்பாக... கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உள்ளானவனாயிருக்கிறேன். (without law) பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன். (1 கொரி. 9: 19-22)" பவுலுக்கே இத்தனை பிரச்சனைகள் இருந்தன. அதனால் நமக்கும் இருக்கத்தான் செய்யும் என்று எல்லா சூழ்நிலைகளுக்குள்ளும் சென்று மாட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. பவுலின் காலகட்டங்களில் இருந்த நெருக்கடிகள் இப்போது இல்லை. பரிசுத்தாவியானவரின் வெளிப்பாடுகள் அதிகமாக இருக்கும் காலகட்டம் இது. கிருபையும் அதிகமதிகமாக பெருகிவருகிறது. ஒரு சில தேசங்களைத் தவிர பூமியின் சகல தேசங்களிலும் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல்கள் இருக்கின்றன. சுவிசேஷத்தின் இரகசியத்தையும் அதே திறந்த வாசல்கள் வழியாக கட்டவிழ்த்துவிட்டுவிடலாம்! கேள்வி கேட்க ஆள் கிடையாது, அப்படியே கேட்டாலும் கேட்டுக்கொண்டே இருக்கட்டும், அவர்களால் தடுத்து நிறுத்த முடியாது!

தேவனைக்குறித்த அறிவு பெருகியிருக்கும் இந்நாட்களில் - நாம் தேவனைப் போலிருக்கிறோம் என்ற நம்மைக்குறித்த அறிவு பெருகியிருக்கும் இந்நாட்களில் - நாம் எதற்காக பயப்பட வேண்டும்? யாருக்காக பயப்பட வேண்டும்? பவுல் அப்போஸ்தலன் வாழ்ந்த நாட்களிலும் நியாயப்பிரமாண பாரம்பரியங்கள் நிரம்பிய சபைகள்தான் இருந்தன. அப்படிப்பட்ட ஆலயங்களுக்குள் சென்று பவுல் பிரசங்கிக்க வேண்டிய சூழ்நிலை இருந்ததால்; சத்தியத்தைக் குறித்த அடிப்படை அறிவு கூட இல்லாதவர்கள் பெருமளவில் இருந்ததால் கொஞ்சம் flexible ஆக இருக்க வேண்டியதாயிருந்தது. பவுலின் காலக்கட்டங்களில் இருந்து நெடுந்தொலைவு வந்துவிட்ட நம் நாட்களிலும் அதே scale-ஐ வைத்துக்கொண்டு, அளந்து, தப்புக்கணக்குப் போட வேண்டிய அவசியமுமில்லை. பரிசுத்தாவியானவரின் நேரடி மேற்பார்வையில் ஊழியம் செய்து கொண்டிருக்கும் நமக்கு இப்படிப்பட்ட தர்மசங்கடங்கள் வராது. அப்படியே வந்தாலும் நின்று நிதானித்து, சரி செய்து நடக்க ஆவியானவர் உதவி செய்வார். நமக்குப் பின் வரும் அடுத்த சந்ததியினருக்கு இன்னும் அதிக சாத்தியக்கூறுகள் உண்டு. "நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள். 1 கொரி. 7:23"

வார்த்தைகளைப் பற்றியும், வார்த்தைகளின் வல்லமையைப் பற்றியும், வார்த்தைகள் எப்படி புறப்பட்டுச் சென்று இந்தப் பூமியின் மீது கிரியை நடப்பிக்கிறது என்பதையும் பார்த்து வருகிறோம். நம் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகள் எல்லாமே காணும் பொருளாக மாறிவிடுகிறது என்ற அதிர்ச்சி தரும் உண்மையை பார்த்தோம்! இப்போது நம் கண் முன்னால் இருக்கும் பூமியும், அதன் பயங்கரங்களும், அதே நேரத்தில் நன்மையானவைகளும் இதுவரை பூமியின் மீது வாழ்ந்து மடிந்த, வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதர்கள் பேசிய வார்த்தைகளினால் உருவானது என்பதையும் தியானித்தோம். இதைப்பற்றி கணக்கிலடங்காத வெளிப்பாடுகள் கடல் அலைகளைப் போல சீறிப்பாய்ந்து கரையை தொட்டுத் தொட்டுப் போய்க்கொண்டே இருக்கின்றன. அவற்றில் சில அலைகளைத்தான் என்னால் பிடிக்க முடிந்தது, அடக்கவும் முடிந்தது. அதை உங்களுக்குத் தந்து கொண்டிருக்கிறேன். "இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக்குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்துகொள்ளலாம்; எபே. 3:4,5"

சர்வவல்லமையுள்ள நம் தேவன் தன் குமாரனாகிய வார்த்தையால் (!) தன்னுடைய சகல படைப்புகளையும் (Universe) உண்டாக்கினார். பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் வார்த்தையால் உருவாக்கினார். நம்மையும் வார்த்தையினால்தான் உருவாக்கியிருக்கிறார். "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார். யாக். 1:18." அதாவது வசனம் வார்த்தையினால்தான் எழுதப்பட்டிருக்கிறது. நம்மை மண்ணினால்தானே உண்டாக்கினார் என்று கேள்வி கேட்பவர்களுக்கும் பதிலைச் சொல்லிவிட்டு கடந்து போகிறேன். இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருப்பது நம் ஆவிக்குரிய உள்ளான மனிதனை. அந்த மனிதனின் கூடாரமாகிய சரீரத்தை மண்ணினால் உருவாக்கினார்; என்றாலும் அந்த மண்ணின் மூலக்கூறுகள் வார்த்தைதான்! கர்த்தருடைய "வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வ சேனையும் (இதில் பூமியும் உண்டு) உண்டாக்கப்பட்டது. சங். 33:6"

தேவனைப் பற்றிய சரியான ஒரு படம் (image) கிடைக்காமல் இளம் விசுவாசிகள் குழம்பிப் போய் இருக்கிறார்கள். தேவனை அறியாத புறமதஸ்தர்கள் சாத்தானின் ஆளுகைக்குள் சிக்கி, நொந்து, நூலாகி, ஒரு வழியாக இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவருடைய ஆளுகைக்குள் வருகிறார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் ஏற்படுத்திய புதிய உடன்படிக்கையின் அடிப்படையிலான கிருபையால் இரட்சிக்கப்படுகிறார்கள். "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; எபே. 2:8." கிருபை பிரமாணத்தினடிப்படையில் இரட்சிக்கப்படுகிறார்கள், ஆனால் அந்த இரட்சிப்பைக் காப்பாற்றிக் கொள்ள அதே விசுவாசப்பிரமாணத்தை சேராமல்; கிரியை பிரமாணமாகிய நியாயப்பிரமாணத்தை நாடுகிறார்கள்.

மாத்திரைகள் வியாதிகளை குணமாக்குகிறது; அந்த மாத்திரைகள் இருக்கும் பாட்டிலுக்குள்ளேயே வியாதிக்கிருமிகளும் இருக்குமானால்? ... வித்தியாசமான விந்தையான டாக்டர்கள்! அந்த பாக்டீரியாக்களைக் கண்டுபிடித்து; வெளிச்சம் போட்டுக் காட்டுபவர்களுக்கு அடி உதை! (வார்த்தைகளால் தான்!) ஆனால் இதனால் எல்லாம் சத்தியத்தை மறைத்து, அடக்கி, பூட்டி வைக்க முடியவில்லை. இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தான் இயேசு சொன்னார்: "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை. மத். 23:13"

பரலோக இராஜ்ஜியம் என்றால்; செத்தபிறகு போகிற மோட்சலோகத்தை தேவன் குறிப்பிடவில்லை.

பரலோக இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதங்களான சகலவிதமான ஐசுவரியங்கள், பொன், சொத்து சுகங்கள், நல்வாழ்க்கை, சந்தோஷம், சமாதானம் ... போன்றவை. ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்போது அவனுக்குப் பரலோக வாசல் திறக்கப்படுகிறது. அவன் விசுவாசத்தோடு அங்கே போய் தனக்குத் தேவையான சகல ஆசீர்வாதங்களையும் எடுத்துக் கொள்ள முடியும். அதற்கான சகல வசதிகளையும் தேவனே விசுவாசம் + வார்த்தை ரூபத்தில் செய்தும் வைத்துவிட்டார். இந்தப் பரலோக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதபடி வேதபாரகர், பரிசேயர்கள் தங்களுடைய நியாயப்பிரமாண உபதேசத்தினால் பரலோக வாசல் கதவுகளை மூடிப்போட்டார்கள். இந்தக் கதை அன்று மாத்திரமல்ல, இன்றும் நடக்கிறது! இனிமேல் என்றும் இந்தக் கதை தொடரக்கூடாது என்பதற்காக நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம். எதிர்த்துக்கொண்டிருக்கும் சாபத்தின் வெளியீடுகளையும், சாத்தானின் பூச்சாண்டி வேலைகளையும் மேற்கொள்ள போராடிக்கொண்டே வந்துகொண்டிருப்பதால் கொஞ்சம் தாமதமாகிறது. என்றாலும் ஜெயித்துக்கொண்டே இருக்கிறோம், ஜெய கர்த்தர் எங்கள் தேவனாக இருப்பதால்!

தேவனைக் குறித்ததான பழைய படத்தை (image) கழட்ட வந்திருக்கிறோம். தேவன் நல்லவர், அவர் அன்பாகவே இருக்கிறார், நம்மைக் குறித்து அவருடைய நினைவுகள் நன்மைக்கேதுவானவைகளே, நன்மை மாத்திரமே செய்கிறார், சகலத்தையும் நன்மையாக முடிக்கிறார், நன்மைகளின் ஊற்று அவர். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும், வேற்றுமையின் நிழலுமில்லை. யாக். 1:17"

## டைட்டானிக் கப்பல் விபத்து:

வார்த்தைகளின் வல்லமையைக் குறித்து அதிகமாகத் தியானித்து வருகிறோம். அதிலும் குறிப்பாக வேத வசனங்களின் அடிப்படையிலான வார்த்தைகளைக் குறித்து நிதானித்து வருகிறோம். இன்னும் கொஞ்சம் ஆழமாகப் போவோம். தவறான வார்த்தைகளை வாயினால் பேசுவது மாத்திரமல்ல, அவற்றை எழுதி வைத்தாலும் அவைகள் தன் வேலையைக் காட்ட ஆரம்பிக்கும். உலகத் தோற்றமுதற்கொண்டு காலாகாலமாக மனிதர்கள் தங்கள் காலத்தின் நிகழ்வுகளை கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகள், காகிதங்கள், மின்னணு எழுத்துக்கள் என்று எழுத்து - வார்த்தை உருவத்தில்தான் பதிவு செய்து வைத்தார்கள், வைக்கிறார்கள். அவைகள் தோண்டி கண்டுபிடிக்கப்பட்டு, எடுத்து வாசிக்கப்பட்டன. அந்த வார்த்தைகளின் அடிப்படையில் அடுத்த சந்ததியார் தங்களுடைய சிந்தனையைத் தொடருகிறார்கள். ஆரம்பக்கட்டத்தில் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியாது. அப்பா, தாத்தா, பூட்டனார் காலங்களில் என்ன நடந்தது என்பதையே சரிவர தெரிந்து கொள்ள முடியாத இந்த உலகத்தில்; பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னதான காரியங்களை அக்கால சுவடுகளை வைத்து தெளிவாக நிதானித்து அறிந்து கொள்ள முடியாது. அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கிற காரியங்களை எடுத்து, தங்களுடைய அனுமானங்கள், சிந்தனைகள், அறிவுசார்ந்த விஷயங்களை சேர்த்து ஒட்டுப்போட்டு ஒரு முடிவுக்கு வருகிறார்கள், அதை எழுதியும் வைக்கிறார்கள்.

அந்தச் சிந்தனைகளை வார்த்தைகளாக பேசுகிறார்கள், கலந்துரையாடல் நடத்துகிறார்கள், தர்க்கிக்கிறார்கள், அதைக்குறித்ததான சொற்பொழிவுகள், மேடைபிரசங்கங்கள் என்று வளர விடுகிறார்கள். முடிந்துபோன சந்ததியின் புதைக்கப்பட்ட வார்த்தைகளுடன் தங்களின் வார்த்தைகளைக் கொக்கி (hook) போட்டு இழுத்துக்கொண்டு வருகிறார்கள். அவை இரத்தமுறிஞ்சும் கொக்கிப்புழுக்களைப் போல ( blood sucking worm) முடிந்துபோன வரலாற்றின் சாபங்களையும் உறிஞ்சி எடுத்துக்கொண்டு வந்து வளர வைக்கிறது. பூமியின் மீது நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாக பெருகிக்கொண்டிருக்கும் சாபத்தின் Ratio (quotient) விகிதாச்சாரம், அளவு அதிகரித்துக்கொண்டிருக்க, சாபமும், பாவமும் அதற்குத் தண்ணீர் பாய்ச்ச, சாத்தானின் பராமரிப்போடு ஓங்கி வளர ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு சந்ததியும் தோன்றி மறையும் ஒவ்வொரு காலக்கட்டங்களிலும் இந்த நிகழ்வு நடக்கிறது.

இப்படியாக, பேசப்படும் வார்த்தைகளால் பூமியில் மோசமான நிகழ்வுகள் நடக்க ஆரம்பிக்கின்றன. சாபம் - அதனால் வரும் பாவங்கள், வியாதிகள், தரித்திரம் போன்றவை பரிணாம வளர்ச்சியடைகின்றன. (பரிணாம வளர்ச்சி என்பது உண்மையல்ல, உதாரண விளக்கத்துக்காக சொல்கிறேன்) உலகளவில் பிரபலமான ஒரு சம்பவத்தைச் சொல்லி விளக்கினால் நான் சொல்லவரும் காரியம் உண்மையென்று விளங்கும். கற்பனையாக எழுதப்பட்ட விஷயங்கள் சில உண்மையாகவே நடப்பதுண்டு. அப்படி நடந்த விஷயங்களில் ஒன்றுதான் "டைட்டானிக் கப்பல் விபத்து." இந்த விபத்து உலகமே அறிந்த ஒன்று. இந்த விபத்து நடப்பதற்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு "மோர்கன் ராபர்ட்சன்" என்ற கதாசிரியர் எழுதிய "டைட்டானிக்

கப்பல் விபத்து என்ற ஒரு நாவல் வெளியானது! நான் விஷயத்தை தொடங்குமுன்பே புரிய ஆரம்பித்திருக்கும்!

நாவலின் கதை: ஆடம்பரமான சொகுசு கப்பலான டைட்டானிக் தன்னுடைய முதல் பயணத்தை (கன்னிப் பயணத்தை) அட்லாண்டிக் பெருங்கடலில் தொடங்குகின்றது. எந்த நிலையிலும் அந்த கப்பல் மூழ்காது என்ற பெரு(மை)மிதம் அதை வடிவமைத்தவர்களுக்கு இருந்தது. இப்படிப் பெருமையோடு பயணத்தைத் தொடங்கிய கப்பல் ஒரு பனி மலையில் மோதி விபத்துக்குள்ளாகி, நூற்றுக்கணக்கான பிரயாணிகள் உயிரிழப்பதே அந்த நாவலின் கரு!

14 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த நாவலின் வார்த்தைகள் நிஜமாகவே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறியது! நாவலில் வரும் கப்பலின் பெயரும், நிஜக்கப்பலின் பெயரும் ஒன்றே, அது டைட்டானிக்! நாவலில் வரும் கப்பலைப் போலவே நிஜ டைட்டானிக் கப்பலும் தன் முதல் பயணத்திலேயே விபத்துக்குள்ளாகியது. நாவலில் குறிப்பிட்டபடியே அட்லாண்டிக் பெருங்கடலிலேயே அந்த விபத்து நடந்தது. நாவலில் வரும் மனிதர்களின் பெருமைக்கொத்த பெருமிதம் டைட்டானிக் கப்பலின் வடிவமைப்பாளர்களுக்கும் இருந்தது. இந்தக் கப்பல் என்ன நடந்தாலும் மூழ்காது என்று சவாலிட்டார்கள். கதை டைட்டானிக் கப்பலைப் போலவே, நிஜ டைட்டானிக் கப்பலும் பனி மலையில் மோதியது! கதையில் வந்த அதே ஏப்ரல் மாதத்தில் இந்த பயங்கரச் சம்பவம் நடந்தேறியது.

கதைக் கப்பலின் நீளம் 800 அடி, நிஜக் கப்பலின் நீளம் 862 அடி. இரண்டு கப்பல்களிலும் (கதைக் கப்பல் + நிஜக் கப்பல்) தலா மூன்று புரொப்பல்லர்கள் இருந்தன. விபத்து ஏற்படும்போது கதையில், கப்பல் 25 நாட்டிகல் மைல் வேகத்தில் சென்றுகொண்டிருந்ததாகச் சொல்லப்பட்டிருந்தது, நிஜக் கப்பல் விபத்து நடந்தபோது அதுவும் 23 நாட்டிகல் மைல் வேகத்தில்! இரண்டு கப்பல்களிலுமே பயணிகள் + பணியாளர்கள் மொத்தம் 2000 பேர்கள் இருந்தனர். நாவலில் 24 உயிர்க்காப்புப் படகுகளும், நிஜத்தில் 20 படகுகளும் இருந்தன! இரண்டிற்கும் உள்ள ஒற்றுமைகளையும் கொஞ்சம் குறைய இருந்த வேற்றுமைகளையும் கவனித்தீர்களா? இது எப்படி சாத்தியமாயிற்று? கதை எப்படி நிஜமானது?

வார்த்தைகளால்தான் என்பது உங்களுக்குச் சொல்லாமலேயே புரிந்திருக்கும். ஏனென்றால் தொடர்ச்சியாகச் சீரான வேகத்தில் விதைகள் புத்தகங்களை வாசித்து வருபவர்கள் சத்தியத்திற்குள் வளர்ந்திருப்பீர்கள், பிரகாசமுள்ள மனக்கண்களை பெற்றிருப்பீர்கள், உணர்வும் தெளிவும் ஆவியில் உண்டாயிருக்கும். அதனால் இனிமேல் எதை எழுதினாலும் புரியும்! நாம் பேசுகிற வார்த்தைகள்தான் அப்படியே நடக்கிறது, சரி; ஆனால் நாவலில் உள்ள வார்த்தைகள் நிஜமாக அப்படியே நடந்தது எப்படி? இதையும் எளிதாகவே நாம் நிதானிக்கலாம். நாவல்கள் ஒவ்வொன்றும் மனிதர்களால் வாசிக்கப்படுகின்றன, மனதுக்குள், அல்லது வாய்விட்டு, அல்லது மிக சிறிதளவிலான வாய் அசைவின் மூலம். அது மட்டுமல்ல உலகளவில் பிரசித்தி பெறும் நாவல் என்பதால் பெருமளவில் விற்பனையாகி பரவியிருக்கும்... மொழி பெயர்ப்புகள் கூட செய்யப்பட்டிருக்கலாம். கல்விக்கூடங்களில் துணைப்பாட நூலாக இருந்திருக்கலாம். எப்படியாகிலும் நாவலின் வார்த்தைகள் ஜனங்களின் வாய்வழிப் பேச்சாக வெளிப்படுவதற்கு எத்தனையோ சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. விழுந்த விதைகள் 14 வருஷங்களின் முடிவில் விளைச்சலாக வெளிப்பட்டது.

உதாரணத்திற்காக, வார்த்தைகளின் வல்லமை எப்படிப்பட்டது என்பதை விளக்கவே இந்த சம்பவத்தைக் கொடுத்திருக்கிறேன். உலகத்தோற்றமுதல் இதுநாள்வரையிலும் பூமியின் மீது நடக்கும் இதைப் போன்ற அல்லது இதைவிட மோசமான சகல கேடுபாடுகளுக்கும் காரணம்; அவைகள் இந்தப் பூமியின் மீது நடப்பதற்கு முன்பாகவே மனிதர்களால் பேசப்படுவதால்தான். எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் யோசிக்காமல் பேசிக்கொண்டே இருக்கிறோம். இது பழகிப்போன நடைமுறை வழக்கமாகிப்போனதால் அதன் விபரீதம் புரியாமல் வார்த்தைகளோடு விளையாடிக்கொண்டிருக்கிறோம். பூனை என்று நினைத்துக் கொண்டு புலியுடன் விளையாடிக்கொண்டிருக்கிறோம். "நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய். நீதி 6:2."

நம் வாயின் வார்த்தைகளே நம்மைச்சுற்றி ஒரு சுவர் எழுப்பி, வாசல் கதவுகளையும் பூட்டி, சாவியை இடுப்பில் சொருகிக் கொள்கிறது! நாம் பேசும் வார்த்தைகள் நம்மையே overtake பண்ணும் வல்லமை வாய்ந்தது. வார்த்தைகள் நம் மனதில் இருக்கும் வரைக்கும் தான் அதற்கு நாம் எஜமான். வார்த்தைகள் வெளியேறியதும் நமக்கு அது எஜமான். அது தேவசித்தத்தை இந்தப் பூமியில் செய்வதற்கேதுவான நல்ல வார்த்தையாக இருந்தாலும் சரி; சாத்தானின் மன விருப்பத்தை பூமியில் முளைப்பிப்பதற்கேதுவான மோசமான வார்த்தைகளாக இருந்தாலும் சரி, அவைகள் நம்மை ஆள ஆரம்பிக்கின்றன, ஆட்டிப்படைக்கின்றன. நல்ல வார்த்தைகள் தேவ சித்தத்தின்படியான நல்வாழ்க்கைக்குள்ளாகவும், தீமையான வார்த்தைகள் நம்மைத்

திசைமாறச் செய்து, திக்குத்தெரியாத காட்டிற்குள் நடத்திக்கொண்டு போகிறது என்பதைப் பார்த்து வருகிறோம்.

வார்த்தைகளைக் குறித்து இந்த அளவுக்கு அழுத்தமாக திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டு வருவதற்கு காரணம் இல்லாமலில்லை. தேவன் இந்தப் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும் தன்னுடைய வார்த்தையால் நிர்மாணித்துள்ளார். இதை ஆதி. 1 ஆம் அதிகாரத்தை வாசித்தால் புரியும். தேவன் சகலத்தையும் தன்னுடைய வார்த்தையால் உருவாக்கிவிட்டு; அதை மேற்பார்வையிடும் போது அது மிகவும் நன்றாக இருந்தது **(it was found very good).** அவருடைய வார்த்தையால் தான் நாமும் அவரைப்போலவே உருவாக்கப்பட்டிருக்கிறோம். அதனால் அவருடைய வாயிலிருந்து வருகிற வார்த்தைகளைப் போலவே நம்முடைய வார்த்தைகளும் வல்லமையாகச் செயல்படும் ஆற்றல் மிகுந்தவை. அதனால் நாம் எதைப் பேசுகிறோமோ அது நடக்கிறது. ஆனால் இங்கே முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால்; நாம் தேவனுடைய வார்த்தைகளை எடுத்துப் பேசினால்தான் பூமியின் மீது அவருக்குச் சித்தமான நல்ல காரியங்கள் நடக்கும். ஆதி. 2-ஆம் அதிகாரம் வரையிலும் ஆதாமும் ஏவாளும் இவ்விதமாகத்தான் தேவனுடைய வார்த்தைகளைப் பேசி வந்தார்கள். பூமியும் தேவன் உருவாக்கிய அதே சூழ்நிலையில் இருந்து வந்தது. 3-ஆம் அதிகாரத்திலிருந்து சாத்தானால் திரித்து விடப்பட்ட வார்த்தைகளைப் பேச ஆரம்பித்தார்கள். அதாவது அதே வார்த்தைகளை எதிர்மறையாகப் பேச ஆரம்பித்தார்கள். விளைவு? பூமியானது எதிர்மறையான காரியங்களான பயம், பொய், குற்றம் சாட்டுதல், பாவங்கள், வியாதிகள், தரித்திரம், என்ற சாபகரமானக் காரியங்களைப் பூமியின் மீது முளைப்பித்தது. இது சாத்தானுக்கு மிகவும் லாபகரமாகிப்போனது. இப்போதிருக்கும் பூமி? **it's tooooooooooooooooooo bad!**

இந்தப் பூமியை ஆதியில் இருந்தது போலவே மிக நன்றாக மாற்ற முடியுமா? அது சாத்தியமானதுதானா? ஏன் முடியாது? நிச்சயமாக முடியும். தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை, அவரைப் போலவே நாம் இருப்பதால் நம்மால் கூடாத காரியமும் ஒன்றுமில்லை. (மத். 17:20) அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும், நாம் சொன்னாலும் ஆகும், நாம் கட்டளையிட்டாலும் நிற்கும். (சங். 33:9) அவரைப்போலவே நாமும் பயங்கர பராக்கிரமசாலிகள்; அப்பாவுக்குப் பிள்ளையாகத் தப்பாமல் பிறந்திருக்கிறோம்! நம்மால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ? இல்லை என்கிறோம் ஆணித்தரமாக! நீ உன் கோலை ஓங்கி .. சமுத்திரத்தைப் பிளந்துவிடு .. (யாத். 14:16) என்று தேவன் மோசேயை நோக்கி, மிகச் சாதாரணமாக சொல்லிவிடுகிறார்! மனிதன் தன்னைப்போலவேயிருப்பதால், தான் செய்கிற காரியங்களை, தான் உருவாக்கின மனிதனாலும் செய்ய முடியும் என்பது அவருக்குத் தெரிந்திருப்பதால் இவ்விதமாக சொல்லுகிறார்! (சங். 74:15). தேவன் சொன்னதைக் கேட்டதும் மோசேக்கு தூக்கிவாரி போட்டது, கடலையாவது பிளப்பதாவது என்று அதிர்ச்சியடைந்திருப்பான். அவனுடைய மூளை **freeze** ஆகி சில்லிட்டுப் போயிருக்கும்! மோசேக்கு தன்னுடைய வல்லமை தெரியவில்லை. அதனால் தான் தேவனிடம் முறையிடுகிறான். தேவனோடு தனித்திருக்கும் ஜெப வேளையில் தேவன் மோசேக்கு அவன் யார் என்பதையும், அவனால் என்ன செய்ய முடியும் என்பதையும் விளக்கிக் காட்டுகிறார்.

தேவன் மோசேயிடம் என்ன பேசியிருப்பார்?: "நீ என்னைப் போலிருக்கிறாய், உன்னால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும். பூமிக்கு நீதான் அதிகாரி, அதனால் நீதான் கடலை பிளந்து மக்களை அழைத்துக்கொண்டு போகவேண்டும்... இந்தச் சின்ன வேலைக்கெல்லாம் நான் மெனக்கெட்டு வந்துகொண்டிருக்க முடியுமா? என்னிடம் வந்து அழுகிறாயே!" என்று சொல்லியிருப்பார் என்பதை வசனங்களை வாசிக்கும்போது நிதானிக்க முடியும். "அப்போது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு. உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தை பிளந்துவிடு, அப்போது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள். (யாத். 14: 15, 16)."

இதைவிட பயங்கரமான காரியத்தைச் செய்த யோசுவாவுக்கும் தன்னுடைய வல்லமை தெரியவில்லை. கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின்மேலும், தரித்து நில்லுங்கள் என்றான். யோசுவா. 10:12. எவ்வளவு பெரிய மகத்தான பிரமாண்டமான, நினைத்துப்பார்க்க முடியாத, நம்பமுடியாத, மூளையறிவுக்கு எட்டாத காரியமாக இருந்தாலும் சரி, தேவன் அதை இந்தப் பூமியின் மேலே தானே செய்துவிடுவதில்லை. எதுவானாலும் அதைத் தன்னைப் போலவே இருக்கும் மனிதனைக் கொண்டுதான் செய்ய வைக்கிறார், பின்னாலிருந்து செய்து முடிக்கிறார் என்று பார்க்கிறோம்.

இரண்டுபேருமே தங்களுக்குள் இருக்கும் வல்லமையை ஜெபவேளையில்தான் புரிந்துகொள்ளுகிறார்கள். மோசே தேவனிடம் போய் முறையிடும்போது; தேவன் கடலை பிளக்கச் சொல்கிறார். யோசுவா தேவனிடம் பேசும் போது; சூரியனையும் சந்திரனையும் தங்களுடைய ஓட்டத்தை நிறுத்தும்படி சொல்லுகிறார். பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களின் கதையே இப்படி இருக்க, நாம் அதைவிட பெரிய காரியங்களையல்லவா செய்திருக்க வேண்டும்? செங்கடலை விடுங்கள், ஒரு மரத்தை பிளக்கவே கோடாரியைத் தேடுகிறோம். துரத்திக் கொண்டுவரும் நாயை பார்த்து தரித்து "நில்" என்று சொல்ல வாய்வராத தொடை நடுங்கிகளாக இருக்கிறோமே!

"முடியாமல் போன" பழைய உடன்படிக்கைக்காரர்களே இதையெல்லாம் செய்திருப்பார்களானால்: முடித்துக்காட்டுகிற புதிய உடன்படிக்கைக்காரர்களாகிய நாம் எதையெல்லாமோ செய்திருக்கலாமே! நெம்புகோல் விதியை கண்டுபிடித்த Archimedis என்பவர், இன்னொரு புவிக்கோளம் இருக்குமானால் அங்கே நின்று கொண்டு நெம்புகோலால் பூமியைத் தூக்கி விடுவேன் என்றார்! தேவனை அறியாத ஒரு மனிதனின் சிந்தனைக்கு இந்த அளவுக்கு வலிமை இருக்குமானால் ... நாம் அதிகமல்லவா? செங்கடலைப் பிளந்தவரை துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது என்ற பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்கிறோமே! நம்முடைய சாதனைகள் பாடலாகப் போவது எப்போது?

பழைய ஏற்பாட்டின், பழைய உடன்படிக்கையின் ஜெபம் இந்த அளவில் சாதனை படைத்தது என்றால், புதிய உடன்படிக்கையின் standard-ஆன ஜெப அனுபவத்தை பெற்றிருக்கும் நாம் தேவனிடமிருந்து மகத்தான செயல்திட்டங்களைப் (action plans-ஐ) பெற்றுக்கொள்ள முடியும். தனி அறைக்குள் போய், கதவை மூடிக்கொண்டு, முழங்கால்படியிட்டு, 1 மணி நேரம், கண்ணீரோடு ஜெபித்தால்தான் பதில் கிடைக்கும் என்ற நிலை மாறி; எப்போதும், 24 மணிநேரமும் தேவனோடு ஜெப நடையில் இருக்கும் நம்முடைய ஜெப அனுபவம் எந்த அளவில் இருக்கிறது?

ஆவியான தேவன் மண்ணான மனிதனின் மூலமாக ஊடுருவிச் சென்று பூமியில் தன்னுடைய சித்தத்தை நிறைவேற்ற ஜெபம் பேருதவியாக இருக்கிறது. நம்முடைய blueprint-ஐ (சூத்திரம், வரைபடம், எண்ணம், மாதிரி) தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள அதுவே மிகவும் ஏற்ற நேரம். நம்மைக் குறித்த தேவனுடைய திட்டத்தைப் பெற்றுக் கொள்ளாதவரை நம்முடைய ஓட்டம் ஒரு வெறுமையான, ஒன்றுக்கும் உதவாத, ஓட்டமாகத்தான் இருக்கும். கண்மண் தெரியாமல் ஓடி, முட்டி, மண்டை உடையும் வரை யாருக்கும் அறிவு வருவதும் இல்லை. சாபம் விழுந்துபோன இந்த பூமி வெளிப்படுத்தும் பயங்கரங்களில் இதுவும் ஒன்று.

சாப இயக்கமும், அது உருவாக மூல காரணமாக இருந்த சாத்தானும், துரத்தோ துரத்து என்று நம்மைத் துரத்தியதால் இன்று இந்த சத்தியத்திற்குள் வந்திருக்கிறோம். அதற்காக இதெல்லாம் தேவனுடைய சித்தம் என்று நினைக்கக்கூடாது. தேவன் அனுமதித்திருக்கிறார் என்றுகூட நினைக்கக்கூடாது. தேவன் நல்லவர், நன்மையை மாத்திரம்தான் செய்கிறார், நன்மையானதையல்லாமல் வேறெதையும் அவரால் செய்ய முடியாது, அவர் செய்ய முயற்சிப்பதும் இல்லை. அவர் நன்மையின் ஊற்று, இனிப்பான தண்ணீர் மாத்திரமே அதிலே சுரக்கும், உவர்ப்பான தண்ணீராக மாற சந்தர்ப்பமே இல்லை.

நாம் ஜெபிக்கும்போது நம்மைக் குறித்ததான Formula-வை தேவனிடத்திலிருந்து, பெற்றுக் கொள்கிறோம். சூத்திரத்தின்படி போடப்படும் கணக்கின் விடை நிச்சயம் சரியானதாகவே இருக்கும். நாமும் அப்படித்தான், Principle-ன்படி போனால் தேவ சித்தத்தை நிறைவேற்றுபவர்களாக மாறுவோம். பூமியின் சாபத்தைச் செயலிழக்க வைக்கும் வல்லவர்களாக மாறுவோம்.

நாம் ஜெபிக்கும்போது தேவன் நம்மைக் குறித்ததான ஒரு Chart- ஐத் தயாரித்துத் தருகிறார். கப்பல் ஓட்டும் மாலுமிகள், கண்டிப்பாக தாங்கள் செலுத்தும் கப்பலின் எல்லைக்குறிகள் அடங்கிய Marine map-ஐ வைத்திருப்பார்கள். அந்த வரைபடம் அவர்கள் திசைமாறி தவறான பாதையில் தப்பிப்போய்விடாதபடி அவர்களை நடத்தும். ஒரு சிறிய சுக்கானால் கப்பலோட்டி சரியான திசைக்கு கப்பலை திருப்பி, அந்த மகா பெரிய கப்பலை சரியான இடத்திற்கு கொண்டுபோய்விடுகிறான். (யாக். 3:4) நம் நாவைக்குறித்து நாம் மிக நிதானமாக இருப்போமானால் சரியான இலக்கை அடைவோம், ஓட்டமும் ஜெயமாக இருக்கும், நம்முடைய ஓட்டப்பாதையில் தேவ சித்தம் நிறைவேறி இருப்பதைப் பார்க்க முடியும். மீண்டும் ஏதேனைப் பார்க்க முடியும். கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார், ... அதன் வனாந்திரத்தை ஏதேனைப் போலவும், .. கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார். சந்தோஷமும், மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும். ஏசா. 51:3. நாக்கு போகும் பாதையிலே மனிதனும் போகிறான்; அது பேசும் வார்த்தைகள்

போலவே மனிதனும் ஆகிறான்!

ஜெப வேளையில் நம்மைக்குறித்த தேவனுடைய **Design** (எண்ணம்) வெளிப்படுகிறது, அது நன்மையானவைகளே என்று வேதம் சொல்லுகிறது. அதைத் தெரிந்துக்கொண்டு, பரிசுத்தாவியானவருடன் கைகோர்த்து ஆவிக்குரிய மண்டலங்களில் நாம் நடக்க ஆரம்பிப்போம். பரிசுத்தாவியானவர் உன்னதங்களில் நமக்கென்று வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷங்களை காண்பிப்பார். பிறகென்ன நம்மால் கூடாத காரியம் எதுவுமே இருக்காது. ஜெபிக்கும்போது நமக்கு தேவன் செய்திருக்கும் **Framework (layout, Outline)** காண்பிக்கிறார். அதனால் வேலையை முடிப்பது நமக்கு எளிதாகிவிடுகின்றது. ஜெப நேரத்தில் நாம் பின்தொடர வேண்டிய ஒரு **(Pattern)** மாதிரியைக் காட்டுகிறார். முதலாவது நம் ஆண்டவராகிய இயேசுவை எடுத்துக்கொள்ளலாம். ... நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். 1 பேதுரு. 2:21. அடுத்ததாக பவுலை மாதிரியாகக் கவனிக்கலாம். சகோதரரே, நீங்கள் என்னோடுகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். பிலி. 3:17 இயேசுவும், பவுலும் போதித்த புதிய உடன்படிக்கையின் சத்தியத்தில் நடந்து வெற்றி பெற்றவர்களின் கால்தடங்களைக் கவனித்து, அதன்மேல் கால் வைத்துப் போகலாம். மிக முக்கியமான கட்டம் என்னவென்றால்; நாமே மாதிரிகளாக மாறுவதுதான். நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, தீத்து. 2:7. உன்னத ஆசீர்வாதங்களைச் சுதந்தரிக்க தீவிரப்படுவோம். அதுதான் நாம் அறிவிக்கும் சுவிசேஷத்தை கௌரவப்படுத்தும். நம்முடைய சாபம் நிறைந்த, கண்ணீர் கதைகளுடன் கூடிய சுவிசேஷம், தேவனுடைய நாமத்தை பரிசுத்தக்குலைச்சலாக்குவதுடன், விசுவாசிகளையும் பின்வாங்க வைக்கும். ஏகத்தாளமான ஏளனப்பார்வைகளும், அசட்டுச்சிரிப்புடன் கூடிய சில தேவையில்லாத வார்த்தைகளும்தான் அவர்களிடமிருந்து பதிலாகக் கிடைக்கும். ஆசீர்வாதம் இல்லாத நம்முடைய அற்பமான, ஏழ்மையான தோற்றம் நம் தேவனை கேவலப்படுத்துகிறது என்பதே அதிர்ச்சிதரும் உண்மை! அப்படியானால் உடனடியாக ஆசீர்வதிக்கப்பட வேண்டும், அதற்கு என்ன செய்வது?

உன்னத ஆசீர்வாதங்களுக்கு நேராக நம் தரிசனக் **Camera**-வை **Focus** செய்து நிறுத்துவோம், அங்கும் இங்கும் அசைக்கப்படாமல் பார்த்துக்கொண்டே இருப்போம். வெளிப்படும் **Photographs** நிச்சயம் வந்தே தீரும். “குறித்தகாலத்துக்குத் **(an appointed time)** தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், **(it shall speak)** அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும்; அது தாமதிப்பதில்லை. ஆப. 2:3”

காலமெல்லாம் ஜெபித்துக் கொண்டுதான் இருக்கிறோம். எதையெல்லாமோ ஜெபக்குறிப்பு வைத்து மணிக்கணக்காக, உபவாசித்து, அழுது ஜெபிக்கிறோம். ஏன்? எதற்கு? என்ன? எப்படி? என்னவாயிற்று? எதுவும் புரிவதில்லை, புரியாமலேயே வாழ்க்கையும் முடிந்து போய்விட்டது. புரியும்படி சொல்கிறோம்: ஜெபத்தில் நாம் **aim** பண்ணுவது ஒன்றே ஒன்றுதான். நாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும், நன்றாக இருக்க வேண்டும் என்பது மாத்திரம்தான். இதைத் தவிர வேறெதையும் மனித வாழ்க்கைக்கென்று தேவன் உருவாக்கவில்லை. அப்படி உண்டாகியிருக்குமானால் அவையெல்லாம் தேவனால் உண்டானதல்ல, அவைகளெல்லாம் சாத்தானால், சாபத்தால், உலகத்தால், உங்களால் உண்டானதுதான்! செய்யறதையெல்லாம் செய்துவிட்டு, பழியைத் தூக்கி ஆண்டவர் மேல் போட்டுவிடும் பழக்கம் நேற்றைக்கு இன்றைக்கு உண்டானதல்ல, அது உலகத் தோற்றமுதலே ஆரம்பமாகிவிட்டது! “அதற்கு ஆதாம்: என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரீயானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேன் என்றான். (ஆதி. 3:12)” கவனியுங்கள் ஆதாம் தேவனைக் குற்றம்சாட்டுவதை! “நீர் தந்த பெண்தான் அந்த பழத்தை எனக்குக் கொடுத்தாள்” என்றான்!

தேவபிள்ளைகள் பொருளாதார ஆசீர்வாதத்தில் தன்னிறைவு பெற்றாலன்றி; தேவ சித்தத்தை பூமியில் ஸ்தாபிக்க முடியாது. “நீர் மாத்திரம் போதும்” என்ற பாடல் வரிகளை அர்த்தம் தெரியாமல் பாடுறார்கள். இந்தப் பூமியில் உம்மைத் தவிர வேறெதுவும் வேண்டாம் என்ற பொருள் பதிய பாடுகிறார்கள். உண்மைதான் தேவன் மாத்திரம் நமக்குப் போதும், அவருடைய வார்த்தையாகிய இயேசுவும், ஆவியாகிய பரிசுத்தாவியானவரும் இதில் உள்ளடங்குகிறார்கள். வார்த்தையாகிய இயேசுவுக்குள் எல்லாம் உண்டு... தேவனுக்குள்தான் எல்லாம் உண்டே? அதனால் இயேசு கிடைத்தாலே அவருக்குள் இருக்கும் சகல உன்னத ஆசீர்வாதங்களும் நமக்குத்தான்!

கடையிலே தேங்காய் வாங்கி வருகிறோம், நம் குறி செரட்டைதானா? இல்லவேயில்லை! அதற்குள் இருக்கும் வெள்ளையான பருப்பும், தண்ணீரும் தான் நம் குறி! அதைத் துருவி, மிக்சியில் அரைத்து, தேங்காய் சட்டினியாக்கி, அதில் இட்லியைத் தொட்டுச் சாப்பிட வேண்டும் என்பதுதான் நம்முடைய திட்டம்.

சும்மா வெறும் செரட்டை போதும் என்று டபாய்க்க வேண்டாம்; இதையெல்லாம் காதுல பூவை சுத்திக்கொண்டிருப்பவர்களிடம் போய் சொல்லுங்கள்! மனிதன் என்றாலே முன்னேறுபவன்தான்; வாழ்க்கை என்றாலே ஜெயிப்பதற்காகத்தான். தேவன் நம்மை அப்படித்தான் உருவாக்கியிருக்கிறார், அதுதான் **Principle**, அதை மாற்றவே முடியாது.

எல்லாம் பேசுவதற்கு நன்றாகத்தான் இருக்கிறது, இங்கே கஞ்சிக்கே வழியைக் காணோம், ஐசுவரியவான்களாவது சாத்தியமா? உண்மைதான்... குடிப்பது கஞ்சியாக இருந்தாலும், இன்னும் காணாத உலகத்தில் பிரியாணி வாசனை! இருப்பது குடிசையில்... நினைவிலோ அரண்மனை! உடுத்தியிருப்பது கந்தல், எதிர்பார்த்திருப்பது பொற்சரிகை வஸ்திரத்தை! கனவில் தங்கம், ஆனால் இரும்பே அனுபவமாகிப்போனது. பரவாயில்லை, நடந்தது நடந்துவிட்டது கடந்ததை மறந்துவிடுவோம். இங்கே நான் சொல்ல வருவது என்னவென்றால்; நாம் கண்களால் காணும் இந்த உலகத்தின் காரியம் நிச்சயமல்ல, கண்காணாத அந்த உலகத்தின் காரியங்களே நிச்சயம்! ஏனென்றால் கண்காணா அந்த உலகத்தில் (பரலோகத்தில்) இருந்துதான் இந்த உலகம் உண்டானது. உருவான ஒன்றை விட, அதை உருவாக்கிய ஒன்று அதிக முக்கியமானது, நிச்சயமானது, நிஜமானது. இதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது.

விஷயம் இப்படியிருந்தாலும், நம் கண்கள் காண்கிறவைகளை அதிக நிச்சயமாக நினைக்கிறோமே, ஏன்? "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2 கொரி. 4:4." அவிசுவாசம்தான் காரணம் என்று பார்க்கிறோம். சாத்தானால் குருடாக்கப்பட்ட மனக்கண்களை (உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள்) உடைய ஒவ்வொருவரும் அவிசுவாசிகள்தான் என்று பார்க்கிறோம். குருடான கண்களால் எதையும் பார்க்க முடியாது. அதனால் அவர்களால் எதைப் பார்க்க முடிகிறதோ அதை விசுவாசிக்கிறார்கள்; எவற்றை பார்க்க முடிவதில்லையோ, அவைகளை விசுவாசிக்காமலுமிருக்கிறார்கள். இன்னும் புரியும்படி சொல்கிறேன்: அவர்களுடைய ஆவிக்குரிய கண்களால் பார்க்க முடியாததால்; காணக்கூடாத ஆசீர்வாதங்களை அவர்களால் பார்க்கமுடிவதில்லை, அதனால் விசுவாசிப்பதில்லை. பூமிக்குரிய கூடாரமாகிய சரீரக்கண்கள் பார்க்கக்கூடியவையாக இருப்பதால்; அதனால் பார்க்கக்கூடியவற்றை மட்டும் விசுவாசிக்கிறார்கள்,

எதைப் பார்க்க முடிகிறதோ, அதை விசுவாசிக்கிறார்கள். எதை விசுவாசிக்கிறார்களோ அதையே பேசவும் செய்கிறார்கள். எதைப் பேசுகிறார்களோ அது நடந்தும் விடுகிறது. எது நடக்கிறதோ அதன் போக்கில் போகப் பழகியும் கொள்கிறார்கள். மாம்ச கண்களினால் காண்பவைகளை மாத்திரம் பார்த்து முடிவெடுப்பவர்களின் வாழ்க்கை ஏன் திக்குத்தெரியாத காட்டுக்குள் இருக்கிற பாழடைந்த கட்டிடத்திற்குள் போய் முடிந்தது என்பது இப்போது விளங்கியிருக்கும். மனது எங்கேயோ அங்கே மனிதனும் போகிறான். ஏதேனில் நம் ஆதி தகப்பன் போட்ட அந்தத் தவறான பாதைதான் இன்று வரை நீண்டு கொண்டே வந்திருக்கிறது. அதன்வழியே நாம் ...

மனிதனின் வாழ்க்கை இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு தேவன் ஏற்படுத்தியிருந்த **formula**-ஐ மாற்றிச் சொல்லி ஏவாளை ஏமாற்றினான் சாத்தான். ஏமாளி ஏவாளுடன் சேர்ந்து கோமாளியான ஆதாம் தவறான சூத்திரத்தை உபயோகித்துக் கணக்குப் போட்டான்... எல்லாம் தப்புக்கணக்காகிப் போனது! ஆதாமுக்கு அடுத்த தலைமுறை அந்த தப்புக் கணக்கோடு, தங்கள் கணக்கையும் கூட்டி தப்போ தப்புக் கணக்குப் போட்டார்கள்! பூமியில் பாவம் பெருக ஆரம்பித்தது.

தவறான மனிதர்கள் நம்மிடம் வந்து பேசும் போது, தவறானதைப் புரிந்து கொள்ளுகிறோம். ஏனென்றால் அவர்கள் தவறானவைகளைப் பேசுவதால்! தவறானவற்றை புரிந்து கொண்ட நாம் அவற்றை சரியானவை என்று நினைத்து, அந்த வழியிலேயே சென்று விடுகிறோம். தவறான வழி நிச்சயமாக சரியான இடத்துக்கு நடத்தாது, அதனால் நடத்தவும் முடியாது, அதனால் தவறான இடத்திற்கே நடத்திவிடுகிறது. அதனால் தவறான இடத்திற்கு வந்துவிடுகிறோம். அங்கே நிச்சயமாக தவறான காரியங்கள்தான் இருக்கும், அவற்றைச் சரியானவையாக நினைத்து எடுத்துக் கொள்கிறோம், அனுபவிக்கிறோம். தவறாக உள்வாங்கப்பட்ட காரியங்கள் விதையாக முளைக்க ஆரம்பிக்கிறது. நீர்க்கருவை செடியின் விதை நிச்சயமாக முட்செடியைத்தான் பிறப்பிக்கும், வேறு எதையும் முளைப்பிக்க அது நினைத்தாலும், முயன்றாலும் அது நடப்பதில்லை. விளைச்சலில் கிடைக்கிற எதுவானாலும் சரியென்று சாப்பிடுகிறோம், வேறு வழியில்லாமல்... அல்லது தெரியாமல்... கடைசியாக, தேவனைப் போல இருக்கும் ஒவ்வொரு மனிதனும் முட்செடிகளாக ... அந்தோ பரிதாபம்!

ஆதாம் ஏவாள் முதற்கொண்டு, இந்நாட்களில் பிறந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் (very last man) இந்தச் சோகக் கதைதான் அரங்கேறி வருகிறது. இந்த தொடர்கதையை முடிக்க, முற்றும் போட எத்தனையோ எழுத்தாளர்கள் முயற்சி எடுத்தார்கள். முயற்சிகள் சிறிதளவான வெற்றியுடன் முடிந்து போனது. நிரந்தர முற்றுப்புள்ளி வைத்து, பரிபூரண வெற்றியைச் சுதந்தரிக்க, இதோ நாங்கள் வந்து கொண்டிருக்கிறோம்! நீங்கள் நினைப்பது போல நாங்கள் ஒன்றிரண்டு பேர் அல்ல, பெரும் கூட்டத்தார்! சிவப்பு கண்ணாடியை கழட்டிவிட்டு, பச்சைக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு பாருங்கள், எங்களை அடையாளம் தெரியும்!

முதலாம் ஆதாம் செய்த இந்தப் பெரிய தவறைத் திருத்தி, சரிசெய்து, மீண்டும் சரியான formula பூமியின் மீது இயங்க வைப்பதுதான் தேவனுடைய திட்டம், அந்த திட்டம்தான் இயேசு, அவர்தான் இரண்டாம் ஆதாம். அவருக்குள்ளாக இருக்கும் நமக்குள், அவரை வைத்திருக்கும் நாம் எல்லோரும் இரண்டாம் ஆதாம்கள், இரண்டாம் ஏவாள்கள்! இயேசு நமக்குள் இருந்து இயக்கம் கொடுப்பதால், நிச்சயமாகவே நாம் தேவ சித்தத்தை இந்தப் பூமியில் நிறைவேற்றியே தீருவோம், அல்லேலூயா! "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் (will and to do) உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். பிலி. 2:13" தேவன் நமக்குச் சிந்தனையைத் தருகிறார், அதையே நாம் பேச வேண்டும்.

தேவன் இந்த பூமியில் என்னன்னவெல்லாம் நடக்க வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறாரோ, விருப்பப்படுகிறாரோ அதையே நம் நாவில் எடுத்துப் பேச வேண்டும். சாத்தானும் தன் கைவசம் ஏகப்பட்டத் திட்டங்களை வைத்திருக்கிறான், அதையெல்லாம் எடுத்துத் தீர்க்கத்தரிசனமாக பேசக்கூடாது. சமீபத்தில் ஒரு ஊழியக்காரர் தீர்க்கத்தரிசனம் சொன்ன காட்சியை தொலைக்காட்சியில் பார்க்க நேர்ந்தது... உண்மையில் அது ஒரு தொல்லைக்காட்சியாகவே இருந்தது. இன்னும் சில வாரங்களுக்குள் குறிப்பிட்ட ஒரு தேசத்தில் புயல் வரும் என்றார். சில மாதங்களில் பல தேசங்களில் கொள்ளை நோய்களின் தாக்கம் இருக்கும் என்றார். ஒரு வருஷத்திற்குள் பூமியில் பல தேசங்கள் இருக்கிற இடமே தெரியாமல் காணாமல் போய்விடும் என்றார்!

ஐயோ பரிதாபமே! சாத்தானுடைய திட்டங்களை இப்படி பூமியின் மேல் தீர்க்கத்தரிசனமாக சொல்லவா தேவன் இவர்களை வேலைக்கு வைத்திருக்கிறார்? அப்படிச் சொன்னால் அவனுடைய திட்டமல்லவா நிறைவேறும்? அன்பான ஊழியக்காரரே, நிறுத்துங்கள் உங்கள் தீர்க்கத்தரிசனத்தை! நீங்கள் தீர்க்கத்தரிசனம் சொல்லவில்லை என்று யாரும் இங்கே அழவில்லை, ஏங்கவுமில்லை, எதிர்பார்க்கவும் இல்லை. இதெல்லாவற்றையும் இந்த பூமியில் நடத்தவேண்டும் என்று சாத்தான் திட்டம் போட்டிருப்பது எங்களுக்கென்ன தெரியாமலா இருக்கிறது? "சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு, ... அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. 2 கொரி. 2:11" சாத்தானுடைய சதித்திட்டங்களையெல்லாம் பேசிப்பேசி இந்தப் பூமியைக் கெடுக்கவா தேவன் உங்களையும் என்னையும் ஸ்தானாதிபதிகளாக இந்த பூமியில் வைத்தார்? இதற்காகவா ஆளுகையையும் அதிகாரத்தையும் தந்தார்? பூமியின் சாபத்தை அதிகமாக்குவதற்கு ஏதுவாக தீர்க்கதரிசனம் என்ற பெயரில் சாத்தானின் ஆலோசனைகளை பேசுபவர்களே, அந்த வார்த்தைகள் உங்களையும் பாதிக்குமே? தீர்க்கத்தரிசனம் சொல்லும் நீங்களும் இந்த பூமியில்தான் இருக்கின்றீர்கள்... நடக்கும் கேடான காரியங்கள் எதுவும் உங்களை மட்டும் தாண்டிக்குதித்துச் செல்லாது... முதலில் உங்களைத்தான் குறி வைக்கும்!

இல்லை பிரியமானவர்களே, வாயின் வார்த்தைகளால் கெடுக்கப்பட்ட இந்தப் பூமியை நல்ல பூமியாக மாற்றும்படிக்கே நம்மை இங்கே வைத்திருக்கிறார். நம்மை வெட்டி முறிக்கச் சொல்லவில்லை... வானத்தை வில்லாக வளைக்கவும் சொல்லவில்லை... நல்லதாக நாலு வார்த்தை பேசுங்கள் என்கிறார். இதுகூட முடியவில்லையென்றால்? இதுவரையிலும் பூமியில் பேசப்பட்ட சாபம் வெளிப்படுவதற்கேதுவான வார்த்தைகளை இயேசுவின் நாமத்தில் அழிப்போம். அறியாமையினால் ஜனங்களால் பேசப்பட்ட சாப வார்த்தைகளான விதைகளையும், அவற்றின் விளைச்சலையும் இயேசுவின் நாமத்தினால் அழிக்கிறேன் என்று கட்டளையிடுங்கள். நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அதிகாரத்தை உபயோகப்படுத்துவோம். உறைக்குள் இருக்கும் வரைக்கும் வாளினால் எந்த பிரயோஜனமும் இருக்கப்போவதில்லை, உருவுவோம்! நம் பட்டயத்தை...

இந்தப் பூமியின் மீது இருக்கிற மக்களை வாதிக்கின்ற ஒவ்வொரு வியாதிக்கும் ஒவ்வொரு பெயர் (நாமம்) உண்டு. (ஜலதோஷம், புற்றுநோய், எய்ட்ஸ், ...) அந்த நாமங்களுக்கெல்லாம் மேலான நாமம் இயேசுவின் நாமம்! சுகத்தை தருகிற நாமம். பூமியின் ஜனங்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும்

ஒவ்வொரு பாவத்திற்கும் ஒரு நாமம் உண்டு (காமவிகாரம், கோபம், கெட்ட வார்த்தைகள்...) இந்த நாமங்களையெல்லாம் அழிக்கும் வல்லமையுள்ள நாமம் இயேசுவின் நாமம்... விடுதலை தருகிறது. சாபத்தினால் பூமி வெளிப்படுத்திக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பிரச்சனைகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு நாமமுண்டு (இயற்கை சீற்றங்கள், சுனாமி, வன்முறைகள், ...) தரித்திரத்தாக்குதல்களுக்கும் ஒவ்வொரு நாமமுண்டு (ஏழ்மை, கடன், வெற்று மணிபர்ஸ், பொருளாதார வீழ்ச்சி, பஞ்சம், பசி, பட்டினிச் சாவுகள்) இவைகள் எல்லாவற்றையும் மேற்கொள்ளும் வல்லமையுள்ள நாமம் இயேசுவின் நாமம். "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலி. 2:11"

அதனால் நாம் பேசும்போது, இயேசுவின் நாமத்தினாலே பேச வேண்டும். பிரச்சனை எதுவானாலும் அது இயேசுவின் நாமத்தை விட கீழானது என்பதால்; அவற்றை இயேசுவின் நாமம் அழித்துவிடும், அல்லது மாற்றிவிடும், அல்லது பதிலுக்கு நல்லதைச் செய்துவிடும்! தேசமே, (பூமியில் இருக்கிற 250க்கும் மேற்பட்ட தேசங்களே) "பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். யோவே. 2:21" என்று தீர்க்கதரிசனம் சொல்லுங்கள். அன்று சொன்னதை இன்று தேவன் செய்தும் விட்டார்.

நம்மை தேவன் இராஜாக்களாக வைத்திருக்கிறார்... ஆளுபவர்களாக இருக்கிறோம். அதிகாரம் நம் கையில்... அதை வார்த்தை மூலமாக வெளியேற்றுவோம். ராஜாவின் வார்த்தைகளுக்கு அதிகாரம் உண்டு, அந்த வார்த்தைகளின்படிதான் தேசங்களின் மீது காரியங்கள் செய்யப்பட வேண்டும். புதியதோர் உலகம் செய்வோம், கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம் என்றான் ஒரு தேவனை அறியாத, ஆனால் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட ஒரு மனிதன்! நல்ல சிந்தனைதான், ஆனால் சிந்தனையைத் தந்த தேவனை அறியாததினால், அவருடன் கைகோர்க்காததினால், தனியாக செயல்பட்டதால் புதிய உலகத்தை உருவாக்க முடியாமல் போனது. பகுத்தறிவாளர்களுக்கும், சிந்தனையாளர்களுக்கும், அறிவுஜீவிகளுக்கும் குறைவில்லாத பூமி இது. தேவனுடைய சித்தத்தை இந்தப் பூமியில் நிறைவேற்ற முடியாமல் அவர்களுடைய வார்த்தைகள் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் தங்கள் வல்லமையை முடக்கிக்கொண்டன. (இயேசுவை அவர்கள் அறியாததினால்...)

தேவன் அவரைப் போலவே நம்மை உருவாக்கி, அவருடைய வல்லமையை (சக்தி - power) நமக்குத் தந்துவிட்டார். அப்படியிருக்க ஏன் நாம் அவரைப்போல் தனியாக, அவருடைய ஒத்துழைப்பு இல்லாமல் செயல்பட முடியாது? உலக மனிதர்கள் அவ்விதம் முயற்சிப்பதில் என்ன தவறு? அவர்களால் ஏன் வெற்றி பெற முடியாமல் போகிறது? தேவனை அறியாத உலக மனிதர்கள்தான் பெருமளவில் புத்திசாலிகளாக, சாதனையாளர்களாக, நல்லவர்களாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான் என்பதை நாங்கள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட சமாச்சாரம்தான். அவர்களுடைய சிருஷ்டிகரின் குணாதிசயம் அவர்களுக்குள்ளாக கடந்து வருவதனால் அவர்கள் அவ்விதம் இருக்கிறார்கள். ஆனால் மனிதர்கள் செயல்படும் நேரங்களில் மட்டும் தேவனுடைய ஆற்றல், உதவி உள்ளே வர அனுமதிப்பதில்லை. அதனால்தான் அவர்களின் வெற்றி முழுமை பெறாமல், அரைகுறை வெற்றியாக, சில நேரங்களில் தோல்வியிலும் முடிகிறது.

நியூட்டனின் "செயல், எதிர்செயல் விதி" யைப் போல இதுவும் சற்று குழப்பமானதுதான்; என்றாலும் புதியஉடன்படிக்கை வாசிகளுக்கு பரிசுத்தாவியானவர் புரிய வைப்பார். "ஒவ்வொரு செயலுக்கும் அதற்குச் சமானமாதும், நேர் எதிரானதுமாகிய எதிர்ச்செயல் ஒன்று எப்போதும் இருப்பதாக" இவ்விதி கூறுகிறது. இந்த விதியை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர், என்றாலும் ஒரு பிரச்சனை. இயங்காமல் நிலையாக இருக்கும் பொருளுக்கும் இவ்விதி பொருந்தக்கூடியதே என்றால் ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டுகிறார்கள். ஒரு மாட்டு வண்டியை எடுத்துக்கொள்வோம். மாடு வண்டியை இழுக்கும்போது; வண்டியும் அதே விசையுடன் மாட்டை இழுப்பதாக ஆகிறது! இது உண்மையானால் வண்டி இருந்த இடத்திலேயே இருக்க வேண்டும் இல்லையா? ஆனால் அது நகருகிறதே? விசைகள் சமமாக இருந்தும் அவை ஏன் ஒன்றையொன்று ரத்து செய்து கொள்வதில்லை?

கேள்வி நியாயமானதுதான். விசைகள் சமமானதாக இருந்தாலும், அவை ஒரே விதமான செயலைச் செய்வதில்லை. ஒரு பொருளின் மீது விசையினால் ஏற்படும் செயல் அப்பொருளையும், எதிர்செய-ன் மதிப்பையும் பொருத்தது. வண்டியின் மீது செயல்படும் விசையும், மாட்டின் மீது செயல்படும் விசையும் சமமாக இருந்தாலும்; வண்டியின் சக்கரம் தடையின்றி உருளும்படி வடிவமைக்கப்பட்டிருப்பதினாலும், மாடு வேகமாக முன்னோக்கி நடக்கும் அல்லது ஓடும் ஆற்றலைப் பெற்றிருப்பதினாலும், மாடு இழுக்கும் திசையில் வண்டி உருண்டு ஓடுகிறது.

வண்டியின் செயலுக்கு மாடு எதிர்ச்செயல் புரியாவிட்டால்; கொஞ்சம் தள்ளிவிட்டாலே வண்டி தானாகவே ஓடிக்கொண்டே இருக்கும்! அப்படி ஓடினால் மாடே தேவையில்லையே, வசதியாகப்போய்விட்டதே! மாடு வாங்கும் செலவு, அதற்கான தீவனச் செலவு, பராமரிப்புச் செலவு மிச்சமாகுமே, நல்ல ஐடியாதான்! இருங்க, ஒரு நிமிஷம், மாடில்லாத ஒரு மாட்டுவண்டி ரோட்டில் ஓடுமானால் என்னவாகும்? வண்டிக்கு திசை, வழி எதுவும் தெரியாது, ஊர் போய் சேராது, முள்ளுக்காட்டிற்குள் பாய்ந்து மரத்தில் முட்டிக் கொண்டு நிற்கும். எத்தனை வருஷமானாலும் அங்கேயேதான் நிற்கும். யாரும் பார்க்காவிட்டால் கால ஓட்டத்தில் இயற்கை தாக்கங்களால் அது அழிக்கப்பட்டுப் போகும். வண்டியின் எதிர்ச்செயலை தொடர்ந்து சமாளிக்கவே மாடு தேவைப்படுகிறது.

தேவனை அறியாத உலக மனிதர்களின் செயல்பாடும், தேவனை அறிந்தும், சத்தியத்தை சரிவர அறியாமல் இன்னும் நியாயப்பிரமாண முயற்சிகளில் வாழும் விசுவாசியின் செயல்பாடுகளும், இப்படித்தான் இருக்கின்றன. அவர்கள் மாடு தேவையில்லை என்கிறார்கள், வண்டியை உருட்டிவிட்டுப் பார்த்தார்கள், இழுத்துப் பார்த்தார்கள், எதுவும் நடக்கவில்லை, வண்டி நின்ற இடத்திலேயேதான் நின்று கொண்டிருக்கிறது. உலக ஜனங்களின், சத்தியம் அறியாத விசுவாசிகளின் முயற்சிகள் பெருமளவில் வெற்றி பெற்றாலும், அவர்கள் தேவனைச் சார்ந்திராததினால் அவர்களால் பூமியின் சாபத்தை மாற்றி, புதியதோர் உலகத்தை செய்ய முடியாமல் போயிற்று. தங்களில் இயற்கையாகவே அமைந்திருக்கும் தேவனுடைய குணாதிசயங்களை, ஞானத்தை, ஆற்றலை, அன்பை, நம்பிக்கையை உபயோகித்து சாதனை படைக்க எழும்பினார்கள், முன்னேறினார்கள். சாபம் முட்டுக்கட்டைப் போட்டது, சாத்தானும் கெடுத்தான், வெற்றி மிகச் சிறய அளவிலான இலக்கை அடைந்து நின்று போனது.

புதிய உடன்படிக்கைக்குள் வந்திருக்கும் நாமோ இயேசுவுடன் இணைந்து கொண்டோம். வண்டியில் மாட்டைப் பூட்டிக்கொண்டோம். வெறும் கட்டைகளால், இரும்பு சக்கரங்களால் ஆன உயிரில்லாத வண்டி, மாட்டினால் உயிரோட்டம் பெற்றது! முன்னோக்கி ஓட ஆரம்பித்தது, ஜெயத்தைப் பெற்றுக்கொண்டது! தேவன் ஒருவர்தான்... சத்திய தேவனை ஏற்றுக் கொள்வோம். அதுமட்டும் போதாது அவரைக்குறித்த அறிவில் வளருவோம்... சத்தியத்தை ஏற்றுக் கொள்வோம். பிறகென்ன நாம்தாம் ஜெயிப்போம். அதற்குப் பிறகு பாருங்கள், உலக ஜனங்கள் நம்மை ஏளனப்பார்வை பார்க்க முடியாது, கிண்டலடிக்கவும் முடியாது, கிசுகிசுக்கவும் முடியாது. எல்லாவற்றிலும் நாம்தான் **first** ஆக, **First-class** ஆக, **First'hand** ஆக, **First'rate** ஆக வருவோம், **Top place**-ல் இருப்போம், **Chief** ஆவோம். எல்லாவற்றிற்கும் மேலாக **beginning** ஆவோம்! எப்படி? **"In the beginning ... Gen. 1:1"** அதாவது ஆதியிலே தேவன் அஸ்திபாரப்படுத்தின அந்த குறைவில்லாத பூமியாக இந்த பூமியை மாற்றிக் காண்பிப்போம். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். எப்படி சிருஷ்டித்தார்? வாயின் வார்த்தைகளால்!

தேவன் மனிதனை அவனாகவே இந்த பூமியில் தோன்றி, வாழ்ந்து, முடிவு பெறும்படியான அமைப்புடன் உருவாக்கவில்லை. ஒரு மனிதனை இந்த பூமிக்குள் கொண்டுவரவேண்டுமானால் அதற்கென்று ஒரு பெற்றோர், ஒரு கருவறை தேவையாக இருக்கிறது. இதெல்லாம் தேவையில்லையென்று ஒரு மனிதன் வானத்திலிருந்து குதிக்க முடியாது. குழந்தையாக அவன் வயிற்றுக்குள் வளரும் 9 மாதங்கள் 9 நாட்கள் வரையிலும் அதன் வளர்ச்சிக்குத் தேவையான உணவு தொப்புள்கொடி மூலமாக செலுத்தப்படுகிறது. உணவு தேவையில்லை என்று அந்த கரு அதை நிராகரிக்க முடியாது. பிறக்கும்போதும் ஒரு மருத்துவக்குழு, தேவையான உதவிகள் ... பிறந்த பிறகு தாயின் பராமரிப்பு, பால், ... தொடர்ந்து அதன் சீரான வளர்ச்சிக்கான தொடர் கவனிப்புகள், கரிசனை+ அன்போடு கூடிய அரவணைப்புகள் என்று போகிறது. 5 வயதானதும் இனிமேல் யாருடைய உதவியும் எனக்குத் தேவையில்லை என்று ஒதுங்கிவிட முடியாது. அவனுடைய வளர்ச்சிக்கேற்ற மனிதர்களின் தொடர்பு, ஆசிரியர்கள், நண்பர்கள், உலக மனிதர்கள் ... 25 வயதில் மனைவி, குழந்தைகள், ... 45 வயதில் அடுத்த தலைமுறை உறவுகள் ... 75 வயதில் வயோதிகம், தளர்ச்சி, படுக்கையில் ... உதவிகள். சரி, ஒரு வழியாக கதை முடிகிறது, இனிமேலாவது யார் உதவியும் இல்லாமல் போய்ச் சேரலாம் என்றால் முடிகிறதா? இல்லை! தூக்கிச் சொல்ல 4 பேர், அடக்கம் செய்ய மண்வெட்டியுடன் சிலர், அடுத்ததாக கல்லரைக் கட்டும் வேலை. கவனியுங்கள் மனிதனின் துவக்கம் முதல் முடிவு வரை எந்தக் காலகட்டத்திலாவது அவன் அடுத்தவரின் உதவியில்லாமல் எதையாவது செய்ய முடிந்ததா? வாழ முடிந்ததா? இல்லை, மனிதனின் வாழ்க்கை என்றால் அது இப்படித்தான் என்று தேவன் திட்டமிட்டுவிட்டார், அது ஒரு **Principle.** (மனித வாழ்க்கையின் சட்டம்) அதன்படிதான் வாழ்ந்தாக வேண்டும், வேறு வழியில்லை.

உலக வாழ்க்கையே இப்படி இருக்கும்போது; இந்த பூமியையும் அதன் நிறைவையும் தன் வார்த்தைகளால் நிர்மாணித்து, வார்த்தைகளால் அதை தாங்கி வருகிற தேவனுடைய தொடர்பு

வைத்துக்கொள்ளாமல் தனியாக செயல்படலாம் என்று மனிதன் நினைப்பது எப்படி? அதற்கான சாத்தியமே இல்லையே! "… அவருக்குள் (இயேசுவுக்குள்) சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும் சகலமும்; அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. கொலோ. 1:16." "அவனன்றி ஒரு அணுவும் அசையாது" என்று உலகத்தானுக்கே தெரிகிறது! இறைவன் தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான் என்ற உணர்வு இயற்கையாகவே அவனுக்குள் இருக்கிறது!

நாம் இந்த பூமியில் நன்றாக வாழ்ந்து, செழித்து, வெற்றியடைந்து, தேவனுடைய சித்தத்தை பரிபூரணமாக நிறைவேற்றிவிட்டுச் செல்லவேண்டுமானால் அதற்கு முற்றும் முடிய தேவனுடைய அருகாமை, ஆலோசனை, கண்காணிப்பு, உதவி, உந்துதல், வழிநடத்தல், எல்லாமே தேவை. அவருடன் இணைந்து, அவருக்குள் இருந்து, அவரை நமக்குள் இருக்க வைத்து, அவரை நம்மை சூழ்ந்து கொள்ள இடமளித்தால்தான் இதெல்லாம் சாத்தியமாகும்.

தொடக்கத்தில் தேவனைப் போலவே சிருஷ்டிக்கப்பட்டு, அவருடன் நடந்த மனிதன்; பிசாசினால் பிரிக்கப்பட்டபோது சாபத்துக்குள் உருண்டான். சுமார் 6500 (பூமியின் வயதை வேதத்தின் அடிப்படையில் கணக்கிட்டால் **max. 8000** வருஷங்களைத் தாண்டாது) வருஷகாலமாக மனுக்குலம் பூமியின் சாபத்தால் + சாத்தானால் அந்தக்கேடடைந்தாலும் அது பெற்றிருக்கும் வெற்றி அபாரமானது. இன்னும் மனுக்குலம் அழியாமல் இருப்பதே மிகப் பெரிய சாதனை. மனிதனின் அறிவுசார்ந்த வளர்ச்சி வேகம், விஞ்ஞான கண்டுபிடிப்புகள், விண்வெளி ஆராய்ச்சிகள் விழியைப் பிதுங்க வைக்கின்றன. தேவனைச் சரிவர அறிந்துகொள்ளாமல், ஏற்றுக்கொள்ளாமல், அவருடன் கைகோர்க்காமலேயே இந்த அளவுக்கு வந்திருப்பானானால் … அவருடன் இணைந்து கொண்டானானால் நிலைமை என்னமாயிருக்கும்! ஜீவ விருட்சம் முளைத்ததைப் போலிருக்குமல்லவா? "… விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும். நீதி. 13:12"

மனுக்குலம் தேவனை அறிய ஜெபிப்போம். மானுடம் தேவனை நிச்சயமாக அறிந்து கொள்ளும் என்று அறிக்கையிடுவோம். அப்படி அறிக்கையிடும்போது அந்த வார்த்தைகள் நிஜமாகி பின்வரும் வசனம் பூமியின் மீது நிறைவேறும். "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஆப. 2:14"

நாம் அவரைப்போலிருக்கிறோம், அதனால் நாமும் அவரைப்போலவே செயல்படுவோம், அவருடைய வசனங்களை பேசி! தனியாக அல்ல தேவனோடு இணைந்து! இரகசியத்தை அம்பலமாக்கிவிட்டோம்! "நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் … ஏசா. 66:22" புதிய பூமியைப் பற்றி தீர்க்கதரிசனம் இருக்கிறது கவனியுங்கள்! வார்த்தைகளின்படி நிச்சயமாக புதிய பூமி உருவாகுமா? கண்டிப்பாக, "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்திய வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின சமுத்திரமும் இல்லாமற்போயிற்று. வெளி. 21:1" நம்மையும், நம் வாயின் வார்த்தைகளையும் உபயோகித்து, தேவன் புதிய பூமியையும், வானத்தையும் உருவாக்குவார், அல்லேலூயா!

இதையெல்லாம் நான் செய்ய முடியுமா? நானா? என்று கேள்வி கேட்க தோன்றும், யோசுவா அப்படித்தான் கேள்வி கேட்டான். "ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது, என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான். அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன்… ஒரே மனுஷனை முறியஅடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். நியாயாதி. 6: 15, 16" தேவன் தன்னுடைய சித்தத்தைச் செய்ய நம்மைத் தனியே விட்டுவிடவில்லை, நம்மோடுதான் இருக்கிறார். அவர் நமக்குள் இருப்பதால் நாம் சாதனையாளர்களாக இருப்பது பெரிய விஷயமே இல்லை. இதில் ஆச்சரியப்படுவதற்கும் எதுவும் இல்லை. ஏனென்றால் நாம் தேவனைப் போல் இருக்கிறோம்.

வேதம் நம்மை தேவர்கள் என்றே அழைக்கிறது! (சங். 82:6). நாம் தேவனைப்போல செயல்படுவது இருக்கட்டும், குறைந்தபட்சம் மனுஷனாக செயல்படுவதற்கே திக்கித் திணறுகிறோம். அதையாவது சகிக்கலாம்… ஆனால் முடிவில் மிருகங்களைப் போலாகும் பரிதாப நிலைதான் சகிக்கவே முடியாத சாபத்தின் உச்சக்கட்டமாகிப்போனது. "நான் காரியம் அறியாத மூடனானேன்; உமக்கு முன்பாக மிருகம் போலிருந்தேன். சங். 73:22." சாபத்தின் வலியால் எண்ணிலடங்காத தாவீதுக்கள் இப்படியாக புலம்பினார்கள், இன்றளவும் புலம்பி வருகிறார்கள்.

நோவா காலத்தில் தண்ணீர் பூமியைத் தாக்கியபோது நிலைகுலைந்த பூமி $23^1/_2$ டிகிரி சாய்ந்தது போல, ஆண்டாண்டு காலமாக பூமியின் சாபம், சாத்தான், நம்முடைய பிரகாசமிழந்த மனக்கண்கள், அதனால் வந்த அறியாமையின் தாக்குதலால் நாமும் நிலைகுலைந்து தரம் தாழ்ந்து போனோம். நம் மனதின் சிந்தனைகள் எத்தனை டிகிரியோ அதே அளவில் நம் பேச்சும் மாறினது, அப்படியே நம் வாழ்க்கையும் மாறிப்போனது. 3 யோவான். 1:2. விதைகள் புத்தகத்தின் இந்த 10-ஆவது பகுதியை முடிக்கும் முன்னதாகவாவது புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

நம் தேவன் நல்லவர்; விவரிக்க முடியாத அளவுக்கு நல்லவர். மிகவும் நன்றாக இருந்த பரலோகத்தில் இருந்து தேவையான உபகரணங்களை எடுத்து (வார்த்தைகள்) இந்தப் பூமியை உருவாக்கினார். பரலோகத்தை போல மிக மிக நன்றாக, மாசுமறு இல்லாத பூமியாக உருவாக்கினார். பரலோகம் ஆவியாக மாம்ச கண்களுக்கு தெரியாத அளவில் இருக்கிறது. பூமி அதே போல; ஆனால் மாம்ச கண்களால் காணும் அளவில் இருக்கிறது. பெரிய அளவில் வித்தியாசம் எதுவுமில்லை. இந்த பூமி எனக்குச் சொந்தமில்லை, பரலோகம் போனால் போதும் என்று கையை விரித்தபடி வாழ்க்கையின் முடிவைத் தேடிப் போய்க்கொண்டிருக்கும் விசுவாசிகளே, தேவஜனங்களே, அவருடைய சொந்த பிள்ளைகளே, கேளுங்கள்! அப்படி என்ன அவசரம்? அங்கே போய் யாரைப் பார்க்கப் போகிறீர்கள்? பரலோகத்தின் அதிபதியே இங்கேதான் இருக்கிறார்! நமக்குள்ளேதான் இருக்கிறார்!

"... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். கொலோ. 1:27." உங்களுக்குள் இருக்கும் இயேசுவைத் தேடி பரலோகத்திற்கு ஓட வேண்டாம், அவர் உங்களுக்குள்தான் வாசம் செய்கிறார் என்ற இரகசியத்தை போட்டு உடைக்கிறோம். பரலோகத்திற்குப் போக வேண்டாம் என்று சொல்லவில்லை, அதற்கு முன்னதாக ஒரு முக்கிய வேலையை இயேசு நமக்கு இங்கே கொடுத்திருக்கிறார், அதை முதலில் செய்து முடிப்போம். அது என்ன வேலை? இந்தப் பூமியை நமக்குச் சொந்தமாக்க வேண்டும்! "... நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, ... ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். ஆதி. 1:28." தேவன் சொன்னபடியே பலுகிப் பெருகி பூமியை நிரப்பினார்கள் மனிதர்கள் ... ஆனால் அதை கீழ்ப்படுத்தி ஆண்டுகொள்ளும் விஷயத்தில் கோட்டை விட்டார்கள். அதனால் பூமி மனிதர்களைக் கீழ்ப்படுத்தி ஆண்டுகொண்டது. இந்த வசனத்தின் முதல் பகுதியை நிறைவேற்றுவதில் மனிதனுக்கு சிரமம் ஏதும் இருக்கவில்லை; ஏனென்றால் மனிதனின் பிறப்பு ஒரு **principle** படி தானாக நடைபெறுகிறது. ஆனால் வசனத்தின் இரண்டாவது பகுதியை நிறைவேற்ற தேவனைக் குறித்த அறிவு தேவைப்படுகிறது. தேவனைக் குறித்த அறிவு நாளடைவில் மனிதனிடம் குறைய ஆரம்பித்ததால்; முடிவில் பூஜ்ஜியமாகிப் போனதால், பூமியை கீழ்ப்படுத்துவதற்குப் பதிலாக பூமிக்கு கீழாகப் போய்விட்டான். தேவனை அறிந்து கொள்ளாததினால் இது நடக்கவில்லை, தேவனைத் தவறாக அறிந்து கொண்டதால் இது நடந்தது. தவறான சூத்திரத்தை ஏற்படுத்தினான், அதை வைத்துக் கணக்குப் போட்டான். தவறான விடை வந்தது, ஆனால் அதை சரியானது என்று நினைத்துக் கொண்டான். அதனால் அதே **formula**-ஐ உபயோகித்து அடுத்தவர்களுக்கும் கணக்கு கற்றுக் கொடுத்தான். உலகம் அவனை நல்ல கணக்கு வாத்தியார் என்று மெச்சிக் கொண்டது, அவார்டும் கொடுத்தது, ஆனால் தேவனோ?

## இடியாப்ப சிக்கல் எடுக்கப்பட்டது!:

மிகவும் சிக்கலாகிப்போன இந்தப் பிரச்சனையைத் தீர்க்க, தேவன் தன்னுடைய வார்த்தையை அனுப்பினார். 4000 வருஷகாலமான அந்த வார்த்தைகள் தீர்க்கதரிசிகளின் வாயினாலே முன்னுரைக்கப்பட்டு, உச்சரிக்கப்பட்டு, அறிக்கையிடப்பட்டு ... முடிவில் இயேசுவாக உருவெடுத்தது. மண்ணான மனிதர்களின் பிரச்சனைகளைத் தீர்க்க, இயேசுவையும் அதே மண்ணுருவாக பூமிக்கு அனுப்பினார். தேவனே நேரில் வந்து பூமியின் சாபத்தை மாற்றி எல்லோரையும் பரிசுத்தப்படுத்தி பரலோகத்திற்கு கொண்டுபோயிருக்கலாமே, ஏன் இவ்வளவு கஷ்டம்? உண்மைதான், செய்யலாம்தான், ஆனால் அது சாத்தியமில்லை. ஏன்? ஏனென்றால் தேவன் ஆவியாயிருக்கிறார், அதனால் ஆவியான அவரால் பூலோகத்தில் கிரியை நடப்பிக்க முடியாது. மண்ணான பூமியில் அவர் கிரியை நடப்பிக்க வேண்டுமானால்; அதற்கு மண்ணின் சாயலை தரித்துக் கொண்டால்தான் சாத்தியமாகும். அதுமட்டுமல்ல, ஆவியான தேவனுக்கும், மாம்சமான மனிதனுக்கும் இடையில் விழுந்துபோன இடைவெளியைச் சரிசெய்து, மீண்டும் ஒன்றாக இணைய வைக்கவும் வேண்டும். அதற்காகக் கிரியை நடப்பிக்க வேண்டிய ஒரு நபர் தேவனாகவும் இருக்க வேண்டும். அதே நேரத்தில் மனிதனாகவும் இருக்க வேண்டும்... அப்போதுதான் அதுவும் சாத்தியமாகும்! என்ன புரிகிறதா?

தேவனுடைய ஆழங்களை அறிந்து, அதை மனிதனுக்கு அறிவித்து, அதே நேரம் மனிதனின் காரியங்களை தேவனிடத்திற்குக் கொண்டு போய், பிரச்சனையை சரி செய்ய வேண்டிய நபர் தேவன்+மனிதன் இரண்டும் சேர்ந்த கலவையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் தேவன் நினைத்த காரியத்தை பூமியின் மேல் செய்து முடிக்க முடியும். அதனால் தேவன் மனிதனாக வந்தார், தேவ குமாரன் மனுஷ குமாரனாக வந்தார்! தன்னைப் போலிருக்கும் மனிதனை மீட்க அவனைப் போலானார் தேவன் இயேசு! தன்னுடைய மகிமையை இழந்த மனுஷனுக்கு அதை மீண்டும் மீட்டுக் கொடுப்பதற்காகத் தன்னுடைய மகிமையைத் துறந்து; மனுக்குலத்தின் சாபத்தைத் தரித்துக்கொண்டார்!

மனிதனின் தரத்தை உயர்த்த, தன்னுடைய தரத்தைத் தாழ்த்தினார். மனிதனுக்கு மேன்மையை கொடுக்க தன்னை அடிமைப்படுத்தினார். மனிதனின் பாவத்தைப் போக்க, தானே பாவமானார். மனுக்குலம் சுகம் பெற அவர் வியாதிகளைச் சுமந்தார். முதலாம் ஆதாம் தவறவிட்ட பூமியையும், அதன் ஆசீர்வாதங்களையும் திரும்ப சாத்தானிடமிருந்து பறித்துக் கொள்வதற்கு மீண்டும் ஆதாம் தான் வர வேண்டும். ஆனால் அது சாத்தியமில்லை, காரணம் அவன் மரித்துப் போனான். வேறொரு ஆதாமை எழுப்பவும் முடியாது, ஏனென்றால் முதலாம் ஆதாமைப் போல பாவமில்லாத பரிசுத்தவான் பூமியில் யாருமில்லை. (ஆதாம் தேவனின் வார்த்தையை மீறும் வரைக்கும் பரிசுத்தவானாக, தேவனைப் போலவே இருந்தான்). பூமியின் சாபக்கறை பிடித்த வேறு ஒரு மனிதனை ஆதாமுக்குப் பதிலாக எழுப்பி சாத்தானிடமிருந்து பூமியை பிடுங்கவும் முடியாது. ஏனென்றால் இயேசுவுக்கு முன்னதானக் காலகட்டத்தில் பாவமில்லாத, சாபமில்லாத மனிதன் யாருமே இல்லை. சாத்தான் ஜெயிக்கப்படாத அந்த காலத்தில், அப்படியொரு மனிதனை எழுப்பவும் முடியாது. அதனால் சாத்தானிடமிருந்து பூமியைத் திரும்ப வாங்க எல்லாவிதத்திலும் தகுதிபெற்ற இயேசு மனிதனாக எழும்பினார், பிதாவாக தேவன் எழும்பப்பண்ணினார். ஏதேனில் ஆதாம் தவறவிட்ட பூமியையும் அதன் நிறைவான ஆளுகையையும் சிலுவையில் திருப்பிக் கொண்டார் இயேசு!

அதனால் நாம் மீண்டுமாக ஆதாம் ஏதேனில் தேவனுடன் நடந்தது போலவே நாமும் நடக்கக்கூடிய சாத்தியமான சூழ்நிலையைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த இரகசியம் யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்பதே மனுக்குலத்துக்கு எதிரான சாத்தானின் முதல் நோக்கமாகும். மனிதர்களின் மனக்கண்களை குருடாக்கி அவர்கள் இயேசுவிடம் வந்துவிடாதபடி தடுப்பது அவனுடைய முதல்கட்ட நடவடிக்கை. விசுவாசிகளின் உள்ளான மனிதக்கண்களை குருடாக்கி, அவர்களுக்கு சுவிசேஷத்தின் இரகசியத்தை மறைத்துவிடுவது அவனுடைய இரண்டாவது கட்ட நடவடிக்கை. இரகசியம் தெரிந்த தேவபிள்ளைகளின் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போட்டு அவர்களை திசைதிருப்புவது அவனது மூன்றாவது கட்ட நடவடிக்கை. இப்படியாக அவன் கட்டம் போட்டுக்கொண்டே போகிறான், அதில் சதுரங்கமும் ஆடுகிறான்.

## Check!:

இப்படியாக அவன் முழு உலகத்தையும் மோசம் போக்கிவிட்டான். அவனிடம் சிக்கிச் சீரழியாதவர்கள் ஒருவரும் இல்லையென்பதை வெட்கத்தோடும் வேதனையோடும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியதாயிருக்கிறது. கோடானுகோடிபேர் அவனிடம் தோல்வியை ஒத்துக்கொண்டு கடந்து போய்விட்டார்கள். போனது போகட்டும்... இயேசு வந்து அவனுடைய முகத்திரையை கிழித்து, அவன் வண்டவாளத்தை தண்டவாளத்தின்மேல் ஏற்றிய பிறகும் அவன் நம்மை ஏமாற்ற இடம் கொடுத்துக்கொண்டே இருப்போமானால் இதைவிட வெட்கக்கேடு எதுவும் இருக்க முடியாது. விதைகள் புத்தகங்களின் மூலமாக தேவனுடைய இரகசியங்களையும், நம்மைப் பற்றின இரகசியங்களையும், சாத்தானைப் பற்றிய இரகசியங்களையும் வெட்டவெளிச்சமாக்கிக் கொண்டிருக்கிறோம். சாத்தான் தன் பதிவிடத்தில் போடும் திட்டங்களையெல்லாம் வீட்டின் கூரையின்மேல் ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கிறோம். "வெளியரங்கமாகாத இரகசியமுமில்லை அறியப்பட்டு வெளிக்குவராத மறைபொருளுமில்லை. லூக். 8:17." பரிசுத்தாவியானவருடன் ஆவிக்குரிய மண்டலங்களில் உலாவி, பூமியின் தாழ்விடங்களில் மூழ்கி பெற்றுக்கொண்ட வெளிப்பாடுகளையெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறேன். பொழுதுபோகவில்லை என்பதனால் ஏதோ வாசித்து வைப்போம் என்பதற்காக அல்ல, மார்க் போடுவதற்காகவும் அல்ல. நீங்கள் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக வெளிப்படுத்துகிறோம். இனிமேலும் இந்த பூமியை சாத்தான் மோசம்போக்காதபடி அவனுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். அவன் நம்முடைய ஆசீர்வாதங்களுக்கு வைத்திருக்கும் முற்றுப்புள்ளிகளை அழிப்போம்!

ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்பதற்கேதுவாக நம் கால்களில் தீவிரம் உண்டாகட்டும். நம் அதிகாரத்தை கையில் எடுப்போம். எந்த அதிகாரத்தை? வார்த்தைகளின் அதிகாரத்தைத்தான்! "மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியை புசிப்பார்கள். நீதி. 18:21." நம்

வார்த்தைகளினால் நாம் இழந்த ஏதேனின் ஆசீர்வாதங்களை திருப்பிக்கொள்ளலாம், நித்திய ஜீவனையும் பெறலாம்.

வார்த்தைகளின் வல்லமையையும், வார்த்தைகளை உபயோகித்து நம்முடைய சுகவாழ்க்கையைச் சிருஷ்டித்துக் கொள்ள நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையும், நம்முடைய சுதந்திரத்தையும், உரிமைகளையும், ஆசீர்வாதப்பட்டியலையும் பார்த்தோம். தொடர்ச்சியாக வேதத்தின் இரகசியங்களை, ஆழங்களை, சத்தியங்களை, வெளிப்பாடுகளை எழுதி இந்தப் பூமியை மீண்டுமாக $23^{1}/_{2}$ டிகிரி நேராக்க, மிக நன்றாக இருந்தது என்ற வார்தையின்படி மாற்ற, ஜலத்திரையை உருவாக்க, ஏதேனை வட்டணிக்க, ஜீவவிருட்சத்தை நாட்ட தேவன் தாமே உதவி செய்வாராக, ஆமேன்.

"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்கு சமானம். நீதி. 25:11" (A word fitly spoken is like apples of gold in pictures of silver.) சுவிசேஷத்திற்குத் தடைவிதிக்காத, மதம் சாராத கட்சி மீண்டுமாக ஆட்சியை பிடித்திருப்பது; இந்தியாவில் தேவசித்தம் நிறைவேறுவதற்கான ஒரு நல்ல சாத்தியக்கூறு. இந்தியாவில் சுவிசேஷத்திற்கு திறந்தவாசல்கள் ஆயிரமாயிரமாக இருக்கின்றன, சந்தோஷமான விஷயம்தான். ஆனால் சுவிசேஷத்தின் இரகசியங்களை அறிவிக்கிற இந்த ஊழியத்திற்கான திறந்த வாசல்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் இருக்கிறது. எந்த மனிதனாக இருந்தாலும் சரி, (அவன் ஒரு மனிதனாக இருக்க வேண்டியதைத் தவிர வேறு எந்த அடிப்படை தகுதியும் தேவையில்லை) அவனைப் பரலோகத்திற்குள் அழைத்துச் செல்லும் **எங்களுடைய இந்த பிரமாண்டமான ஊழியத்திற்கு ஆதரவு தர உங்களையும் அழைக்கிறோம். நம் ஓட்டு இயேசு ராஜாவுக்கே!**

"கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; ... பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது ... இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது; ... கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது .. அவைகள்... மிகுந்த பசும் பொன்னிலும் ... விரும்பப்படத்தக்கதும், ... தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. (சங் 19: 7-10)"

மீண்டும் விதைகள் பகுதி-11ல் சந்திப்போம். கர்த்தரின் கிருபை அனைவரோடும் கூட இருப்பதாக! (இல்லை கூடவே இருக்கிறது!)